# கிறிஸ்தவம் என்றால் என்ன ?

"....நீங்கள், உலகமெங்கும் போய்,
சர்வ சிருஷ்டிக்கும், சுவிசேஷத்தைப்
பிரசங்கியுங்கள்....." (மாற்கு 16:15)

*ஜோயல் ஸ்டீபன் வில்லியம்ஸ்*

**கிறிஸ்தவம் என்றால் என்ன ?**

**ஆசிரியர் : ஜோயல் ஸ்டீபன் வில்லியம்ஸ்**

**தமிழில் : வி. செ. இம்மானுவேல்**

**முதற்பதிப்பு : ஜீலை 2002**

***PRINTED & PUBLISHED BY***

***Dr. PETER SOLOMON D.D.,***

***58, Church Street, Kumaran Nagar,***

***Chennai - 600 082. INDIA***

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | கிறிஸ்தவம் என்றால் என்ன? | 1 |
| 2. | இரட்சிப்பின் அவசியம் | 3 |
| 3. | வானத்திலிருந்து வந்த இரட்சகர் | 9 |
| 4. | கிறிஸ்துவின் பிறப்பு | 12 |
| 5. | கிறிஸ்துவின் வாழ்க்கை | 16 |
| 6. | கிறிஸ்துவின் போதனைகள் | 21 |
| 7. | பாவமற்ற இயேசு கிறிஸ்து | 25 |
| 8. | பாவ நிவாரண பலி | 28 |
| 9. | இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் | 35 |
| 10. | கிருபையினால் இரட்சிக்கப்படுதல் | 39 |
| 11. | விசுவாசம் | 44 |
| 12. | மனந்திருந்துதல் | 47 |
| 13. | கீழ்ப்படிதல் | 50 |
| 14. | முழு சுதந்திரம் | 51 |
| 15. | ஞானஸ்நானம் | 55 |
| 16. | கிறிஸ்தவ வாழ்க்கை | 63 |
| 17. | சபை | 70 |
| 18. | ஊழியமும் சுவிசேஷ பணியும் | 79 |
| 19. | தொழுகை | 83 |
| 20. | எதிர்காலம் | 94 |
| 21. | கிறிஸ்தவம் | 102 |
| 22. | பரிசுத்த ஆவியானவரும் அற்புதங்களும் | 105 |
| 23. | பரிசுத்த வார்த்தைகள் | 109 |
| 24. | வேத புத்தகங்களின் கருத்து சுருக்கம் | 113 |
| | பழைய ஏற்பாடு புத்தகங்கள் | |
| | புதிய ஏற்பாடு புத்தகங்கள் | |
| 25. | முடிவுரை | 121 |

## PREFACE

*It gives me great honor to publish this book of Bro. J.S. Williams, well known brother and accepted servant of God among his people.*

*This book details the scriptural truths and basic principles on which his people are called to Christianity.*

*Today the world see a Christianity minus Christ' Authority! Therefore, I have chosen this small book, to bring it to our Tamil language, spoken about 85 million people, particularly to our* ***Bible Hour television correspondence course students as a course completed gift.***

*I pray, the Lord may be gracious to its readers to abide in the true teachings of Jesus Christ and exercise Godliness.*

*I also thank Bro. V.S. Immanuel for his best translation of this book and Bro. R. Jebakumar, the print promoter.*

*In the service of Christ' kingdom*

***Dr. Peter Solomon,*** ***D.D.***
*Academic President,*
*The National Bible College.*
*58, Church Street,*
*Kumaran Nagar*
*Chennai - 600 082*
*Date : 26.07.2002*

## கிறிஸ்தவம் என்றால் என்ன?
## What is Christianity?

இந்த புத்தகம் கிறிஸ்தவம் என்றால் என்ன**?** என்பதை எளிமையாக விளக்கவும், ஒருவன் கிறிஸ்தவனாக எப்படி மாற முடியும், மற்றும் எதை தீர்க்கமாக விசுவாசிப்பது, எப்படி கிறிஸ்தவனாக நடந்து கொள்வது என்பதை விளக்குவதற்காக எழுதப்பட்டுள்ளது. இதில் வாசிக்கப் போகும் கிறிஸ்தவத்தின் சத்தியங்கள் முதல் நூற்றாண்டு காலத்தில் அப்போஸ்தர்கள் போதித்தவைகளையே விளக்கும். கிறிஸ்தவத்தைப் பற்றி வேதம் என்ன சொல்கிறதோ அதை தெளிவாக எடுத்துக்காட்டி யிருக்கிறோம். பின்வரும் அதிகாரங்கள் 2000-ம் ஆண்டு கால கிறிஸ்தவத்தின் உண்மை தன்மையை எந்தவிதமான மனித பாரம்பரியங்களும் சேர்க்காமல் விளக்குவதாக இருக்கும். தற்போதைய பாரம்பரியங் கள் சில நல்ல நோக்கத்திற்காக பின்பற்றப்பட்டு வந்தாலும் அதில் அநேகம் நம்மை சத்தியத்தை விட்டு விலகி போக செய்கிறபடியால் நாம் அவைகளை தள்ளி விட வேண்டும்.

அநேகர் கிறிஸ்தவத்தை தவறாக புரிந்து கொண்டு குழப்பமான நிலையில் பாரம்பரியத்துக்கும், சத்தியத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் பார்க்கிறார் கள். நீங்களும்கூட சில தனிப்பட்ட மனிதர்களின்

தவறான நடத்தையாலும், சபைகளில் நல்ல உதாரண புருஷர்கள் உங்களுக்கு கிடைக்காததாலும் தவறான எண்ணங்கொண்ட நபராக இருக்கலாம். அப்படியானால் இந்த சிறிய புத்தகத்தை கவனமாக வாசியுங்கள். மெய்யான கிறிஸ்தவத்தின் உண்மை நிலையை புரிந்து கொள்ளுங்கள். தவறான சில மனிதர்களின் நடத்தையின்படி அல்ல, புதிய ஏற்பாட்டின்படி நிதானமாய், கிறிஸ்தவன் எப்படிப்பட்டவன், கிறிஸ்துவின் சபை எப்படியிருக்க வேண்டும் என்பதை புரிந்து கொள்வோம்.

தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள் ளும் அநேகர் பல காரணங்களின் நிமித்தமாக கிறிஸ்த வனாக வாழாமலும், போதியாமலும், முறையாக ஆராதனை செய்யாமலும் இருப்பார்கள். காரணம் அவர்கள் சத்தியத்தை அறியாமல் இருக்கலாம், அல்லது தவறான சத்தியத்தை கேட்டு அப்படியிருக்க லாம். மேலும் மாயமாலக்காரராகவும் நடக்கலாம். எல்லாரையும் போல தங்களுக்கு தெரிந்தவற்றில் மட்டும் தவறாக இருந்தாலும்! அதில் உண்மையுள்ள வர்களாக நடக்கலாம் சிலர் தவறாக நடப்பதாலே நீங்கள் கிறிஸ்துவை வெறுத்துவிடாதீர்கள். இயேசு கிறிஸ்துவை உற்றுப் பார்த்து கிறிஸ்தவத்தை மதிப் பிடுங்கள். இயேசு கிறிஸ்துவே கிறிஸ்தவத்தின் காரண ரும், ஸ்தாபகருமாவார். இப்படி நம்பினால் ஒருகாலும்



ஏமாற மாட்டீர்கள். அவர் பாவம் செய்யவில்லை அவரை பின்பற்றுகிறோம் என்று சொல்லியும் சிலர் தவறு செய்கிறார்கள்.

## இரட்சிப்பின் அவசியம்
## The Need for Salvation

கிறிஸ்தவ மார்க்கத்தை பின்பற்றுபவர்கள் கிறிஸ்தவர் கள் (அப் *11:26; 26:28; 1* பேது *4:16*) நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து பின்பற்றுகிறவனே கிறிஸ்தவன். ஒருவன் ஏன் கிறிஸ்தவனாக வேண்டும்? எல்லாருக்கும் பாவத்தில் இருந்து இரட்சிப்பு வேண்டும் என்பதே பதில். பாவத்தில் இருந்து இரட்சிப்பு அவசி யம் என்பதை புரிந்து கொள்வதற்கு முதலாவது தேவனுக்கு முன்பாக கணக்கொப்புவிக்க வேண்டிய பொறுப்பு மனிதர்களாகிய நமக்கு உண்டு என்று புரிந்து கொள்ள வேண்டும்.

எல்லா மனிதர்களும் மிருகங்களை விட உயர்ந்தவர் கள். காரணம் நமக்குள் ‘‘ஆவி’’ அல்லது ‘‘ஆத்துமா’’ இருக்கிறது. அதனால் நாம் ஆவிக்குரிய சிருஷ்டிகளாய் இருக்கிறோம். (அப் *7:59; 1* கொரி *2:11; 1* தெச *5:23;* யாக் *2:26)*

ஆதியிலே தேவன் சகலத்தையும் படைத்தார் (ஆதி *1:1*) ஆனால் மனிதனையோ, தம் சாயலாக

படைத்தார் (ஆதி *1:26, 27;* கொலோ *3:10;* யாக் *3:9).* அதாவது தேவன் மனிதனுக்கு சிந்தித்து தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தை கொடுத்து இருக்கிறார். ஆகையால் நாம் ஆவிக்குரியவைகளை புரிந்து கொண்டு உன்னதமான தேவனை விசுவாசிக்க முடிகிறது. நன்மை, தீமை, பாவம் செய்தவுடன் குற்ற உணர்வு, கனம், கனவீனம் இவைகளை எல்லாம் உணர முடிகிறது. தேவனுடைய தன்மையை அறிவதினால் தெய்வபயம் அடைய முடிகிறது. மேலும் உலகத்தில் எங்கும் மனிதருக்கென்றே உரிய செயலாகிய தேவனை ஆராதிப்பது, சாத்தியமாகிறது. அதோடு கூட பரிசுத்த தேவன் எதிர்பார்க்கிறபடி உத்தமமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடிகிறது. (மத் *5:48;* எபே *4:21, 23;* 1 பேது *1:14-16).*

ஒருமுறை பவுல் அத்தேனே பட்டணத்து ஜனங்களை மிகுந்த தேவ பக்தி உள்ளவர்கள் என்று பாராட்டி பேசினார் (அப் *7:22).* அவர்களிடத்தில் அநேக பலிபீடங்களும் தொழு கைக்குரிய பொருட்களும் வித்தியாசமான தேவர்களுக் கென்று இருந்தது. அவர்களோ எந்த ஒரு கடவுளையும் விட்டுவிடக்கூடாது என்பதற்காக ஒரு பலி பீடத்தை கட்டி அதின் மேல் ‘‘அறியப்படாத தேவனுக்கு’’ என்று எழுதியிருந்தார்கள் (அப் *17:23).* அங்கேதான் பவுல் மெய்யான தேவனை பற்றிய சத்தியத்தை அவர் களுக்கு



அறிவித்தார். அப்போஸ்தல நடபடிகள் *17:24-28* வாசித்து பாருங்கள்.

தேவன் நம்முடைய சிருஷ்டிகர் ஆகையால் நாம் அவருக்கு கணக்கொப்புவிக்க வேண்டும். (ஏசா *43:7;* வெளி *4:11).* தேவன் எல்லா மனுஷரையும் நீதியாய் நியாயந்தீர்க்கும்படி ஒரு நாளை குறித்திருக்கிறார். ஆதலால் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று கட்டளையிடுகிறார் (அப்*17:30).* ஆகையால் அத்தேனே பட்டணத்தாரே மனந்திரும்புங் கள் என்று அழைக்கிறார். காரணம் தேவனே நமக்குள்ளாக நன்மை, தீமை அறியத்தக்கதாக பகுத்தறிவை கொடுத்திருப்பதால் நாம் கணக்கொப்புவிக்க கடனாளி களாய் இருக்கிறோம். இந்த ஜனங்களுக்கு எழுதப் பட்ட பிரமாணம் இல்லாதிருந்தும், தங்களுக்குள் ளாகவே சுபாவமாய் நியாயப் பிரமாணமுள்ளவர்களாக நடந்து கொண்டார்கள். (ரோமர் *2:14)* தேவன் ஒருவர் உண்டென்று பல வழிகளில் நாம் அறிந்துள்ளோம். (சங் *19:1-6,* ரோம *1:19-20)* மேலும் நன்மை தீமையை பகுத்து உணரும் அறிவையும் பெற்றுள்ளதால் நம்முடைய நினைவுகள், செயல்கள் மற்றும் வாழ்க்கை நடக்கை களுக்கெல்லாம் தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண் டும். (அப் *10:42,* ரோம *2:16, 1* கொரி *4:5)*

இந்நிலையில் வருத்தமான உண்மை என்ன வென்றால் நன்மை, தீமை அறியும் பக்குவம்

வந்தவுடன் எல்லாரும் பாவம் செய்துவிடுகிறோம்!

தேவனுடைய சித்தத்திற்கு விரோதமானது எல்லாம் பாவம்தான். ‘பிரமாணத்தை மீறுவது பாவம்’ (1யோவா 3:4) ‘அநீதி எல்லாம் பாவம்’ (1யோவா 5:17) நன்மை தீமை என்பது உத்தேசமாக தேவனால் நிர்ணயிப்பது அல்ல மாறாக தேவனைப் போன்றது நன்மை, தேவனற்றது தீமை.

தேவன் அன்பாகவே இருக்கிறார். ஆகையால் அன்பில்லாத நிலையும் பாவம் (1யோவா 4:8, 10-16). உண்மையாயிருப்பது நல்லது. காரணம் தேவன் பொய்யுரையாதவர். (தீத்து 1:2) பல வகையான பாவங்கள் புதிய ஏற்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

பவுல் ரோமர் முதல் அதிகாரம் 29-31-ல் பாவங் களை வரிசைப்படுத்திக் காட்டுகிறார். மேலும் கலாத்தியர் 5-ஆம் அதிகாரம் 19-21 வரை மாம்சத்தின் கிரியைகளை எடுத்து காண்பிக்கிறார். அதாவது விபச்சாரம், அசுத்தம், மோகம், விக்கிரக ஆராதனை, பில்லி, சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினை கள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள், மனந்திரும்பாதவர்கள், இரட்சிப்பை கவனியாதவர்கள்



பரலோகத்திற்கு செல்ல முடியாது என்று பவுல் தெளிவாகக் கூறுகிறார். இதில் விபச்சாரம், விக்கிரக ஆராதனைக்காரர், வேசித்தனம் பண்ணுவோர், ஆண் புணர்ச்சிக்காரர், திருடர், பண ஆசையுள்ளவர், மதுபான வெறியர், கொள்ளைக்கார ரும் அடங்குவர். (1 கொரி 6:9-10, கொலோ 3:5-10 1 தீமோ 1:9-11, 2 தீமோ 3:2-5, யாக்கோபு 3:14-16, 2 பேது 2:1-2)

நம்முடைய பாவங்களுக்கு பிறரை குற்றப்படுத்த முடியாது. நாமே சோதிக்கப்பட்டு பாவம் செய்கி றோம். யாக் 1:12-15 ஆதாம் ஏவாள் மூலமாக பாவம் இவ்வுலகத்தில் நுழைந்தாலும் பாவம் செய்யும்படியாக எந்த மனிதனும் கட்டாயப்படுத்தப்படுவதில்லை. நாம் பாவம் செய்வதற்கு காரணம், பல மனிதர்களை பின்பற்றுவதும், பிசாசின் விருப்பத்தை செய்ய விரும்புவதுமே. இப்படித்தான் எல்லா மனிதரிடத்தி லும் பாவம் பெருகினது. (ரோமர் 5:12)

***கிறிஸ்துவை பின்பற்றுவதால் எல்லாரும் இரட்சிக்கப்படுவது போல ஆதாமை பின்பற்றுவதால் எல்லாரும் பாவம் செய்கிறோம் (ரோம 5:15-21 காண்க)***

ஆதாமிடத்தில் இருந்து பாவத்தை ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போதே சுமந்து வருகிறான் என்கிற தவறான போதகத்தை அனேகர் நம்புகிறார்கள்.

வேதமோ அப்படி சொல்லுவதில்லை. ஒவ்வொரு மனிதனும் தனக்காக மட்டும் தேவனிடத்தில் நிற்க வேண்டும். பிள்ளைகளை தங்கள் பெற்றோர்கள் செய்த பாவத்தினிமித்தம் அல்லது ஆதாமின் பாவத்தினிமித்தம் குற்றவாளியாக நியாயந் தீர்ப்பது இல்லை. அவ்விதமே பெற்றோர் களும் பிள்ளைகளின் பாவத்தினிமித்தம் ஆக்கினை அடைவதில்லை. (எரே *31:29, 30*, எசே *18:1-20*).

தேவன் பரிசுத்தரும், பரிபூரணமுள்ளவருமாய் இருப்பதால் பாவிகளாகிய நாம் அவரிடத்தில் இருந்து பிரிக்கப்பட்டோம் (ஏசா *59:1, 2*). ஆதாம், ஏவாள் பாவம் செய்த பிறகே ஏதேன் தோட்டத்தில் இருந்து துரத்தப்பட்டனர். (ஆதி *3:1-24*) அவ்விதமாகவே நாம் பாவம் செய்யும்போது தேவனால் தண்டிக்கப்படு கிறோம். எல்லா மனிதரும் பாவம் செய்து தேவனுக்கு முன்பாக குற்றவாளிகளாய் நிற்கிறோம். (ரோமர் *3:9*) பூமியின் மீது ஒருவனும் நீதிமான் இல்லை (ரோமர் *3:10*). எல்லோரும் பாவம் செய்து தேவன் கொடுத்த மகிமையை இழந்துவிட்டோம் (ரோமர் *3:23*, 1 யோவான் *1:8-10*) நம்முடைய பாவத்தினிமித்தம் பெற வேண்டிய அபராதம் மரணம். 'பாவத்தின் சம்பளம் மரணம் '(ரோமர் *6:23* கலா *6:7-8*) இங்குதான் நம்முடைய இரட்சிப்பின் அவசியம் நமக்கு புரிய வேண்டும்.



பாவம் செய்ததால் நாம் தேவனை விட்டு தூரமானோம், நம்மை நாமே இரட்சித்து கொள்ளவும் இயலாது. சொல்லப் போனால் உதவியற்ற நிலையே நமக்கு (ரோமர் *5:6*). ஒரு மனிதன் கடினமாக முயற்சி செய்தாலும் பாவத்தை குறைக்கலாம். ஆனாலும் பாவம் செய்து கொண்டே இருப்பான். மேலும் நாம் செய்த பாவங்களுக்காக நம்மிடத்தில் எந்த பிராயச்சித்த மும் இல்லை. ஆகையால் இரட்சிப்பு நமக்கு மிகுந்த அவசியம்! அதனால் இரட்சகரும் அவசியமே!!

## வானத்தில் இருந்து வந்த இரட்சகர்
## The Savior From Heaven

ஒரு மனிதன் ஆழமான பகுதியில் விழுந்து விட்டதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். அவனால் ஏறி வர முடியவில்லை. வெளியில் இருந்து அவனுக்கு ஒரு உதவி தேவை. யாராவது ஒருவர் ஒரு கயிற்றையோ, ஏணியையோ குழிக்குள் இறக்க வேண்டும். இப்பொழுது அவனைக் காப்பாற்ற ஒரு இரட்சகர் தேவை. மனிதவர்க்கம் முழுவதும் பாவத்தினால் இதே நிலை யில் இருக்கிறது. பரலோகத்தின் தேவன் நமக்கு உதவி செய்தாக வேண்டும் என்ற நிர்பந்தத்தில் குறித்த காலத்தில் தேவன் இரட்சகரை அனுப்பினார். தேவன் ஒருவரே (உபா *6:4*; மாற் *12:29,32*; 1 கொரி *8:4, 6*; எபே *6:6*; யாக் *2:19*).

இந்த தேவன் மூவறாக தம்மை வெளிப்படுத்தினார். பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர். (மத் 28:19; 2 கொரி 13:14; யோவா 15:26) தேவனை பிதாவே அழைப்பதனால் அவர் திருமணமானவர் என்றோ அல்லது வான லோகத்தில் அவருக்கு மனைவி பிள்ளை உண்டு என்றோ அர்த்தமல்ல. ‘பிதாவே’ என்பதற்கு அவர் நம்மை தகப்பனைப் போல கவனித்து காப்பாற்றுகிறவர் என்று அர்த்தமாம். (மத். 6:9, 7:9-11). இயேசு கிறிஸ்துவும் பிதாவுக்கு பிறந்தவரோ அல்லது பிதா பெரியவர் இவர் சிறியவர் என்பதற்காகவே ‘தேவனுடைய குமாரன்’ என்று அழைக்கப்படவில்லை. மாறாக, இயேசு தன்னை மகனைப் போல் கீழ்படியப் பண்ணினதைக் குறிக்கிறது (யோவா 4:34; 5:30; 6.38) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் யாவரும் தெய்வீகமும், நித்தியமுடையவர்கள். அவர்கள் தேவன்-மனிதரல்ல.

அதனால் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பூமியில் பிறந்தபோதுதான் உண்டானவர் அல்ல. மாறாக அவர் நித்தியமானவரும் ஆபிரகாமுக்கு முன்னிருந்தவர் என்றும் வாசிக்கிறோம் (யோவா 8.58). உலகமுண்டாவதற்கு முன்னும் அவர் அநாதியாய் இருந்தார் (யோவா 1:3; கொலோ 1:15-16: எபி 1:2) அவர் உலகத்தில் மனிதனாக வருவதறகு முன்னமே இருந்தார் என்பதை நிரூபிக்கிறது (யோவா 3:13,8:23; 17:5,24; 18:37) ஆண்டவர் இயேசு கிறிஸ்து நித்தியமானவர்.



அவர் இருந்தவரும் இனி வருகிறவருமாயிருக்கிறார் (வெளி 1:8, 17; 21:6; 22:13; யோவா 1:1; எபி 13:8) அவர் பரலோகத்தில் ஆயினும் பதினாயிரமான தேவ தூதர்களின் சேவைக்கு மத்தியில் இருந்தும் அதை விட்டுவிட்டு, தன்னை வெறுமையாக்கி மனிதனாக பூமிக்கு வந்தார் (2 கொரி 8:9) பவுல் இதை அழகாக சுருக்கமாக வருணிக்கிறார்,

> **அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார் ......(பிலிப் 2:6, 7)**

பாவ மனித வர்க்கத்திற்கு இரட்சகர் தேவைப்பட்டால் பாவ நிவாரணத்தை நாமே செலுத்த வேண்டும் என்று நம்மால் முடியாததை தேவன் நம்மிடத்திலே கேட்காமல் தமது சொந்த குமாரனையே பலியாக பூமிக்கு அனுப்பினார் (யோவா 3:16)இதனால்தான் கிறிஸ்தவ மார்க்கத்தின் போதனை சுவிசேஷம் அல்லது நற்செய்தி என்று அழைக்கப்படுகிறது. (மாற் 1:1, 16:15, ரோமர் 1:16, எபே 1:13 , 1 தீமோ 1:11.)

சுவிசேஷம் என்றால் ‘நல்ல செய்தி’. இரட்சிப்பு பரலோகத்திலிருந்து இறங்கி இயேசு கிறிஸ்துவின் மூலமாக நம்மிடத்தில் வந்திருக்கிறது.

## கிறிஸ்துவின் பிறப்பு!
## Birth of Christ

தேவனுடைய குமாரன் நமது இரட்சகராக பூமியில் பிரவேசிப்பதற்கு தேவன் விசேஷமான அற்புதமான பிறப்பை அடையச் செய்தார். உன்னதமான பிறப்பை அடையச் செய்தார். உன்னதமான இயேசு கிறிஸ்து வின் பிறப்பிற்கு நல்ல யூதர்களாகிய யோசேப்புவை யும் மரியாளையும் தெரிந்தெடுத்தார். மரியாளோ யோசேப்புக்கு நிச்சயிக்கப்பட்டு உறுதி செய்திருந்தார்கள். ஆனால் திருமணம் இன்னும் நடக்கவில்லை. (மத் *1:18-25)* மரியாள் கன்னியாகவே இருந்தார்கள் (லூக் *1:26-34)* பரிசுத்த ஆவியால் மரியாள் அற்புத விதமாக கர்ப்பம் தரித்தாள். (மத் *1:20*, லூக் *1:35)* இந்த வழியாகவே இயேசுவுக்கு மாம்சபிரகாரமான தாயாக மரியாளும் பிதாவாகிய தேவன் எப்போதும் தகப்ப னாகவும் இருந்தார். (கலா *4:4*, ரோம*1:3*, லூக் *1:35)* இதுவே கிறிஸ்துவின் தூய பிறப்பு என்று அழைக்கப்பட்டது.

இயேசு கிறிஸ்து மனிதனாக பூமிக்கு வந்ததை, மனிதப் பிறப்பை பலவாறு மக்கள் புரிந்து



கொள்கின்றனர். யோவான் தன்னுடைய எழுத்துக்களில் கிறிஸ்துவை ‘வார்த்தையாக’ அறிமுகப்படுத்துகிறார். ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவ னோடு இருந்தது. அந்த வார்த்தை தேவனாயுமிருந் தது. அவர் ஆதியிலே தேவனோடு இருந்தார். அந்த வார்த்தை மாம்சமாகி நம்மோடு வந்து வாசம் பண்ணினார். (யோவான் *1:1, 14*, ரோமர் *8:3*, *1* தீமோ *3:16*, *1* பேதுரு *4:2*, *2* யோவான் *7)* கிறிஸ்து நம்முடைய இரட்சகராகும்படி நம்மை போல மனிதனானார் (எபி *2:14,17)*.

இயேசு கிறிஸ்து பல வழிகளில் விசேஷமானவர், அதிலும் அவர் இரு தன்மையில் வெளிப்பட்டது அதா வது மனிதனும் தேவனுமாக வாழ்ந்தது மிகவும் முக்கிய மானது. (மத் *1:1-17*, ரோம *1:3 ,9 :5)*

இயேசு இவ்வுலகத்தில் வாழ்ந்தபோது முழு மனித னாக நடந்து கொண்டார். மற்ற மனிதர்களைப் போலவே பிறந்து வளர்ந்தார். சிறு குழந்தையாக இருந்துதான் மனிதனாக வளர்ந்தார் (லூக் *2:40)* நம்மைப் போல சரீர தேவைகளாகிய பசி, தாகம், ஓய்வு அவருக் கும் அவசியமாயிருந்தது. இன்னும் அதிகமாக அவரும் ஜெபம் பண்ண வேண்டியிருந்தது. (மத் *4:2*, *8:24*, யோவா *4:5-7)* இயேசுவிற்கு மனித உணர்ச்சிகளாகிய மகிழ்ச்சி, துக்கம், கோபம், அன்பு மற்றும் மனதுருக்கம் இருந் தது. (மத் *9:36*; *26:37*

யோவா *12:27, 15:11)* இயேசு கண்ணீர் விட்டார். யோவா *11:35* மற்றும் சோதிக்கப்பட்டார். (மத் *4:1-11* லூக் *4:1-13*, எபி *4:15)*

இயேசு எல்லா மனிதனைப் போலவே சரீர கஷ்டங்களையும், வலி, வேதனைகளையும் அனுபவித்து மரித்தார். (பேது *3:18, 4:1*). அதே நேரத்தில் அவர் தெய்வத் தன்மையிலும் இருந்தார். (யோவா *10:30*). தேவ தன்மையை குறிக்கும் ஆண்டவர், தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டது மல்லாமல் (யோவா *10:25-33* லூக் *2:11*, வெளி *4:8-11 19:16)* 'தேவன்' என்றும் எழுதப்பட்டிருக்கிறார். (யோவா *1:1, 20:20*, ரோமர் *9:5, 2:13*, எபி *1:8, 2* பேது *1:1*). இயேசு கிறிஸ்து தான் தெய்வ தன்மையில் இருந்தும்கூட அதை முழுவதுமாக பயன்படுத்தாமல் கட்டுப்பாட்டுடன் இருந்தார். (கொலோ *1:15,19, 2:9)* இயேசு தேவ மனிதனாக இருந்தார். அவர் தேவனாகவும் மனித னாகவும் இருந்தார்.

***வெள்ளை மற்றும் கருப்பு பெயின்டை கலந் தால் இடைப்பட்ட நிறமாகிய சாம்பல் நிறம் கிடைக்கும். அதுபோல இயேசு, தேவனுக்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட நிலையில் இல்லை, அல்லது ஒரு தேவ தூதனாகவும் இல்லை. மாறாக ஒரே நேரத்தில் தேவனாகவும் மனிதனாகவும் இருந்தார்.***



இயேசு கிறிஸ்து தேவனாகவும் மனிதனாகவும் இருந்ததினாலேதான் பூரணமாக இரட்சகராகவும் இருந்தார். மனிதனுக்கும் தேவனாகிய பிதாவுக்கும் மத்தியில் பொருத்தமான மத்தியஸ்தராகவும் அவரால் இருக்க முடிந்தது. *(1* தீமோ *2:5-6)* மனிதரான அவர் நம்முடைய பாவ நிவாரணத்தை (கடனை) செலுத்தினார்.

தேவனாக இருந்து அவர் பூரணமாக பலியாகவும் நம் பாவங்களினிமித்தம் மரித்தார். இதைக் குறித்து விளக்கமாக பின்வரும் பக்கங்களில் படிப்போம். ஆனால் இப்போது புரிந்து கொள்ள வேண்டிய சத்தியம் என்னவென்றால், உலகத் தோற்றத்திற்கு முன்னமே தேவன் கிறிஸ்துவின் மூலமாய் உலகம் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் பண்ணியிருந்தார் *(1* பேது *1:20)* இயேசு கிறிஸ்து ஒரே சமயத்தில் மனிதனாகவும் தேவனாகவும் இருந்ததால்தான் மரியாளிடத்தில் பிறந்து மனித தாயை பெற்று பரலோகத்தின் தேவனை பிதாவாக பெற்றிருந்தார். நமது இரட்சகர் பரலோகத்தி லிருந்து வந்த தேவனுடைய குமாரன். (லூக் *2:11*).

## கிறிஸ்துவின் வாழ்க்கை
## The Life of Christ

கிறிஸ்துவின் மனித வாழ்க்கையை நீங்கள் சரியாக தெரிந்து கொள்ள சுவிசேஷ புத்தகங்களாகிய மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவானை வாசிக்க வேண்டும். இந்த நான்கு புத்தகங்களும் கிறிஸ்துவின் பிறப்பு, 12 வயதில் நடந்த சம்பவம் மற்றும் மூன்றரை ஆண்டு ஊழியக் காலத்தைப் பற்றி விளக்குகிறது.

அவர் தமது முப்பதாவது வயதிலிருந்து பிதாவினுடைய சித்தத்தை மக்களுக்கு போதிக்கத் தொடங்கினார். அநேக சீஷர்கள் உருவானார்கள். அவரோ சிலரை விசேஷமாக தெரிந்தெடுத்து அவர்களை அப்போஸ் தலர்கள் என்று அழைத்து பின்னாளில் அவர்களால் சுவிசேஷம் வெளிப்படுத்தப்பட்டது.

இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள், செயல்கள் தேவனால் அங்கீகரிக்கும்படி அநேக அற்புதங்களை செய்தார். (யோவா 2:11, 5:36, 10:25, 37-38; 14:11 லூக் 7:20-22, மத்.9:1-8, எபி 2:4) சில அற்புதங்கள் மாத்திரமே சுவிசேஷ புத்தகங்களில் எழுதப்பட்டுள் ளது. காரணம் அவைகளை வாசித்து, விசுவாசித்து, நித்திய ஜீவனை அடைவதற்காக (யோவான் 20:30,31) இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்கள் கீழே வரிசைப் படுத்தப்பட்டுள்ளது.



1. தண்ணீர் திராட்சை ரசமாக மாற்றப்பட்டது (யோவான் 2:1-11)
2. அதிகாரியின் மகன் குணமாக்கப்பட்டான். (யோவான் 4:46-54)
3. ஒரு மனிதன் ஜெப ஆலயத்தில் குணமாக்கப் பட்டான். (மத் 1:23-26; லூக் 4:33-35)
4. பேதுருவின் மாமியார் குணமாக்கப்பட்டாள் (மத் 8:14-15; மாற்கு 1:30-31; லூக் 4:38-39)
5. திரளான மீன்கள் பிடிக்கப்பட்டன. (லூக் 5:1-11)
6. குஷ்டரோகி சுகமாக்கப்பட்டான் (மத் 8:2-4; மாற்கு 1:40-42; லூக் 5:12-13)
7. பக்கவாதக்காரன் குணமாக்கப்பட்டான் (மத் 9:2-7; மாற்கு 2:3-12; லூக் 5:18-25).
8. பெதஸ்தா என்ற குளத்தருகே இருந்த வியாதியஸ் தன் குணமாக்கப்பட்டான். (யோவான் 5:1-9)
9. சூம்பின கையுடைய மனிதன் குணமாக்கப்பட் டான். (மத் 12:10-13; மாற்கு 3:1-5; லூக் 6:6-10).
10. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் குணமாக்கப் பட்டான் (மத் 8:5-13; லூக் 7:1-10)
11. விதவையின் இறந்த மகனை உயிரோடே எழுப்பினார். (லூக் 7:11-15).

12. இரண்டு குருடர் பார்வை பெற்றனர் (மத் 9:27-31)
13. புயல் காற்றை அமைதல்படுத்தினார்.(மத் 8:23-27; மாற்கு 4:37-41; லூக் 8:22-25).
14. பிசாசு பிடித்த மனிதன் குணமாக்கப்பட்டான். (மத் 8:28-34; மாற்கு 5:1-15; லூக் 8:27-35)
15. இரத்த கசிவுள்ள ஒரு தாய் குணமாக்கப்பட்டாள். (மத் 9:20-22; மாற்கு 5:25-29; லூக் 8:43-48)
16. யவீருவின் மகள் உயிரோடெழுப்பப்பட்டாள். (மத் 9:18-19; 23-25; 5:22-24, 38-42; லூக் 8:41-42; 49-56).
17. பிசாசு பிடித்த ஊமையான ஒரு மனிதன் குணமாக் கப்பட்டான். (மத் 9:32-33).
18. 5,000 பேர் அற்புதமாய் போஷிக்கப்பட்டனர். (மத் 14:15-21; மாற்கு 6:35-44; லூக் 9:12-17, யோ வா6:5-13)
19. தண்ணீர் மேல் நடந்தது (மத் 14:25; மாற் 6:48-51; யோவா 6:19-21)
20. கானானிய தாயின் மகள் குணமாக்கப்பட்டாள். (மத் 15:21-38; மாற்கு 7:24-30).
21. ஊமையும் செவிடுமான மனிதன் சுகமாக்கப்பட் டான். (மாற்கு 7:31-37).
22. 4,000 பேர் அற்புதமாய் போஷிக்கப்பட்டனர். (மத் 15:32-38; மாற்கு 8:1-9)



23. குருடன் பார்வை பெற்றான். (மாற்கு 8:22-26)
24. பிசாசு பிடித்தவன் குணமாக்கப்பட்டான். (மத் 17:14-18; மாற்கு 9:17-19; லூக் 9:38-43).
25. மீனின் வாயில் இருந்து எடுத்த வெள்ளி காசு (மத் 17:24-27)
26. பிறவி குருடன் பார்வை பெற்றான். (யோவா 9:1-41)
27. குருடும் ஊமையுமான ஒருவன் குணமாக்கப்பட் டான். (மத் 12:22; லூக் 11:14).
28. பெலவீனப்படுத்தும் ஆவியை கொண்ட பெண் குணமாக்கப்பட்டாள். (லூக் 13:11-13)
29. நீர்கோவை வியாதியுடைய மனிதன் குணமாக்கப் பட்டான். (லூக் (14:1-4)
30. லாசருவை உயிரோடே எழுப்பினார் (யோவா 11:1-44)
31. 10 குஷ்டரோகிகள் குணமாக்கப்பட்டார்கள் (லூக் 17:11-19)
32. இரண்டு குருடர் பார்வை பெற்றனர். (மத் 20:29-34; மாற்கு 10:46-52, லூக் 18:35-43).
33. அத்தி மரம் பட்டுப் போயிற்று (மத் 21:18-22; மாற்கு 11:12-14, 20-25).
34. மல்குஸின் காது ஒட்டப்பட்டது. (லூக் 22:50-51)
35. இரண்டாவது முறையாக திரளான மீன்கள் பிடிக் கப்பட்டன. (யோவா 21:1-11).

இயேசுவின் ஞானஸ்நானத்தை குறித்து நான்கு சுவிசேஷத்திலும் சொல்லப்பட்டுள்ளது. (மத் 3:13-17; மாற்கு 1:9-11, லூக் 3:21-22) இயேசு தன்னுடைய பாவ மன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பெறவில்லை. அவர் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக ஞானஸ்நானம் பெற்றார். அவர் நம்மைப் போல ஒரு மனிதராக இந்த விஷயத்தில் செய்து காட்டி நமது இரட்சகராக இருக்கிறார். அவர் ஞானஸ்நானத்தின் போது வானத்திலிருந்து தேவனுடைய குரல் ''இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக் கிறேன்'' என்று கேட்டது. (மத் 3:17) ஞானஸ்நானம் பெற்ற பிறகு அவர் சோதிக்கப்பட்டார் (மத் 4:1-11 லூ 4:1-13).

இயேசுவின் வாழ்க்கையில் நடந்த சம்பவங் களில் முக்கியமான ஒன்று 'மறு ரூபமாதல்' (மத் 17:1-8 , மாற் 9:2-10 லூக் 9:28-36, 2 பேதுரு 1:16-18) இச்சம்பவத்தில் இயேசு தன்னுடைய சீஷர்களாகிய பேதுரு, யோவான், யாக்கோபுக்கு முன்பாக மறுரூபமானார். அவர் ரூபம் மிகவும் பிரகாசமானது. காரணம் அது அவருடைய தெய்வீக நிலையாக இருக்கலாம். தேவனுடைய குரல் வானத்திலிருந்து (மாற் 9:7) ''இவர் என்னுடைய நேசகுமாரன். இவருக்கு செவி கொடுங்கள்'' என்று சத்தமிட்டது.

கிறிஸ்துவின் இறுதி நாட்களில் எருசலேமுக்குள் கம்பீரமாக மக்களோடு சேர்ந்து ஆரவாரத்தோடு நுழைவதைப் பார்க்கிறோம். லூக் 19:28-40, யோ 12:12-19 அடுத்து தேவாலயத்தை சுத்தமாக்கினார். (மத் 21:12-17, மாற் 11:15-19, லூக் 9:45-48) அவருடைய கைது, வழக்கு, விசாரணை, சிலுவையில் அறையப்படுதல். பின்பு உயிர்த்தெழுதல். (மத் 26:36-28:10, மாற் 14:32-16:18; லூக் 22:39-24:49, யோ 18:1-21:14).



## கிறிஸ்துவின் போதனைகள்
## The Teachings of Christ

கிறிஸ்தவர்களை பொறுத்தவரை இயேசுவே பெரிய குருவாக இருக்கிறார். நாம் அறிந்தபடி இயேசு கிறிஸ்துவுக்கு அடிப்படை கல்வி ஏதும் இல்லை. (யோவா 7:15) ஆனால் அவர் போதித்த விதத்தை கண்ட, கேட்ட அனைவரும் பிரமித்தார்கள். (யோவா 7:46) பொதுவாக இயேசு கதைகள், உவமைகள் மூல மாகவே போதிப்பது வழக்கம். நடைமுறையில் எளிய மனிதனுக்கு புரிந்து கொள்ளும்படி சாதாரண வாழ்வின் சம்பவங்கள், பொருட்கள் மூலமாக போதிப்பார். இவருக்கு எதிர்மாறாக நம்மில் அநேக போதகர்கள் தாங்கள் போதிப்பதற்கு ஏற்ப வாழ்ந்து காட்டாமல் மாயம் செய்கிறார்கள். (மத் 23:3) ஆனால் இயேசுவோ போதித்தபடியே வாழ்ந்தார். அதிகாரத்தோடும் போதனை செய்தார் (யோவா 3:34, 7:16, மத் 7:28-29)

மேலும் ஒரு கருத்தை சொல்லும்போது மற்ற

மனிதர்களுடைய ஒப்புதலை பெற்று அல்லது சார்ந்து சொல்லாமல் ''நான் உங்களுக்கு சொல்லுகிறேன். மத் 5:22, 28, 32, 34, 39, 44) இயேசு சத்தியத்தை போதித்தார் என்பது மட்டுமல்ல; அவரே சத்தியம். இயேசு கிறிஸ்து போதித்த வழி நம்முடைய வாழ்க்கையில் சந்தோஷத்தைக் கொடுக்கும் வழி. (யோவான் 10:10 மத் 5; 3-12) அநேக மனோதத்துவ வல்லுநர்கள் மக்களுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு வழிமுறைகளை சொன்னாலும் அது ஏற்கனவே இயேசு கிறிஸ்து சொன்னதுதான் என்று ஒப்புக் கொள்கின்றனர்.

இயேசு கிறிஸ்துவின் உவமைகள் எளிமையும், அழகும் ஆவிக்குரிய அர்த்தத்தோடு ஆழமானதாகவும் இருக்கும். உதாரணமாக லூக்கா 15-ல் காணாமற்போன ஆடு, காணாமற்போன காசு மற்றும் காணாமற் போன மகன் போன்றவற்றை வாசித்துப் பாருங்கள். இவ்வுவமைகள் தேவனாகிய தகப்பன் பாவத்தில் தொலைந்துபோன மக்கள் மனந்திரும்பி தன்னிடம் வர வேண்டும் என்பதை எதிர்பார்த்திருப்பதை வலியுறுத்துகிறது. மேலும் யோவா 10-ல் நல்ல மேய்ப்பனைப் பற்றி வாசிக்கிறோம். இன்னும் இயேசு கிறிஸ்துவின் போதனைகள் மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் விவரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக சிலவற்றை வாசித்துப் பாருங்கள்.



1. மலைப் பிரசங்கம் மத் 5:1 - 7:28
2. ராஜ்ஜியத்தைப் பற்றிய உவமை மத் 13:1-53
3. ராஜ்ஜியத்தின் வாழ்க்கை மத் 18:1-35

இயேசு கிறிஸ்து போதித்த நடைமுறை வாழ்க்கை நெறிகள் உன்னதமான ஒன்றாக என்றென்றும் உள்ளது. அவர் போதித்தது ஒழுக்க நெறிமுறைகள் வெறும் வெளிப்புற சமுதாய சீர்திருத்தமாக மட்டுமல்லாமல் மனிதனுடைய இருதயத்தின் ஆழத்தில் பெற வேண்டிய மாற்றத்தை வலியுறுத்தினார். (மத் 23:1-28) கொலை செய்வது பாவம். ஆனால் இயேசு கிறிஸ்துவோ மனதில் உள்ள கோப உணர்வுகளை முதலாவது எடுத் துப் போட வேண்டும் என்றார். காரணம் அதுதான் கொலை வெறியாக பிறகு மாறுகிறது. (மத் 5:21-26). விபச்சாரம் செய்வது பாவம். ஆனால் இச்சையான உணர்வையே முதலில் தவிர்க்க வேண்டும் என்று இயேசு சொன்னார். (மத் 5:27-30) நல்லதையே செய்ய வேண்டும் என்றால் அதை நல்ல நோக்கத் தோடு செய்ய வேண்டும். குறுகிய எண்ணத்தோடு செய்யப்பட்ட நன்மை அதன் பலனை இழந்து விடுகிறது.

மேலும் இயேசு முதல் நாளிலிருந்து பரமேறும் வரை தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றியே

அதிகமாக போதித்தார். (மத் 1:14,15, 13:1-53) இந்த ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க வேண்டும் என்றும், ராஜ்ஜியத்தில் இருந்தால் நித்திய ஜீவனையும் பரலோகத்தையும் அடைவோம் என்றும் போதித்தார். அதனால் மனிதர் யாவரும் தேவனுக்கு முதலாவது கீழ்ப்படிய வேண்டும், ராஜ்ஜியத்தை தேட வேண்டும் என்று வற்புறுத்தினார். (மத் 6:10,33) மேலும் மனத்தாழ்மை, மனந்திரும்புதல் மற்றும் பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். (மத் 1:15, 9:35, 10:15, லூக் 22:25-27)

மிக அதிகமாக இயேசு கிறிஸ்து நம்மிடம் எதிர்பார்ப்பது சரியான வாழ்க்கைக்கு அடிப்படை அன்புதான். அன்பு என்றால் மற்றவர்களை விரும்புவது அல்லது மற்றவர்களைப் பற்றி நன்றாக நினைப்பது அல்ல. மாறாக பிறருக்கு எவ்வளவாக நன்மையை சுயநலமில் லாமல் செய்ய முடியும் என்று பார்த்து நடந்து கொள் வது மாத்திரமல்ல நம்முடைய விரோதிகளையும் நேசிக் கச் சொன்னார். மத் 5:43-48. நம்மிடம் நன்றாக நடந்து கொள்பவருடன் நாம் நன்றாக நடந்து கொள்வோம். ஆனால் நம்மை பகைக்கிறவர்களை அன்பு கூற முடியுமா? தம்முடைய சீஷர்களை ஒருவரையொருவர் அன்புகூறச் சொன்னார். யோவா 13:34 பிறரை அன்புகூறுவதே மனிதனுடைய முதலாவது பெரிய கடமையாக



உள்ளது. மத் 27:37-39 வாசிக்கவும்.

நம்முடைய வாழ்க்கையில் பொன் எழுத்தால் பதிக் கப்பட வேண்டிய கட்டளை என்னவெனில் பிறர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க் கிறோமோ அதையே நாம் பிறருக்கு செய்ய வேண்டும். (மத் 7:12 லூக்6:31) சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஒன்று புரிகிறது இயேசுவிடம் ''வாழ்வளிக்கும் வார்த்தை உண்டு'' (யோவா 6:68)

## பாவமற்ற இயேசு கிறிஸ்து
## The Sinlessness of Jesus Christ

வேதம் சொல்கிறது: இயேசு பரிபூரணமானவர்; பரிசுத்தர் அவருக்குள் பாவமில்லை (எபி 5:9, 1 யோவா 3:5. அவர் குற்றமில்லாத நம் பாவங்களை சுமந்து தீர்க்கும் ஆட்டுக்குட்டி. (யோவா 1:29, எபி 9:14) அவர் பாவம் செய்யவில்லை (1 பேது 2:22 ) பாவமற்ற அவர் நமக்காக பாவமானார் (2 கொரி 5:21 ) அவர் நம்மைப் போல எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டார். ஆனால் பாவம் செய்யவில்லை (எபி 4:15) தன்னை எதிர்த்த வர்கள் மத்தியில் என்னை குற்றவாளியாக்குகிறவன் யார்? என்று தைரியமாய் கேட்டார். (யோவா 8:46) இயேசு கிறிஸ்து எந்தத் தீமையும் செய்யாமல் பாவமற்றவராக வாழ்ந்து நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்தார். (அப் 10:38)

இயேசு கிறிஸ்து பாவமற்றவர் என்பதை அவரு

டைய அனுதாபிகள், நண்பர்கள் மட்டும் சொல்ல வில்லை. அவர் மேல் அனுதாபம் இல்லாதவர்களும் அவரை பாவமற்றவர் என்று சாட்சி கொடுத்தனர்.

**I. அனுதாபிகளின் சாட்சிகள்**

1. பேதுரு - லூக் 5:8, 1 பேது 1:19, 2:22, 3:18 யோவா 6:69, அப் 3:14
2. யோவான் - 1 யோ வா 2:1, 29, 3:5, 7, அப் 4:27
3. பவுல் - 2 கொரி 5:21
4. எபிரேய ஆசிரியர் - எபி 2:10, 4:15, 5:8-9, 7:26, 28, 9:14
5. ஸ்தேவான் - அப் 7:52
6. அனனியா - அப் 22:14
7. காபிரியேல் தூதன் - லூக் 1:35

**II. அனுதாபமற்றவர்களின் சாட்சிகள்**

1. யூத தலைவர்கள் - மத் 26:55-59, மாற் 14:48-56, லூக் 22:52-53, யோவா 18 :20-21
2. யூதாஸ்- மத் 27:4
3. பிசாசின் ஆவிகள் - மாற் 1:24, லூக் 4:34

**III. மற்றவர்கள்**

1. பிலாத்து- மத் 27:18, 23-24 மத் 15:15 லூ 23:4, 14-15 யோவா 18:38
2. பிலாத்துவின் மனைவி - மத் 27:19



3. சிலுவையின் மீதிருந்த கள்ளன் - லூக் 23:41
4. நூற்றுவர் தலைவன் - லூக் 23:37

**IV. இயேசு கிறிஸ்துவின் சொந்த சாட்சி**

1. யோவான் 8:46, 14:30, 15:25, 18:23
2. முழுமையான கீழ்படிதல் - யோவான் 4:34, 5:30, 6:38, 7:18 , 8:29, 15:10, 17:4 லூக் 22:42, எபி 10:5-7

இயேசுவானவருடைய தனிப்பட்ட சாட்சியே இவை எல்லாவற்றையும் விட மேலானது. நல்லவர்கள் தாங்கள் செய்கிற சிறு தவறுகளை அறிந்து தவிர்ப்பார்கள். அதிக தீமையானவர்கள் இன்னும் பெரிய பாவம் செய்யாமல் குறைத்துக் கொள்ள முயலுவார்கள். இயேசு கிறிஸ்துவோ தான் பாவமற்றவர் என்பதை கர்வத்தினாலே சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவர் பொய்யரோ, பைத்தியமானவரோ அல்ல. பலதரப்பட்ட சாட்சியங்கள் இயேசு பாவமற்றவர் என்பதை நிரூபிப்பதால் கிறிஸ்தவர்களாகிய நாமும் விசுவாசிக்கிறோம். அவர் பாவமற்றவராக இருந்ததி னாலே நமக்காக பாவ நிவாரண பலியானார்.

## பாவ நிவாரண பலி
## The Atonement

பாவ நிவாரணம் என்பதற்கு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் நம்முடைய பாவங்கள் மூடப்படுவதை குறிக்கிறது. இயேசு கிறிஸ்துவினுடைய சிலுவை பாடுகளையும் கோர மரண அவஸ்தையையும் இதுவரை வேதத்தில் வாசிக்கவில்லையானால் இப்போது வாசித்துப் பாருங்கள். *(மத் 27:27-52, மாற் 15:16-39, லூக் 23:26-48, யோவா 19:16-37)*

தேவன் மனித வர்க்கத்தை மோசேயின் கால முதலே பலவிதங்களில் பலிகளை செலுத்தச் சொல்லி பாவ நிவாரண பலியின் நோக்கத்தை புரிந்து கொள்ளும்படி ஆயத்தப்படுத்தினார். (ரோமர் 15:4, 1 கொரி 10:6) உதாரணமாக பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மரண தூதன் எகிப்தியரின் தலைச்சன்களை கொன்றபோது இஸ்ரவேல் ஜனங்களோ பழுதற்ற ஆட்டுக்குட்டியை பலியிடும்படி கட்டளை பெற்றனர். அதன்படி அவர்கள் பழுதற்ற ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை தங்கள் வீட்டு வாசல் நிலையில் தடவ வேண்டும். அவ்வாறு பூசப்பட்ட வீட்டில் மரணம் ஏற்படவில்லை. இது நமக்கு ஒரு செய்தியை பின்னாளில் உணர்த்துவதாக இருக்கிறது. நாமும் நித்திய பிரிவாகிய மரணத்திலிருந்து கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்படுகிறோம் என்பதே!



மேலும் பாவ நிவாரண பலியிடும் நாளின்போது யூதர்கள் இரண்டு ஆடுகளை பயன்படுத்துவார்கள். ஒரு ஆட்டை பலியிட்டு அதன் இரத்தத்தை தேவாலயத்தில் தெளிப்பார்கள். அடுத்த ஆட்டின் தலை மீது ஆசாரியன் கை வைத்து ஜனங்களுடைய பாவங்களை சொல்லி அந்த ஆட்டின் மீது சுமத்துவதைப் போல செய்து வனாந்திரத்திலே துரத்தி விடுவார்கள். ஜனங்களோ தங்கள் பாவங்களை அந்த போக்காட்டின் மேல் சுமத்தப்பட்டு துரத்தப்பட்டதாக நம்பிச் செல்வார்கள். ஒரு ஜீவன் இரத்தம் சிந்தி மரிக்கும்போது அந்த இரத்தத்தில் பாவ மன்னிப்பு கிடைக்கும் என்று நம்பப்பட்டது.(எபி 9:22) வாசிக்கவும்.

இயேசு கிறிஸ்துவோ நமது பாவங்களை சுமந்து தீர்த்த ஆட்டுக்குட்டியாகவும், போக்காடாகவும் இருந்து பாவங்களை போக்கினார். 1 பேதுரு 2:24 வாசிக்கவும்.

பழைய ஏற்பாட்டு பலிகள் எல்லாம் மிருக ஜீவன்களே, அவைகள் மனிதனுடைய பாவ நிவாரணத்திற்கு பூரணமான பலியாக இல்லை. தேவன் தமது குமாரனை பூமியில் அனுப்புவதற்கு முன் பலி முறைமைகள் தற்காலிகமானதாக நடந்து வந்தது. (கலா 3:23-25; 4:4) மனிதன் தேவனை எல்லாவற்றிற்கும் நம்பி கீழ்ப்படிய வேண்டும் பலிகள் என்பதை உணர்த்தியது. மேலும் நம்முடைய

பாவங்கள் எப்படி மற்றொரு பலியால் மன்னிப்பை பெற முடியும் என்பதையும் புரிய வைத்தது.

எபிரேய ஆசிரியர் *10:4*-ல் காளை வெள்ளாட்டுக் கடாவின் இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்ய மாட்டாது. ஆனால் இயேசுவின் இரத்தமும் அவருடைய சிலுவை மரணமும் பழுதற்ற பலியாக நம்முடைய பாவங்களை மன்னிக்கிறது. யோவான் ஸ்நானகன் இயேசுவை பார்த்து, இதோ உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டி என்றார் (யோவா *1:29*). மிருகத்தின் பலிக்கு பதிலாக இயேசு தன்னையே பலியாக ஒப்புக் கொடுத்தார். (எபி *9:26*).

இன்னும் அதிகமாக இந்த பாவ நிவாரண பலியின் தன்மையை ஏசாயா *52:13-53:12*-ல் பாடுபடும் அடிமை ஒருவரை சித்திரிக்கிறது. இந்த பகுதி புதிய ஏற்பாட்டில் இயேசுவோடு ஒப்பிடப்படுகிறது. (அப் *8:32-35*) ஏசாயா 53-ல் குறிப்பிடப்படும் நபர் பாவமற்ற இயேசுவே. ( *53:7,9*). இந்த பாடுகள் விபத்து போல நடக்கவில்லை. மாறாக தேவனால் திட்டமிட்டபடி நடந்தது. இன்னும் இது கொடுமையான பாடுகள். ஆனால் இறுதியில் இந்த பாடுகளின் முடிவு வெற்றியாக இருந்தது. கிறிஸ்துவின் மரணத்தில்தான், பாவம், மரணம் மற்றும் பிசாசின் மேல் வெற்றி கிடைத்தது. (எபி *2:14* , கொலோ *2:14-15*)



இயேசு தமது மரணத்தை முன்னறிவித்தார். இது என் உடன்படிக்கையின் இரத்தம் எல்லாருடைய பாவ மன்னிப்பிற்கென்று சிந்தப்படும் (மத் *26:28*, ரோமர் *3:25*) பவுல் சொல்லும்போது 'இரத்தத்தினாலாகிய பாவ நிவாரண பலி' என்கிறார். பேதுருவோ ' பாவத்தில் அடிமை களாயிருந்த நம்மை கிறிஸ்து பழுதற்ற ஆட்டுக்குட்டி யைப் போல மாசற்ற இரத்தம் சிந்தி மீட்டுக் கொண்டார்' என்கிறார். (1 பேது *1:19*) எல்லா மொழி, இனம், தேசம் மக்களிலிருந்தும் இயேசுவின் இரத்தத்தால் தேவனிடத்தில் சேரும் சிலாக்கியம் பெற்றிருக்கிறோம். (வெளி 5:9, எபே *1:7*, *5:25*, மாற் *10:45*)

இயேசுவின் மரணம் எல்லா மனித வர்க்கத்திற் காகவும் நிகழ்ந்தது. சிலரோ இயேசு தேவனால் இரட்சிக்கப்படும்படி தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக் காகவே மரித்தார் என்று தவறான எண்ணம் கொண்டுள்ளனர். மாறாக வேதமோ அவர் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்தார் என்று கூறுகிறது. (யோவா *1:29*, *3:16-17*, *4:42*, 2 கொரி *5:19*, எபி *2:9*, 1பே *2:2*, *4:14*) அவர் எல்லாருக்காகவும் மரித்தார். (2 கொரி *5:14*, தீத்து *2:11*)

அதுவும் பாவிகளுக்காக மரித்தார் (1 தீமோ *1:15* ரோமர் 5:6-8) தேவனோ எல்லாரும் இரட்சிக்கப்பட

வேண்டும் என்று விரும்புகிறார். 2 பேதுரு 3:9, 1 தீமோ 2:4) இயேசு கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தாலும் எல்லாரும் இரட்சிக்கப்படுவதில்லையே. பாவ நிவாரண பலி எல்லாருக்காகவும் இருக்கிறது. ஆனால் விசுவாசிப்பவரே இரட்சிக்கப்பட முடியும் (1தீமோ 4:10).

இயேசு கிறிஸ்துவின் மரணம் நமக்காக அதாவது நம்முடைய இடத்தில் அவர் பதிலாக மரித்ததை காண்பிக்கிறது. இயேசு பாவமற்றவர். குற்றமில்லாத பழுதற்ற பரிசுத்தர். அவர் பாடுபட்டு மரிக்க வேண்டிய அவசியமில்லை. அப்படி அவர் பாடுபட வேண்டிய அவசியமில்லை. அப்படி அவர் பாடுபட வேண்டிய அவசியமில்லாதிருந்தும் நம்முடைய பாவங்களை அவர் மேல் ஏற்றுக்கொண்டு நமக்காக மரித்தார். நம்முடைய இடத்தில் அவர் மரித்தார். பாவத்தினால் நமக்கும் தேவனுக்கும் நடுவில் இருந்த தடையை நீக்கி மீண்டும் நம்முடைய உறவை புதுப்பித்தார் (எசா 59:1,2) கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப் பட்டார். (1 பேதுரு 3:18)

*அன்றியும் நாம் பலனற்றவர்களாயிருக்கும் போதே குறித்த காலத்தில் கிறிஸ்து*



*அக்கிரமக்காரர்களுக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது. நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்கு சத்துருக்களாயிருக்கையில் அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால் ஒப்புரவாக்கப்பட்ட பின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.* (ரோமர் 5:6-10)

இதனால்தான் இயேசுவே மனிதனு டைய இரட்சிப்பின் நம்பிக்கை என்று வசனமும் தெளிவுபடுத்துகிறது அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவரு டைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளை யிடப்படவும் இல்லை.

(அப் 4:12) அவராலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வர முடியாது. (யோவா 14:6)

பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23) ஆனால் தேவன் எந்த ஒரு மனிதனையும் நரபலி கொடுக்க சொல்லவில்லை அல்லது புதிதாக பிறந்த குழந்தையை பலியாக கேட்கவில்லை. மாறாக தேவனுடைய குமாரன் மனப்பூர்வமாக மனிதனாக தன்னை தாழ்த்தி கன்னி மரியாளிடத் தில் பிறந்தார். தேவன் மனிதனாக வந்தார், பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்தார், பாவமற்றவராக, தன்னை காத்துக் கொண்டார். தேவனே நமக்காக பலியை கொடுத்தார். தேவனுடைய அன்பு கல்வாரி சிலுவையில் கிறிஸ்து வின் மரணத்தின் மூலம் காண்பிக்கப்பட்டது. (யோவா 3:16, ரோமர் 5:8 எபே 5:25) இதினாலே சுவிஷேப் பிரசங்கம் சிலுவையைப் பற்றிய உபதேசமாக எங்கும் வலியுறுத் தப்படுகிறது. (1 கொரி 1:23, 2:2, 15:1-4, கலா 6:14) கிறிஸ்தவர்களாக நாம் தேவனுடைய இந்த மகாபெரிய ஈவுக்காக நன்றி செலுத்திக் கொண்டேயிருக்க வேண் டும். நாம் நேர்த்தியான வாழ்க்கை வாழும்படி தேவனு டைய உன்னதமான அன்பினாலே தொடப்பட்டி ருக்கிறோம். (மாற் 8:34-37, 1யோவா 4:19, 2 கொரி 5:14 15, யோவா 12:32, 15:13, பிலி 3:10, 1 பேது 2:21, பிலி 2:5-8, எபி 12:1-3).

கிறிஸ்தவர்களாயிருந்து நம்மை நாமே பெருமையாக



நினைப்பதற்கோ அல்லது முக்கியமாக கருதுவதற்கோ ஒன்றுமில்லை. மாறாக இயேசுவினுடைய தியாகத்தை நினைத்து அவரை மகிமைப்படுத்த வேண்டும். (கலா 6:14, 2 கொரி 4:5)

## இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்
## The Resurrection of Christ

இயேசு மரித்த பின்பு அவரை கல்லறைக்குள் வைத்து அதை பெரிய கல்லினால் மூடினார்கள். காவலர்கள் கல்லறையை காவல் காத்தனர். வாரத்தின் முதல் நாளிலே இயேசு கிறிஸ்து உயிர்த்து கல்லறையை விட்டு வெளியே வந்தார். (மத் 28:1-15 மாற் 16:1-18, லூக்கா 24:1-49, யோவா 20:1-29, கலா 1:1, எபே 1:20) இயேசுவின் உயிர்த்தெழுதலை மறு பிறப்பு (மறு ஜென்மம்), கூடுவிட்டு கூடு பாய்தல் என்று தவறாக சொல்லவும் எண்ணவும் கூடாது. காரணம் மனிதன் மறுபடியும், பல ஜென்மங்கள் பிறப்பதில்லை. ஆனால் சிலர் பலவிதமாகத்தான் இந்த பூமியில் பிறவிகள் பல எடுக்கப் போவதாக நம்புகின்றனர். ஒருமுறை பிறந்தோம் பின்பு ஒரே முறை மரிக்கப் போகிறோம் (எபி 9:27) பின்பு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து தேவனுக்கு முன்பாக நம்முடைய நித்திய முடிவு என்னவென்று தெரிந்து கொள்ள நியாயசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும். (யோவா 5:29)

கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நம்புவதற்கு பல காரணங்கள் உண்டு. அவருடைய கல்லறை காலியாக இருந்தது. அவர் உடலை யாரும் திருடிக் கொண்டு போகவில்லை. *அப் 2:29, மத் 28:13* அதோடுகூட இன்னும் அநேகர் அவருடைய உயிர்த்தெழுதலுக்கு சாட்சிகளாக இருக்கின்றனர். *(அப் 2:32, யோவா 20:27, 28.1 கொரி 15:4-7)* மக்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பெரிதான மாற்றங்களே அவருடைய உயிர்த்தெழுதலை ஊர்ஜிதப்படுத்தியது. அவருடைய உயிர்த்தெழுதலை விசுவாசித்தவர்கள் அநேகர் இன்னும் பிரசங்கிக்க தைரியத்தையும் பெற்றுக் கொண்டனர். *(யோவா 7:5, அப் 1:14, 4:13-21, 5:42)* சவுலினுடைய மனமாற்றமும் கீழ்படிதலின் சம்பவமும் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நிரூபிப்பதாக உள்ளது. *(1 கொரி 15:8-10, அப் 9:1-22, 22:1-16)*

நாமும் இந்த உயிர்த்தெழுதலை விசுவாசிக்கவும் கீழ்படியவும் வேண்டும். *(யோவா 20:27, ரோமர் 10:9-10)* கிறிஸ்துவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலின் சாயலாகிய ஞானஸ்நானம் பெற வேண்டும். *(ரோமர் 6:1-6, கொலோ 2:12, 1பேது 3:21* ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை பணிந்து கொள்ளும் அளவுக்கு நாம் ஏவப்பட



வேண்டும். *(மத் 28:9, 17, ரோமர் 1:14, யோவான் 20:28)* நாம் பெரிய மகிழ்ச்சியை அவருடைய உயிர்த்தெழுதலால் உண்டான நம்பிக்கையோடு பெற்றுக் கொள்கிறோம். *(யோவான் 20:20, மத் 28:8, ரோமர் 6:9)* அவருடைய உயிர்த்தெழுதல் நாம் மரித்து கடைசி நாளில் உயிர்த்தெழுவோம் என்பதற்கு அத்தாட்சியாகவும் தேவனால் அருளப்பட்டது. *(ரோமர் 8:29 14:9, 1கொரி 15:20, 23 51, 54, எபே 2:6, கொலோ 1:18, 2தீமோ 1:10, வெளி 1:5, 17-18)* உயிர்த்தெழுதல் இல்லையென்ற நம்முடைய எந்த செயல்களும் விசுவாசமும் வீண் *(1கொரி 15:14-19)*. இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாகவே தேவன் நமக்கு பாவ மன்னிப்பை அருளுகிறார். *(ரோமர் 4:25, 1 பேது 3:21)* கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமையை புரிந்து கொண்டால் நாமும் உயிர்த்தெழுந்து பரலோக வீட்டை அடைய முடியும். *பிலி 3:10, யோவா 14:19, 1கொரி 6:14, 2 கொரி 4:14, 1தெச 4:14, 1 பேது 1:3* வாசிக்கவும்.

ஆரம்ப சபையானது சிலுவையைப் பற்றி பிரசங்கித்ததைப் போலவே உயிர்த்தெழுதலைப் பற்றியும் பகிரங்கமாய் பிரஸ்தாபப்படுத்தியது *(அப் 2:24, 31; 4:2, 5:30, 13:30-33, 37; 26:22-23)*

***உண்மையை சொல்லப் போனால் சபையினுடைய***

***உள்ளார்ந்த பணிகளில் உயிர்த்தெழுதலை பிரசங்கிப்பதே முக்கியமானது.***

லூக் *24:48*, அப் *1:8, 2:32, 3:15, 4:33, 5:32, 10:39-41, 13:47, 1* கொரி *11:26.*

கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு பரமேறிச் சென்றார். (லூக்கா *24:50-53* அப் *1:6-11*) கிறிஸ்து பரமேறி சென்றது. அவர் மீண்டும் அவ்விதமாகவே வரப் போகிறார் என்பதின் அடையாளமும், தேவன் அவரை மகிமைப் படுத்தியதாகவும் இருக்கின்றது (அப் *2:32-36; 7:56, 3:1-2,* எபி *1:3; 8:1*). பவுல் கிறிஸ்துவின் பாடு சிலுவை மரணத்தைப் பற்றி பேசிய பிறகு அவர் உயிர்த்தெழுதலால் மகிமைப்பட்டதை பிலி *2:9-11* வசனங்களில் விளக்குகிறார்.

இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தமான வாழ்க்கை மற்றும் தியாகமான சிலுவை மரணத்தினால் தேவன் அவரை மரித்தோரிலிருந்து உயிர்த்தெழச் செய்து வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுத்தார். (மத் *28:18*). கிறிஸ்து சபைக்கு தலையானார் எபே *1:20-23;* கொலோ *1:16-18;* அப் *4:11; 1*பேது *2:7;* மாற் *12:10*) மேலும் தேவன் அவரை இரட்சகராகவும் அதிபதியாகவும் உயர்த்தி தமது வலது பாரிசத்தில் உட்காரச் செய்தார். (அப் *5:31*) இதனுடைய அர்த்தமென்னவென்றால் இயேசுவானவர் ஜீவனுள்ளவராக இன்றைக்கும்



நமக்காக பரிந்து பேசுபவராக பரலோகத்தில் உட்கார்ந்திருக்கிறார். (ரோமர் *8:34*, எபி *1:3; 7:25, 8:11, 1*யோவா *2:1*) கிறிஸ்து ஆண்டவரும் ராஜாதி ராஜாவும் கர்த்தாவுமாக மகிமைப்படுத்தப்பட்டார். (லூக்கா *1:32-33*, வெளி *17:14, 19:16*) கிறிஸ்து பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நாமும் பூமிக்குரியவைகளையல்ல, மேலானவைகளை நாட வேண்டும். (கொலோ *3:1-2*).

## கிருபையினால் இரட்சிக்கப்படுகிறோம்
## Saved by Grace

நம்முடைய பாவத்தினிமித்தம் மரணமும் தண்டனையும் நம் மேல் வந்ததால் இரட்சிப்பு தேவனுடைய கிருபையால் மட்டுமே கிடைக்கும். கிருபையென்பது பொதுவாக தேவனுடைய தாராளமான ஈவு, தகுதியற்றவனுக்கு கிடைக்கும் ஒப்பற்ற தயவு என்று விளக்கப் படும்.

இதை மேலும் விளக்குவதற்கு ஊதாரித்தனமாக சென்று திரும்பி வந்த மகனைப் பற்றிய உவமை எப்போதுமே கையாளப்படும். (லூக்கா *15:11-32*). இவன் தன்னுடைய சொத்தின் பாகத்தை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு போனான். பாவ வழியில் பணத்தை செலவழித்தான். பணம் தீர்ந்து போன பின் பசித்ததினால் மனம் நொந்து தன் தகப்பனாருடைய வீட்டிற்குச் சென்று ஒரு வேலைக்காரனாகவாவது

இருப்பேன் என்று முடிவு செய்தான். தகப்பன் இவனை மகனாக ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. ஆனால் அவரே அவனை மகனாக பிரியமுடன் ஏற்றுக் கொண்டார்.

இரட்சிப்பை நாமாக பெற்றுக் கொள்வது அல்லது சம்பாதிப்பது முடியாத காரியம். நம் பாவத்திற்காக நாம் கிரயம் கொடுக்க முடியாது. நாமே தேவனுக்கு கடனாளிகளாயிருக்கும்போது அவரிடம் ஒன்றையும் எதிர்பார்க்கும் நிலையிலும் இல்லை. நம்முடைய நற்கிரியைகளும் நம்மை இரட்சிக்காது. ஒருவேளை நற்கிரியைகளை செய்தாலும் பெருமை பாராட்ட வழி யில்லை. காரணம் நாம் வேலைக்காரர்களாக செய்ய வேண்டியதை மட்டுமே செய்தோம் என்று ஒப்புக் கொள்ள வேண்டும். (லூக் *17:10*). அதனால் நம் சொந்த கிரியைகள் நம்மை இரட்சிக்காது (கலா *2:16*) இரட்சிப்பு கிரியையினால் கிடைக்குமானால் அது நம்முடைய சொந்தமான செயலாக இருக்குமேயொழிய தேவனுடைய கிருபையென்று எண்ணப்படமாட்டாது (ரோமர் *4:1-8*). அதேபோல அது கிருபையினால் வந்திருக்குமானால் கிரியையினால் உண்டானதல்ல (ரோமர் *11:5-6*).

இரட்சிக்கப்படுவதற்கு ஒருவன் முதலாவது மனதாழ்மையுள்ளவனாக இருக்க வேண்டும். நம்முடைய சுயகிரியையினாலேயே நாம் இரட்சிக்கப் பட முடியுமானால் தாழ்மையாய் இருக்காமல் பெருமையாக நடந்து கொள்வோம். தற்புகழ்ச்சியோடு 'நான்' என்கிற உணர்வோடு நடப்போம். அதனால்தான் நாம் பெருமைபடாதபடிக்கு கிருபையினால் இரட்சிக்கப்படுகிறோம். (ரோமர் *3:27*, எபே *2:8-9*) ஒரு தனி மனிதனாக ஒருவன் அப்போஸ்தலனாகிய பவுலைப் போல பெருமைப் பாராட்டினாலும் *(2* கொரி *11:1-12;13)* ஆனால் பவுலோ 'நானோ தேவ கிருபையினால் இருக்கிறேன்' *(1* கொரி *15:10)* என்றார். பவுல் எதைப் பற்றி பெருமை பாராட்டினார்? நானோ கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டதிருப்பேனாக. (கலா *6:14*). பெருமை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் *(1* கொரி *1:31*, *2*கொரி *10:17)*



இரட்சிப்பானது கிருபையால் கொடுக்கப்படுவதால் இலவசமான ஈவாக கிடைக்கின்றது. இதை பவுல் சொல்லும்போது, ''இலவசமாய் அவருடைய கிருபை யினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள் (ரோமர் *3:24*). தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் (ரோமர் *6:23*,

*2* கொரி *9:14-15;* வெளி *22:17)* இரட்சிப்பானது கிருபையாக கொடுக்கப்படுகிற இலவசமான ஈவு என்பதால் நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை என்று முடிவு கட்டி விடக்கூடாது. பின்வரும் அதிகாரங்களில் நம்முடைய சார்பில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்குவேன். ஆனால் இலவசமான ஈவாகிய இரட்சிப்புக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று ஒரு விஷயத்தை இப்போது பார்க்கலாம்.

இரட்சிப்பு இலவசமானதாக இருந்தும் அதை பெற்றுக் கொள்வதும் அதன்படி நம்மை நடத்துவதும் அவசியமாகிறது. நாம் கிருபையினால் இரட்சிக்கப்படு கிறோம். ஆனால் அது விசுவாசத்தின் மூலமே சாத்திய மாகிறது(எபே *2:8)*. இன்னும் நாம் மனந்திரும்ப வேண்டிய அவசியத்தையும் பிறகு பார்க்கப் போகிறோம். உண்மையில் எது நம்மை இரட்சிக்கிறது? நம் விசுவாசமா? அல்லது தேவ கிருபையா? நம் கீழ்படிதலா? அல்லது தேவ கிருபையா? முரண்பாடு போல் தோன்றுகிற இதை சிறிய உதாரணம் மூலம் விளங்கிக் கொள்ளலாம். ஒரு வேளை மதிய நேரத்தில் ஒரு பெரிய சன்னல் உள்ள அறையில் நீங்களும் இரு நண்பர்களும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அவர்களைப் பார்த்து இந்த அறையில் இவ்வளவு வெளிச்சம் வருவதற்குக் காரணம் என்ன? என்று கேட்காதீர்கள். அதற்கு



ஒருவர் இதோ இந்த சன்னல் இருப்பதால்தான் அறை வெளிச்சமாக உள்ளது என்றார். மற்றவரோ வெளியே சூரியன் பிரகாசிக்கிறது. அதனால்தான் அறை முழுவதும் வெளிச்சம் என்றார். யார் சொன்னது சரி? இருவருமே சரிதான். சூரியன் ஒளியின் ஆதாரம், ஆனால் சன்னல் வழியாகத்தான் அந்த ஒளி அறைக்குள் நுழைந்தது. சூரியன் வெளிச்சம் தந்தது. வெளிச்சமோ சன்னல் வழியாக அறைக்குள் வந்தது.

நம்முடைய இரட்சிப்பும் அப்படிப்பட்டதே சூரியன் ஒளியின் பிறப்பிடமாக இருப்பதைப் போல நமக்கு இரட்சிப்பு தேவன், கிறிஸ்து, ஆவியானவர், கிறிஸ்துவின் இரத்தம் தேவ கிருபையினால் கிடைக்கிறது. ஆனால் தேவனே இரட்சிப்பை ஒருவன் மேலும் திணிப்பதில்லை. அந்த அறையில் வெளிச்சம் வருவதற்கு சன்னல் காரணமாயிருந்ததைப் போல நமக்குள் இரட்சிப்பு கிடைப்பதற்கு விசுவாசம் தேவைப்படுது. (எபே *2:8*, ரோமர் *5:1-2)*. இதுவே மனந்திரும்புதல் இதுவே கீழ்படிதல். இதுவே ஞானஸ்நானம். நாம் ஞானஸ்நானத்தில் நம்முடைய உழைப்பினால் எதையும் பெறுவதில்லை. ஆனால் அந்த ஞானஸ்நானத்தின் வழியாக தேவன் நம்மை இரட்சிக்கிறார். இதையே பவுல் கூறும்போது, ‘‘நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம

முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (தீத்து 3:5, அப் 2:38, 22:16, 1 பேது 3:21)

இரட்சிப்பு இலவசமான கிருபையின் ஈவு என்பதால் நாம் எந்தவிதத்தில் நற்கிரியை செய்வதோ, பரிசுத்தமாய் வாழ வேண்டிய அவசியமோ இல்லை என்று தவறாக நினைக்கக்கூடாது. தேவனுடைய கிருபையை வீணாக கழிக்கக்கூடாது. அதோடுகூட நாம் விருப்பம் போல பாவம் செய்யலாம் தேவன்தானாக நம் பாவங்களை மன்னித்துக் கொண்டே இருப்பார் ரோமர் 6:1-2, 2பேது 2 :17-22, யூதா 4. ஆகையால் பவுல் சொல்வதை நிறைவாக பார்க்கும்போது...கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர் கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல என்கிறார்.( எபேசி 2:8-9)

## விசுவாசம்
## Faith

நாம் விசுவாசத்தின் மூலமாக இரட்சிக்கப்படுவதாய் இருப்பதால் இந்த வார்த்தையின் அர்த்தத்தை நன்றாக புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இயேசு சொன்னார். 'நானே அவர் என்று நீங்கள் விசுவாசியா



விட்டால் உங்கள் பாவங்களிலே நீங்கள் சாவீர்கள். (யோவான் 8:24, அப் 15:9). தேவன் ஒருவர் உண்டு என்பதை விசுவாசிக்க வேண்டும் (எபி 11:6).

இயேசு தேவனுடைய குமாரன் என்பதை விசுவாசிக்க வேண்டும் (1 யோவா 5:1, ரோமர் 10:9-10). அதாவது இயேசுவில் விசுவாசம் வைத்தால், நாம் அழிவைக் காணாமல் நித்திய ஜீவனைப் பெறுவோம் என்று வாக்குதத்தம் கூட இருக்கிறது (யோவா 3:16, 18, 36, 6:35, 11:25, 20:30-31, அப் 10:43, 16:31). நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம் (ரோமர் 3:24, 28, 5:1; கலா 2:16; 3:24)

***'விசுவாசம் என்பது அறிவில் துவங்குகிறது' மனதை ஒரு காரியத்திற்கு கொடுத்து அல்லது ஒரு சத்தியத்திற்கு செவி கொடுப்பதில் துவங்குகிறது.***

பவுல் சொல்கிறார் : அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரை தொழுது கொள்வார்கள்? அவரைக் குறித்து கேள்விப் படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? ஆகையால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். (ரோமர் 10:14-17).

ஆகவே விசுவாசமானது தேவன், கிறிஸ்துவைப் பற்றின சத்தியத்தை கேள்விப்பட்டு அதை ஏற்றுக் கொள்வதாகும். ஆனால் இரட்சிக்கப்படுகின்ற அளவு விசுவாசத்திற்கு இன்னும் நிறைய இருக்கிறது. இது வெறும் துவக்கமே. உதாரணமாக நான் ஒருவரை நல்ல மருத்துவர் என்று நம்புகிறேன், நன்றாக பயிற்சி பெற்றவர்கள், வியாதியை சரியாக கணித்து மருந்து கொடுப் பார்கள் என்று எனக்குத் தெரியும். மேலும் அவர்கள் எழுதிக் கொடுக்கும் மருந்து என் நோயை சுகமாக்கும் என்று நம்புகிறேன். ஆனால் அந்த நம்பிய டாக்டர் கொடுத்த மருந்தை சாப்பிடாவிட்டால் என் நம்பிக்கை யினாலே பயன் என்ன? அதுபோல தேவன் ஒருவர் உண்டு என்று விசுவாசிப்பதும் அவருக்கு எவ்வள வேனும் கீழ்படியாததும் விசுவாசமே அல்ல. காரணம் யாக்கோபு எழுதுகிறார். பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன. அது தேவனுடைய வல்லமைக்கு முன்பாக பயந்து நடுங்குமே ஒழிய அவருக்கு கீழ்படி யாது. அதனால் அதற்கு இரட்சிப்பும் இல்லை.

இரட்சிக்கப்படுகின்ற விசுவாசமென்பது விசுவாசித்த சத்தியத்திற்கு முற்றிலுமாக ஒப்புக் கொடுத்து கீழ்படிவதாகும். இதையே வேதத்தில் விசுவாசத்தினால் நற்சாட்சி பெற்றவர்களிடத்தில் காணலாம் (எபி *11:1-38*). நம்முடைய விசுவாசம் வெறும் அறிவாக மட்டுமே இருந்துவிட்டால் அது செத்தது அது நம்மை இரட்சிக்காது. யாக்கோபு *2:14-26* நம் விசுவாசம் செயல்வழி வெளிப்படுவதாக இருக்க வேண்டும் (கலா *5:6*). பெரும்பாலானவர்கள் மனதில் இயேசுவை தேவனுடைய குமாரனாக விசுவாசித்தால் போதும் என்பார்கள். ஆனால் இயேசுவை விசுவாசிப்பது அதை விடமேலானது. அதாவது நீங்கள் உங்கள் மனதை திருப்புகிறீர்கள், நோக்கம் மாறுகிறது, வாழ்க்கையின் திசையே மாறுகிறது. விசுவாசத்தினால் அனுதினமும் கீழ்படிந்து வாழ வேண்டியிருக்கிறது. குமாரனிடத்தில் விசுவாச மாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக் கிறது. குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை. தேவனுடைய கோபம் அவன் மேல் நிலை நிற்கும் என்றான்(யோவா *3:36*)



## மனந்திரும்புதல்
## Repentance

கிறிஸ்துவின் ராஜ்ஜியத்தின் போதனையில் மனந் திரும்புதல் மிக முக்கியமான ஒன்று (மத் *3:2; 4:17* மாற் *1:15; 6:12*) ஆரம்ப கால சபையும் இதை தாராள மாக பிரசங்கித்தது (அப் *2:38 3:19 26:20*) இயேசு வானவர் பரமேறுவதற்கு முன் சொன்னதாவது அவரு டைய நாமத்தினாலே மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் உலகம் முழுவதற்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும். பாவம் உலகத்தில் பொதுவானது. மனந்

திரும்புதலும் உலக முழுவதற்கும் அவசியமாகிறது. எல்லாரும் மனந் திரும்ப வேண்டும் என்று தேவன் கட்டளையிடுவதாக பவுல் கூறுகிறார் (அப் 17:30). நாம் இரட்சிக்கப்படுவதற்கு முக்கியமானவற்றுள் மனந்திரும்புதலும் ஒன்று. (அப் 2:38, 3:19, 11:18) ஆகவே தேவன் எல்லாரும் மனந்திரும்ப வேண்டு மென்று விரும்புகிறார், அவரும் பொறுமையாக நாம் அப்படி செய்ய வேண்டு மென்று காத்திருக்கிறார் .(2 பேது 3:9). ஒரு பாவி மனந்திரும்பும் போது பரலோ கத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது (லூக் 15:7,10)

மனந்திரும்புதல் என்றால் என்ன? கிரேக்க வார்த்தையின் அர்த்தம் என்னவென்றால் மன மாற்றம், திரும்புதல், மனதில் ஏற்படும் மாற்றம், ஒரு புதிய ஒழுக்கமான பக்தி மார்க்கத்தை துவக்குவது என்று பொருள்படுகிறது. மனந்திரும்புதல் நாம் பாவத்திற்காக மனம் வருந்துவதையும் உள்ளடக்கியது.

தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. (2 கொரி 7:10), அநேகர் இதில் குழப்பமடைகின்றனர். துக்கங்களில் பலவிதம் உண்டு. அநேகர் தாங்கள் பாவத்தில் விழுந்து



விட்டதற்காக துக்கப்படுகின்றனர். சிலரோ பாவத்தினால் உண்டான தண்டனையை பெற்றதற்காக துக்க மடைகின்றனர். நம்முடைய துக்கமும் இதைத் தாண்டி செல்லாதிருந்தால் அதை மனந்திரும்புதல் என்று சொல்ல முடியாது. மனந்திரும்புதல் என்பது நம்முடைய செயல்களுக்காக மனம் வருந்தி நம் போக்கை மாற்றிக் கொள்வது. மேலும் அப்படி மனம் வருந்தி பின்பு இன்னும் நல்ல செயல்களை செய்ய நம்மை ஒப்புக் கொடுப்பது (மத் 21:28-31). நம்முடைய வாழ்வின் திசையை மாற்றிக் கொள்வது. வேதத்திலும் பல இடங்களில், காலங்களில் மனிதர்கள் தாங்கள் மனந்திரும்பினார்கள் என்பதை தெளிவாக மற்றவர்கள் புரிந்து கொள்ளும் மாற்றங்களோடு வாழ்ந்து காட்டினார் கள் (மத் 3:8, லூக் 3:8, அப் 26:20) மனந்திரும்புதலை விளக்குவது சுலபம். ஆனால் நடைமுறையில் கடினம். உண்மையான மனந்திரும்புதல் என்பது சுயத்தை வெறுத்து தள்ள தேவனை முதலில் வைத்து வாழ ஆரம்பிப்பதில் துவங்குகிறது.

## கீழ்படிதல்
## Obedience

ஒரு மகன் தன் தகப்பனைப் பார்த்து நான் உங்களை மிகவும் அன்புகூர்கிறேன் என்று சொல்லியும் அவருடைய வார்த்தைகளுக்கு செவி கொடுக்காமலிருந்தால் அவன் சொன்னதும் செய்வதும் முரணாக உள்ளது. (மத் 21:28-31). தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் கீழ்படிவது செய்தால் பரவாயில்லை என்ற விஷயம் அல்ல. நாம் தேவனிடத்தில் அன்புகூர்வது மிகவும் அவசிய மானது. அது கீழ்படிதலோடு இருக்க வேண்டும். அவருடைய கற்பனைகளை கைக்கொள்வதே நாம் தேவனிடத்தில் அன்புகூறுகிறோம் என்பதாகும். (1 யோவா5:3, 1 யோவா 2:5, 2 யோவா :6) இயேசு சொன்னார் : நீங்கள் என்னை அன்புகூர்ந்தால் என் கற்பனைகளை கைக்கொள்வீர்கள் (யோவா 14:15 யோவா 15:10). சத்தியத்திற்கு கீழ்படிவதின் மூலம் நம் ஆத்துமாவை சுத்தமாக்கிக் கொள்கிறோம் (1 பேது 1:22) கீழ்படிகிற வர்களுக்கே இரட்சிப்பு எபி 5:9, அப் 10:34,35 கிறிஸ்து வின் சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்கள் நியாயந் தீர்க்கப்பட்டு ஆக்கினையடைவார்கள் 2 தெச 1:3-9.

சாதாரணமாக நீங்கள் இயேசுவை விசுவாசிக்கி றேன், அவரையே பின்பற்றுகிறேன் என்று சொல்வது



மட்டும் போதாது. இயேசு சொன்னார், ‘என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான். ஆனால் என் பிதாவின் சித்தம் செய்பவனோ அதில் பிரவேசிப்பான்’ என்றார். மத் 7:21 தேவனுக்கு கீழ் படிந்து நடப்பது கடினமான ஒன்று என்று சோர்ந்து போகாதீர்கள். கீழ்படிதல் இரட்சிக்கப்பட அவசியமா னது, அதனால் தேவனை அன்புகூருவதற்கு இது மலை போன்ற பாரமான விஷயம் கிடையாது. ‘‘அவருடைய கற்பனைகள் பாரமானவைகளல்லவே’’ (1யோவா 5:3). இயேசு கிறிஸ்து பரலோகம் விட்டி றங்கி அடிமை கோலமெடுத்து உன்னுடைய பாவங் களுக்காக சிலுவையில் மரித்தார் என்பதை நினைத்துப் பார்த்தால், அவரை அன்புகூருவதும் கீழ்படிவது இலேசான காரியமாகிவிடும்.

## முழு சுதந்திரம்
## Free Will

இரட்சிப்பு தேவனுடைய இலவசமான ஈவு ஆனால் நிபந்தனைகளுடையது. சுவிசேஷம் எங்கும் பிரசங்கிக் கப்படும் கேட்கிறவர்கள் கீழ்படிய வேண்டும். பாவ மன்னிப்பு இலவசமாக கொடுக்கப்படுகிறது. ஆனால் மனந்திரும்புதல் அவசியம். தேவன் இரக்கமுள்ளவர் ஆனால் நாமோ கீழ்படிய வேண்டும். இரட்சிப்பு இயேசு கிறிஸ்துவின் தியாக பலியினால் நமக்கு

கிடைத் தாலும், நாம் அவரை விசுவாசித்து முற்றிலும் கீழ்படிந்து தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்க வேண் டும். வேதாகமம் முழுவதும் மனிதனுக்கு இரண்டு தெரிந்தெடுக்கும் வாய்ப்பு அதாவது ஜீவ வழியும், மரண வழியும் (உப 30:15, அப் 2:40). நாம் எந்த பாதை யாவது தெரிந்திருக்க சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறோம். நாம் கிறிஸ்துவை பின்பற்றலாம் அல்லது தவிர்க்கலாம் (யோவா 14:6, மத் 11:28-30) நான் நம்மை பின்பற்றும்படி தேவன் பல வாய்ப்புகளை நமக்கு முன் வைத்திருக்கிறார். தேவன் நம்மை பாவங்களிலிருந்து விடுதலையாக்கிட விரும்புகிறார், ஆனால் நன்மை செய்யவோ தீமை செய்யவோ அவர் நம்மை கட்டுப் படுத்துவதில்லை.

***நாம் விசுவாசிக்கவும், மனந்திரும்பவும் கீழ்படியவும் கட்டளை பெற்றிருந்தும் அவை யனைத்திற்கும் முழு சுதந்திரம் கொடுக்கப்பட்டி ருக்கிறது.***

சிலர் மனிதன் இப்படித்தான் இருக்க வேண்டும். பாவத்தில் விழுந்து அழிய வேண்டும் என்று தேவனால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்ற தவறான கருத்தை நம்புகின்றனர். மேலும் சிலர் தேவன் ஏற் கனவே மனிதர்களில் யாரெல்லாம் இரட்சிக்கப்பட லாம், யாரெல்லாம் அழிவை காண வேண்டும் என்று தீர்மானித்து விட்டார். அதனால் நாம் தெரிந்தெடுப்ப தற்கு ஒன்றுமில்லை என்றும் தவறான எண்ணங் கொண்டுள்ளனர். நன்மை தீமையை தெரிந்தெடுக்கும் முழு சுதந்திரத்தை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். (யாக் 4:17 யோவா 7:17 அப் 13:46) தேவனோ நம்மை இரட்சிக்கப்படும்படி கீழ்படியச் சொல்கிறார் (1தெச 2:12 1 தீமோ 6:12 எபி 9:15 1 பேது 2:9) இந்த அழைப்பு சுவிசேஷத்தின் மூலமாக ஒவ்வொரு மனிதனுக்கும் அறிவிக்கப்படுகிறது (2 தெச 2:14) நாம் நம் முடைய தெரிந்தெடுத்தலை மனம், விருப்பம், இருதயத்தை மாற்றிக் கொள்ளும் மனந்திரும்புதல் வழியாக காண்பிக்கிறோம்.



நாம் மனந்திரும்புவதும் திரும்பாமல் இருப்பதும் தேவனால் ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஒன்றல்ல. உலகம் உண்டாவதற்கு முன்னமே தேவன் சில தீர்மானங்களை திட்டங்களை வகுத்திருந்தார். அதாவது கிறிஸ்துவின் மூலம் உலகத்தின் பாவம் மன்னிக்கப் படும். (அப் 2:23 1 பேது 1:18-20). முன் குறித்தலைப் பற்றி வேதம் பேசுகிறது. ஆனால் இது ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனையும் தேவன் முன்னே இரட்சிக் கப்படுவதா, கூடாதா என்று தீர்மானித்துவிட்டார் என்று அர்த்தமல்ல. இது தனி நபரை முன் குறித்தது அல்ல பொதுவான முன் குறித்தல் திட்டம் யாரெல்லாம் இயேசு கிறிஸ்துவை

விசுவாசித்து அவருக்கு ஏற்ற குறிப்பிட்ட வாழ்க்கை வாழுகிறார்களோ அவர்கள் இரட்சிக்கப்படுவார் என்று தேவன் முன் குறித்தார். *(ரோமர் 8:28, 30, எபே 1:4-5 2 தெச 2:13)*

இந்த முன்குறித்தலை பள்ளி ஆசிரியரோடு ஒப் பிட்டு பார்க்கலாம். ஒரு ஆசிரியர் பிள்ளைகள் யாரெல் லாம் வெற்றி பெறுவார்கள் யாரெல்லாம் தோல்வி யடைவார்கள் என்று படிக்கவோ பரீட்சை கொடுக்க வோ வாய்ப்பு கொடுக்காமல் தீர்மானித்திருந்தால் அது நல்லதல்ல. மேலும் அதே ஆசிரியர் 90-100 மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு 'A' என்றும், 80-89 வரை பெற்ற மாணவர்களுக்கு 'B' என்றும் தீர்மானித்திருந்தால் அது நல்லது. காலங்களுக்கு முன்பாகவே தேவன் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப் பவர்கள், பரிசுத்த வாழ்க்கை வாழுபவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று தேவன் தீர்மானித்திருந்தார். இயேசுவை தள்ளி விடுபவர்கள் பாவ வாழ்விலே மாண்டு விடுவார்கள். நாமே நன்மை தீமையை பகுத்து எதையும் தெரிந்தெடுக்கிற அதிகாரத்தை பெற்றிருக் கிறோம்.



## ஞானஸ்நானம்
## Baptism

ஞானஸ்நானம் மிகவும் முக்கியமானது. காரணம் இதில்தான் ஒருவன் சபையில் சேர்க்கப்படுகிறான். ஞானஸ்நானம் என்பதின் கிரேக்க வார்த்தை 'Baptizo.' ஞானஸ்நானம் ஒரு மனிதனுக்கு முழுவதுமாக தண்ணீரில் முழுகும்படி கொடுக்கப்பட வேண்டும். அந்த கிரேக்க வார்த்தையின் அர்த்தம், முழுகுதல், முற்றிலும் நீருக்குள் அழுத்தப்படுதல் ஆகும். இதற்கு தெளித்தல் என்றோ ஊற்றுதல் என்றோ அர்த்தமல்ல. கிரேக்க வார்த்தையின் அர்த்தத்திற்கு போகாமலே ஞானஸ்நானம் என்றால் முழுகுதல் என்பது மறுக்க முடியாத உண்மை. ஞானஸ்நானம் ஒரு மனிதன் பாவத்திலிருந்து மனந்திரும்பி பழைய பாவ வழிக்கு மரித்துப் போகிறான் என்பதை காண்பிக்கிறது. தண்ணீருக்குள் முழுகும்போது பழைய வாழ்க்கைக்கு பின்னாக தள்ளப்படுகிறது. தண்ணீரிலிருந்து எழுந்தி ருக்கும்போது புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடக்கும் படி புதிய மனிதனாக எழுந்திருக்கிறோம். அது முதல் தெய்வ பக்தியும் பரிசுத்தமான வாழ்க்கையை கிறிஸ்துவை பின்பற்றுகிற கிறிஸ்தவனாக வாழ வேண் டும் *(ரோமர் 6:3-6 கொலோ 2:12)*

முதல் நூற்றாண்டு காலத்தில் தண்ணீர் மிகுதியாக இருந்த இடங்களில் ஞானஸ்நானமானது முழுக்குத

லாக கொடுக்கப்பட்டது நாம் அறிந்த உண்மையே (யோவா *3:23* மாற் *1:4-5* அப் *8:36*). ஒருவேளை ஞானஸ்நானம் தெளித்தலாக இருக்குமானால் கொடுப் பவர் ஒரு பாத்திரம் அல்லது பையில் தண்ணீரை சுமந்து செல்ல வேண்டும். நிச்சயமாகவே ஞானஸ்நா னம் ஒரு மனிதன் முழுகும் அளவிற்கு தண்ணீர் அதிகமாக உள்ள இடத்திற்கு போக வேண்டும். தண்ணீர் கொஞ்சமாகத்தான் இருந்தால் என்ன செய்வது என்று கேட்கலாம். தண்ணீரின் அளவு இங்கே பேச வேண் டிய விஷயமல்ல, தேவனுடைய கட்டளைப்படி முழுகுதல்தான் கீழ்படிய வேண்டியது. எல்லாவற்றிற் கும் மேலாக முழுகுதலின் நோக்கமே நாம் பாவத்திற்கு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு பின் புதிய மனுஷனாக எழுந்திருப்பதை பாவனையாக செய்வதைக் குறிக்கிறது.

**யார் ஞானஸ்நானம் பெற வேண்டும்?** விசுவாசமுள்ளவனாகி மனந்திரும்பின ஒருவர் ஞானஸ்நானம் பெறலாம் (மாற் *16:16* அப் *2:38*) யார் ஒருவர் இயேசுவைப் பின்பற்றி கிறிஸ்தவனாக வாழ தீர்மானிக்கிறார்களோ அவர்களே ஞானஸ்நானம் பெற முடியும். சிறு குழந்தைகளுக்கு சத்தியத்தை புரிந்து விசுவாசிக்கும் வயது இல்லை. ஆனால் பெரும்பா லான சபைகள் குழந்தைகளுக்கு பாரம்பரியமாக சடங்காச்சாரம் போல மனிதக் கட்டளைகளுக்கு



கீழ்படிந்து ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவோ அப்போஸ்தலர்களோ அப்படியேதும் சொல்லவில்லை. ஆகவே சிறு குழந்தைகள் ஞானஸ்நானம் எடுக்க வேண்டியதில்லை. காரணம் சிறு குழந்தைகளுக்கு பாவம் இல்லை அவைகள் பழுதற்றதாக இருக்கிறது (மத் *18:2-4*, *19:13-15*, ரோமர் *9:11*, *1*கொரி *14:20*, உபா *1:39*) குழந்தைகள் மரித்தால் நிச்சயம் பரலோகம் போகும். (எபேசி *2:3* சங் *51:5*)ன் வசனத்தின்படி குழந்தைகள் பாவத்தில் பிறக்கிறார்கள் என்றும் அதனால் சிறு குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தால்தான் ஆதாமிடமிருந்து ஒட்டிக்கொண்டு வந்த ஜென்ம பாவம் தீர்ந்து போகும் என நம்புகின்றனர். எபேசிய கிறிஸ்தவர்கள் ஒரு காலத்தில் கோபாக் கினையின் பிள்ளைகளாக இருந்தார்கள் என்றால் சிறு குழந்தைகள் என்று அர்த்தமல்ல அவர்கள் எப்படிப் பட்டவர்களாக கிறிஸ்துவுக்கு முன் இருந்தார்கள் என்று பவுல் இடறுகிறார். (எபே *2:3*, மாற்கு *3:17*, யோவா *12:36* அப் *4:36*, *1* தெச *5:5*, எபே *2:2*, *5:6,8*) எபேசிய கிறிஸ்தவர்கள் நல்ல வயதுள்ளவர்களாக இருந்த போதே இப்படி சொன்னார். அவர்களுடைய குழந்தைப் பருவத்தைப் பற்றி அவர் பேசவில்லை. அவர்கள் பாவவழியை பின்பற்றினபடியால் கோபாக்கினைக்கு பாத்திரரானார்கள் எபேசியர்கள் பாவ வாழ்க்கை முறையை பின்பற்றினார்கள்.

பாவ வாழ்வையும் தீமையான பாதையையும் அவர்களாகவே தெரிந்தெடுத்து வாழ்ந்தார்கள். அவர்கள் பிறப்பால் பாவிகளாக பாவத்தை சுமந்து கொண்டு பிறக்க வில்லை. சங்கீதத்தில் தாவீது தான் பாவ உலகத்தில் பிறந்ததைப் பற்றி குறிப்பிடுகிறார் *(சங் 51ஃ5, ஏசா 48ஃ8, 1சாமு 20ஃ30)*

வயதுள்ளவர்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு காரணம் பாவ மன்னிப்பை பெறுவதற்காக. சிறிய குழந்தைகளுக்கு இது அவசியமில்லை. ஞானஸ்நானம் என்கிற செயல் நம்மை இரட்சிப்பதில்லை. ஒருவர் சத்தியத்தை கேட்டு விசுவாசித்து அதை எடுக்கும்போதே பிரயோஜ னம். *(1 பேது 3ஃ21)* என்ன நடக்கிறதென்றே தெரியாமல் சிறு பிள்ளைகள் ஞானஸ்நானம் பெறுவது எவ்விதத்திலும் பயனில்லை. மாறாக அந்த பிள்ளைகள் வளர்ந்த பின் அவர்களுடைய பாவ மன்னிப்பைப் பற்றிய குழப்பம் அதிகரிக்கும். ஆகையால் ஞானஸ்தானமானது தேவனை விசுவாசித்து மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை நாவினால் அறிக்கைப் பண்ணக்கூடிய வயதுள்ளவர்களுக்கே தகும். அவர்களே இயேசுவின் வழியில் தீர்மானத்தோடு நடக்க முடியும். *(அப் 8ஃ12, 36, 16ஃ33, 18ஃ8)*

**ஏன் ஒருவன் ஞானஸ்நானம் பெறுகிறான்?**



நம்முடைய பாவ மன்னிப்பை பெறும்படிக்கு தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் கீழ்படிவதற்காக *(மத் 28ஃ18,19)*, மேலும் பாவங்கள் கழுவப்பட *(அப் 22ஃ16, எபி 10ஃ22)*, ஆவியானவர் நமக்குள் வந்து வாசமாயிருக்க *(அப் 2ஃ38, 5ஃ32, ரோமர் 8ஃ15 2கொரி 1ஃ22, 5ஃ5; கலா 4ஃ6, எபே 1ஃ13–14)* இரட்சிப்படைய *(மாற்கு 16ஃ15,16, 1 பேது 3ஃ21)* கிறிஸ்துவுக்குள் ஐக்கியமாக *(ரோம 6ஃ3-6)*. கிறிஸ்துவை தரித்துக் கொள்ள *(கலா 3ஃ26, 27)*, சபையின் அல்லது கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவமாக மாறிட *(எபே 1ஃ22, 23 அப் 2ஃ41,47)* பரிசுத்தமாக *(எபே 5ஃ25,27)* மறுபடியும் பிறந்து ஆவியில் புது சிருஷ்டியாக மாற *(யோவா 3ஃ5 தீத்து 3ஃ5)* ஞானஸ்நானம் பெறுகிறோம்.

விசுவாசம், மனந்திரும்புதல் இல்லாமல் எடுக்கிற ஞானஸ்நானம் பிரயோஜனமல்ல. நம்முடைய சொந்த நற்கிரியைகளால் நாம் இரட்சிக்கப்பட முடியாது. பாரம்பரிய சடங்குகள் நம் ஆத்தும பாவத்தை எடுத்துப் போடுவதில்லை. *(1 பேது 3ஃ21)*.

***நாம் தேவனை விசுவாசிக்கிறோம் என்பதை கிரியையில் நிரூபிப்பதும் அவருடைய நாமத்தை தொழுது கொள்வதுமே ஞானஸ்நானத்தின் செயல்பாடு. (அப் 22ஃ16, ரோமர்10ஃ13)***

அதோடு கூட சுத்த மனசாட்சியையும் பெறுகிறோம் (1 பேதுரு 3:21). தேவனுடைய பார்வையில் ஞானஸ்நானத்தில்தான் அவர் கிறிஸ்து வின் இரத்தம் நம்மை சுத்திகரிக்கும் செயலை வைத்துள்ளார் (ரோமர் 6:3-6). ஞானஸ்நானத்தில் நாம் முழுகி எழுந்திருக்கும்போது கிறிஸ்து உயிர்த்தெழுந்த சாயலை அடைந்து நாமும் ஒரு நாள் உயிர்த்தெழுவோம் என்கிற நம்பிக்கையை பெறுகிறோம் (1பேது 3:21) வரலாற்றை திரும்பிப் பார்த்தால் இந்த ஞானஸ்நானம்தான் கிறிஸ்தவனையும் மற்ற மனிதரையும், சபையின் அங்கத்தினரையும் மற்றவரையும் இரட்சிக்கப்பட்டோரையும் மற்றவரையும் பிரித்துக் காண்பிக்கிறது.

ஒருவேளை ஞானஸ்நானத்திற்கு முன்பு ஒருவர் இயேசுவை ஓரளவுக்கு விசுவாசிக்கவும் சில மாற்ற மான செயல்களை செய்யலாம். ஆனால் கிறிஸ்துவுக்குள் இன்னும் வரவில்லை (ரோமர் 6:3-6 கலா 3:27). ஞானஸ்நானம் ஒரு திருமணத்துக்கு ஒப்பாக இருக்கிறது. இதின்தான் இயேசுவை தேவனுடைய குமாரனென்று வாயினால் ஒப்புதல் அறிக்கை செய்து நாம் இனி அவருக்கு உண்மையாக இருப்போம் என்று தெரிவிக்கிறோம் (1 தீமோ 6:12, 13, 1 யோவா 4:2, 3 15; மத் 10:32,33; லூக் 12:8,9; ரோமர் 10:9,10) ஞானஸ்நானத்திற்கு முன் பாவத்தோடே(கிறிஸ்துவுக்கு வெளியே) நம்பிக்கையற்றவர்களாக நிற்கிறோம். (எபே 2:12) கிறிஸ்துவுக்குள் சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் (எபே 1:3) இரட்சிப்பும் (2 தீமோ 2:10) பாவ மன்னிப்பும் (எபே 1:7 கொலோ 1:14) உண்டு. ஞானஸ்நானத்தில்தான் தேவன் நம்மை கிறிஸ்துவுக்கு வெளியேயிருந்து கிறிஸ்துவுக்குள்ளே கொண்டு போகிறார் (ரோமர் 6:3 கலா 3:27)



இயேசுவை விசுவாசிப்பவர்கள் மட்டுமே ஞானஸ்நானம் பெற முடியும் (மாற்க் 16:16), பாவத்தி லிருந்து மனந்திரும்பி (அப் 2:38) கிறிஸ்துவின் சீஷனாக வாழுவேன் என்ற தீர்மானம் எடுக்கிற (1 பேது 3:21) எவர்களும் ஞானஸ்நானம் பெறலாம். ஞானஸ்நானம் எங்கே எடுப்பது? சரியான விசுவாசத்தை பெற்ற நீங்கள் சரியான சத்தியத்தை போதிக்கிற சபை யின் போதகரை அணுகி ஞானஸ்நானம் பெறலாம். ஒருவேளை அங்கே உங்களை சில மனித கோட்பாடு/ கட்டளைகளுக்கு (வேத வசனத்திற்கு புறம்பாக) கீழ் படிய சொன்னால், அங்கிருந்து விலகி வேறு இடத்தை நாட வேண்டும். சிலர் ஞானஸ்நானமானது வெறும் வெளிநடப்பு அடையாளமான சடங்கு மட்டுமே அதற் கும் இரட்சிப்புக்கும் சம்பந்தமே அல்ல என்றால் அதுவும் தவறானது. (அப் 2:38, 22:16 மாற்கு 16:16, 1 பேதுரு 3:21) ஒருவருமே ''உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க இல்லாதபட்சத்தில் உங்கள் நண்பரே உங்களுக்கு உதவி செய்யலாம். தண்ணீர்

மிகுதியாக உள்ள இடத்திற்கு சென்று உங்கள் பாவ மன்னிப்புக்கென்று உணர்ந்து, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்து ஞானஸ்நானம் பெற வேண்டும். ஞானஸ்நானம் கொடுப்பவர், 'உங்கள் பாவ மன்னிப்புக்கென்று பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே' என்று சொல்லி உங்களை தண்ணீருக்குள் அடக்கப் பண்ணுவது போல் மூழ்கி எடுக்க வேண்டும். (மத் 28:19; அப் 2:38).

இப்படி ஞானஸ்நானம் பெற்றவுடன் நீங்கள் புதிய குழந்தையை போல தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிறந்து விட்டீர்கள் (1 பேது 2:2). பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வந்து விடுகிறார். (1 கொரி 6:11, எபே 5:25-27, 1 கொரி 3:16-17; 6:19-20) கிறிஸ்து மரித்து கட்டிய சபையின் அங்கத்தினராக மாறி விட்டீர்கள். (மத் 16:18; அப் 20:28) உங்கள் பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டுவிட்டது, பரலோகம் செல்லும் கிருபை கிடைத்துவிட்டது. (வெளி 20:15). உங்கள் பாவங்கள் முற்றிலுமாக கழுவப்பட்டுவிட்டன (அப் 22:16). இதனால் இனி எப்போதுமே பாவமே செய்யமாட்டீர்கள் என்று அர்த்தமல்ல. (ரோமர் 7:15-25). சோதனைகள் தொடர்ந்து நமக்குண்டு. ஆனால் திரும்ப பாவம் செய்தவுடன் மீண்டும், மீண்டும் ஞானஸ்நானம் எடுக்க வேண்டிய



அவசியமில்லை. பாவம் செய்தவுடன் மனந்திரும்பி தேவனிடம் கொடுத்து மன்னிப்பு கேட்டால் அவர் நம்மை மன்னிக்க உண்மையுள்ளவரா யிருக்கிறார் (1 யோவா 1:6-10). அதோடுகூட பாவ சமுதாயத்தை விட்டு விலகி தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுகிற பரிசுத்தவான்களோடே ஐக்கியமாக இருக்க வேண்டும். அப்போது யாவரோடும் சேர்ந்து பெலனடைந்து எச்சரிப்பு, புத்திமதி, ஆலோசனைகளைப் பெற்று நல்ல கிறிஸ்தவனாக வளர முடியும்.

## கிறிஸ்தவ வாழ்க்கை
## Christian Life

கிறிஸ்துவுக்குள் கீழ்படிந்தவுடன் அந்த நிமிடத்தி லிருந்து தேவனுக்கு பிரியமான வாழ்க்கை செய்ய வேண்டும். அப்படியல்லாமல் கிறிஸ்துவை விட்டு விலகி அவிசுவாச வாழ்க்கை செய்தால் இரட்சிப்பை இழந்துவிடுவோம். சிலர் ஒருமுறை ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டால் போதும். பிறகு எப்படி வாழ்கிறோம் என்பது முக்கியமல்ல இரட்சிப்பு மாறி விடாது என்று தவறாக போதிக்கிறார்கள். இது வேதத் திற்கு புறம்பான போதனை (1 கொரி 9:27; 10:5-12; கலா 5:1:4; 1 தீமோ 4:1,16, 2 தீமோ 4:10; எபி 3:12; 6:4-8; யாக் 5:19,20 2 பேது 2:20-22; வெளி 2:4,5;

லூக் *8:11-15* யோவா *15:44)* ஒரு முறை பெற்ற இரட்சிப்பை இழந்து விடமாட்டோம் என்றால் தேவனுக்கு பயந்து வாழ நமக்கு எண்ணமே வராது. தேவனுடைய கிருபையானது நமக்கு பாவ மன்னிப்பை கொடுப்பதோடு மட்டுமல்ல, நம்முடைய வாழ்க்கையை மாற்றவும் உதவுகிறது. பவுல் தீத்துவுக்கு..... ''ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி'' (தீத்து *2:11,12*) என்று எழுதுகிறார்.

அப்படியானால் ஒரு கிறிஸ்தவனாக எப்படி வாழ்வது? முதல் நூற்றாண்டு காலக் கிறிஸ்தவர்களை 'அந்த மார்க்கத்தார்' என்று அழைத்தனர். அதாவது ஒரு குறிப்பிட்ட பாதையில் செல்கிறவர்கள் (அப் *9:2 19:9, 23; 22:4 24:14,22)* பாதையென்பது நம்முடைய வாழ்க்கையை குறிக்கிறது. எப்படிப்பட்ட நடத்தையோடு வாழ்கிறோம் என்பதே அதன் அர்த்தம். இயேசு சொன்னார், 'நானே வழி' (யோவா *14:16)* அதன் வழியில் தான் ஒருவன் பரலோகம் செல்ல முடியும். அவரைப் போல நாம் எப்படி நடக்கிறோம் என்பதே அவர் வழியில் நடக்கிறோம் என்பதாகும். நல்லவழி, கெட்டவழி



என்றும் பரிசுத்தவழி, அசுத்தவழி என்றும் மரணத்திற்கு போகிற வழி ஜீவனுக்கு போகிற வழி என்றும் ஆவிக்குரிய வழி, மாம்சத்தின் வழி என்றும் பல வழிகள் உள்ளன.

ஆனால் ஒரு கிறிஸ்தவனோ 'நீதியின் பாதையில்' நடக்க வேண்டும் *(2* பேது *2:21* மத் *7:13,14;* லூக் *13:23, 24)*

கிறிஸ்தவ வாழ்க்கையில் நம் நடக்கை பெரிதும் முக்கியமாக பேசப்படுகிறது. அதனால் அப்போஸ் தலர்கள் நாம் நடக்க வேண்டிய விதங்களை தெளிவாக எழுதி வைத்துள்ளனர். ''அவருக்குள் நிலைத்திருக்கி றேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும். *1* யோவா *2:6* இதற்கு எதிராக நாம் பாவ வழியில் அநீதியின் பாதையில் நடக்கக் கூடாது. (ரோமர் *8:4,* எபே *2:1-2,* கொலோ *3:5-7, 2* தெச *3:6, 11; 1* யோவா *1:6 2:4)* இன்னும் சொல்லப் போனால் நாம் ஆவிக்கேற்றபடி நடக்க வேண்டும், ஒளியில் நடக்க வேண்டும், சத்தியத்தில் நடக்க வேண்டும். (ரோமர் *8:4, 2* கொரி *5:7,* கலா *5:16* எபே *2:10, 4:1; 5:2, 8, 15* கொலோ *1:10 2:6; 4:5; 1* தெச *2:12; 1* யோவா *1:7; 2* யோவா *4:6 3* யோவா *3,4)*

அந்தப்படி முந்தின நடக்கைக்குரிய மோசம் போக் கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழைய

மனுஷனை நீங்கள் களைந்து போட்டு (எபே 4:22) புதிய மனுஷனை தரித்துக் கொள்ளுங்கள். (எபே 4:24, கொலோ 3:5-9). கிறிஸ்தவன் வித்தியாசமான ஒரு புதிய வாழ்க்கை வாழ வேண்டும் என்பது தெளிவாகிறது.

கிறிஸ்தவ வாழ்க்கை முறையை எவ்விதம் விளக்குவது? பழைய ஏற்பாட்டில் உள்ளதைப் போன்ற வரிசையான பத்துக் கற்பனைகள் நமக்கு இல்லை. புதிய ஏற்பாட்டு உபதேசங்கள் எல்லாம் ஒட்டுமொத்தமாக நம்மை தேவனுடைய சாயலுக்கு நேராக வளரும்படி ஏவுகிறது. அவருடைய சாயல், அவருடைய பரிசுத்தம் என்று உயரிய நிலையை அடையவே நாம் கிறிஸ்துவுக்குள் அழைக்கப்பட்டிருக்கிறோம் (எபே 4:24, கொலோ 1:10). பரலோகத்தின் தேவனைப் போல பூரண சற்குணராயிருங்கள் (மத் 5:48) பிதாவானவர் இரக்கமுள்ளவராயிருக்கிறது போல நீங்களும் இரக்க முள்ளவராயிருங்கள் (லூக் 6:36) நம்மை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நாமும் பரிசுத்தராயிருக் கும்படி எதிர்பார்க்கப்படுகிறோம் (1 பேது 1:15, 16) கிறிஸ்துவே நமக்கு நல்ல மாதிரி (பிலி 2:5, 1 பேது 2:21-24 1 கொரி 11:1). நாம் இதைப் போல பூரணத் துவத்தை அடைந்துவிடவில்லையென்றாலும் அப்படியிருக்க முயற்சித்தாலும் பரிபூரண வாழ்வை வாழ வேண்டும். மனித சக்தியினால் பூரண புருஷராக



பரிசுத்தமுள்ளவர்களாக மாறுவது கடினமாயிருந்தாலும் தேவனுடைய ஒத்தாசையால் அன்பால் இதை அடைய முயற்சிக்க வேண்டும்.

புதிய ஏற்பாட்டில் நம்மை பாத்திரமாக நடந்து கொள்ளுங்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் தகுதியாக, பாத்திரமாக, ஏற்றாற் போல நடந்து கொள்ள வேண்டும். ‘‘சுவிசேஷத்தின் விசுவாசத்திற்கு பாத்திரமாக நடந்து கொள்ளுங்கள்’’ (பிலி 1:27). தேவனுக்கு பாத்திரமாக (1 தெச 2:12) கர்த்தருக்கு பிரியமாக (கொலோ 1:10) அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரமாக நடந்து கொள்ளுங்கள் (எபே 4:1) எப்படிப்பட்ட அழைப்பு? தேவன் நம்மை அசுத்தத்திற்கு அல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார் (1 தெச 4:7, 1 தீமோ 4:9, எபே 1:4) இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடம் அழைத்திருக்கிறார். (1 பேது 2:9). தேவன் நம்மை தம்முடைய பிள்ளைகள் என்று அழைக்கிறார் (1 யோவா 3:1) பரிசுத்தராகும்படி அழைத்திருக்கிறார் (ரோம 1:7; 1 கொரி 1:2) போப் என்ற மனிதர் வகுத்து முத்தரிப்பவர் பரிசுத்தவான் அல்ல. ஒவ்வொரு கிறிஸ்தவனும் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுகின்றது. அந்த பரிசுத்தமாகுதலை ஞானஸ்நானத்தில் பெற்றிருக்கிறோம் (1 கொரி 6:11, எபே 5:25-27) தேவன் நம்மை பரிசுத்தராகும்படி

அழைத்ததினாலே நாம் பரிசுத்தராய் நம்மை சீர்படுத்தி நடக்க வேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கையின் இதயமே அன்பு *(1 கொரி 13:1-3, 13).* ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் *(ரோம 13:8)* உன்னிடத்தில் நீ அன்புகூர்வது போல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப் பிரமாணம் முழுவதும் நிறைவேறும். *(கலா 5:14, யாக் 2:8, மத் 22:36-40, 1 கொரி 13:4-7)* நாம் பிறரை அன்புகூருவதற்கு கிறிஸ்துவே சிறந்த மாதிரி *(எபே 5:2, 25; 1 யோவா 3:23)* அவர் நம்மில் அன்புகூர்ந்ததைப் போல நாமும் ஒருவரிலொருவர் அன்புகூற வேண்டும் *(யோவா 13:34, 15:9-12).* கிறிஸ்தவனுடைய வாழ்வில் அன்பு முக்கியமானதாக இருப்பதற்கு காரணம் நாம் உள்ளான மனிதனில் எப்படியிருக்கிறோமோ அப்படியே வெளியே நடந்து கொள்வோம் . *(மத் 12:3-35, 15:18, 19; 23:25, 26 லூக் 6:43,44)* முற்றிலும் நல்ல மனிதனாக வாழ நம்முடைய மனமும், குணமும் மாற வேண்டும் *(ரோம 12:1,2, சங் 51:10, 119:36, 2 கொரி 10:5, எபே 4:22,23)* உள்ளான மனிதன் அன்பும், பரிசுத்தமுள்ளவனாக இருந்தால் நம்முடைய நடத்தைகள் நல்லதாக இருக்கும்.



இன்னும் அநேக நற்குணங்கள் நம்முடைய வாழ்க்கை இருக்க வேண்டும் என்று வேதம் தெளிவாக சொல்லியிருக்கிறது. *மத் 5:3-9, கலா 5:22, 23 கொலோ 3:12-13 1, தீமோ 6:11, யாக் 3:13, 17,18, 2 பேது 1:5-7* இப்படி நற்குணங்கள் இருக்க வேண்டும் என்று பார்க்கிற நாம் இருக்கக்கூடாதவைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். *(ரோம 1:29-31, 1 கொரி 6:9, 10 கலா 5:19-21, கொலோ 3:5-10, 1 தீமோ 1:9-11 2, தீமோ 3:2-5, யாக் 3:14-16, 1 பேது 2:1,2)*

நல்ல கிறிஸ்தவ வாழ்க்கை வாழ அனுதினமும் வேதத்தை வாசித்து அதன் சத்தியங்களை கைக்கொண்டு வந்தால் தேவ சாயலையும் அடைய முடியும். காரணம் வேத வாக்கி யங்கள் ஒருவனை தேறினவனாக நிறுத்த வல்லமை யுள்ளது. *(மத் 5:1-7, 28; 18:1-35, ரோமர் 12:1-14, எபே 4:17-6:20, கொலோ 3:1-4, 6, 1 தெச 4:1-12, தீத்து 2:1-11, எபி 12:1-13, 19, யாக்கோபு 1:2-5; 20, (1 பேது 2:11-5:11)* கிறிஸ்தவர்கள் தேவ பக்தியில் வளர வேண்டும்.*(1 தீமோ 4:7,1 தீமோ 6:11).*

## சபை
## Church

சபை என்ற வார்த்தையின் கிரேக்க பதத்திற்கு கூடுகை, கூட்டம் ''பிரத்யேகமாக அழைக்கப்பட்டவர்களின் சபை'' என்று பொருள்படும். சபை என்றவுடன் உயரமான கோபுரமுடைய, மண் கூண்டுள்ள கட்டிடம் என்று நினைத்தால், தவறு. சபையாக கூகூடுவதற்கு ஒரு கட்டிடம் நிலம், இடம் இருப்பது அவசியம், ஆனால் இயேசுவால் இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டமே சபை. அடுத்து சபை என்றவுடன் தலைமை போதகர், அதிகாரமுடைய பிஷப்புகள் தலைமை ஸ்தாபனம் போன்ற நிர்வாக அமைப்புகளும் நினைவுக்கு வருவது நல்லதல்ல, மாறாக, இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்ட மே சபை. புதிய ஏற்பாடானது எழுதப்படுவதற்கு முன்பே, யூதர்கள் பழைய ஏற்பாட்டை கிறிஸ்துவுக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் கிரேக்க மொழியில் மொழிபெயர்த்தபோது தேவ ஜனங்களை சபையார் என்று குறிப்பிட்டனர். அதேபோல புதிய ஏற்பாட்டில் சபையார் என்றால் இரட்சிக்கப்பட்ட தேவனுடைய ஜனம்.

***சபை என்பது உலகளாவிய கிறிஸ்தவர்களை உள்ளடக்கியது.*** அதையே இயேசு கிறிஸ்து ''நான் என் சபையை கட்டுவேன்'' என்றார் (மத் 16:18).



மேலும் சபை என்பது அது இருக்கும் இடத்தை வைத் தும் அடையாளம் காண்பிக்கப்படுகிறது. உதாரணமாக 'கொரிந்து சபை', (1 கொரி 1:2) சபை என்பது ஜனங்கள் சேர்ந்து தேவனை தொழுது கொள்ளுகிற கூடுகையையும் காண்பிக்கிறது. (1 கொரி 11:18; 14:19). வேதத்தில் சபையானது பலவிதமான அர்த்தமுள்ள பெயர்களால் அடையாளப்படுத்தப்படு கிறது. இந்த பெயரால்தான் அழைக்கப்பட வேண்டும் என்று தனியொரு பெயர் சொல்லப்படவில்லை. சபை இருக்கும் பட்டணத்தின் பெயரால் அநேக முறை அழைக்கப்பட்டிருக்கிறது. இதே முறையில்தான் புதிய ஏற்பாட்டில் சபையானது அழைக்கப்பட்டது. எருசலேமில் உள்ள சபை அல்லது பிற பட்டணங்களில் உள்ள சபை (அப் 8:1, 11:22, ரோம 16:1, 1 கொரி 1:2, 2 கொரி 1:1, 1தெச 1:1, 2 தெச 2:14, 1 கொரி 16:1, 19, வெளி 1:4) இன்னும் சபையார் ஒரு சிலரு டைய வீட்டில் கூடி வந்ததும் தெளிவாக வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரோம 16:5 1 கொரி 16:19 பிலமோன் 2 வசனம்.

அடுத்து, சபையின் மூலமாக தேவன், கிறிஸ்து மகிமைப்பட வேண்டுமேயொழிய மனிதர்களோ அதா வது பவுல், பேதுரு, மரியாள் அல்லது யோவான் அல்ல என்று புதிய ஏற்பாடு மிகத் தெளிவாக சொல்லி யிருக்கிறது (1 கொரி 1:10-17)

ஆகவே சபை தேவனு டைய வீடு என்றழைக்கப்படுகிறது (1 தீமோ 3:15) தேவனுடைய சபை 1 கொரி 1:2; 10:32; 11:16,22; 15:9; 2 கொரி 1:1 கலா 1:13; 1 தெச 2:14; 2 தெச 1:4, 1 1 தீமோ 3:15 கர்த்தருடைய சபை (அப் 20:28 சில மொழிபெயர்ப்புகளில்) கிறிஸ்துவின் சபை (ரோமர் 16:16). சில மனிதர்களின் பெயர் அல்லது கொள்கை களை முதன்மைப்படுத்தி அதையொட்டிய பெயர் என்று வைக்காமல் இயேசு கிறிஸ்துவின் நாமத்தி னாலே பிதாவுக்கு மகிமையான பெயராக இருப்பது அவசியம். காரணம் சபை தேவனுக்கு சொந்தமானது!

சபையின் தன்மை, நிலை, ஆட்சியமைப்பு பல உதாரணங்களில் (உருவகங்களில்) பேசப்பட்டுள் ளது. சபையானது கட்டிடம் அல்லது வீட்டுக்கு ஒப் பாக (1 கொரி 3:9, எபி 3:6, 1தீமோ 3:15) சொல்லப்படு கிறது. சபையானது தேவ ஆலயம் என்று, தேவன் வாசம் பண்ணும் இடமாக சொல்லப்பட்டுள்ளது. (1 கொரி 3:16-17, 6:19,20) இந்தக் கட்டிடம் அல்லது ஆலயம் கற்களால் ஆனதல்ல. மனிதர்களே ஜீவ னுள்ள கற்களாக அமைந்து கட்டப்படுவது (1 பேது 2:5). சபையென்பது கிறிஸ்துவின் சரீரம், கிறிஸ்துவே அதன் தலையாக இருக்கிறார் எபே 1:22,23, 4:4, 15,16, கெலோ 1:18, 24)



***கிறிஸ்துவின் சரீரமான சபையில் நாம் அவயங் களாக தனித்தனி தாலந்து உடையவர்களாக ஒருவரையொருவர் சார்ந்து வளரும்படி அங்க மாக இருக்கிறோம்.*** (ரோம 12:4-8; 1 கொரி 12:14-26)

சபையை சரீரமென்று அழைப்பதனால் சபை ஒரு குடும்பம் என்பதையும் குறிக்கிறது. (மத். 12:49, 50; எபே. 2:19; 2 கொரி: 6:18; I தீமோ: 5:1,2) நம்முடைய சுக துக்கங்களை உடன் கிறிஸ்தவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் (ரோம 12:15; 1 கொரி 12:26; கலா: 6:2, 10) சபை என்பது பல வழிகளில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் (அப். 2:42; 1 கொரி. 1:19; கலா. 2:9; எபே. 3:9 பிலி. 3:10; I யோவா 1:3, 6-7) சபையானது கிறிஸ்துவின் மனைவாட்டியாக இருப்பதால் நாம் மிகுந்த பரிசுத்தத்துடன் நம்மை காத் துக் கொண்டு ஒரு நாள் அவரோடுகூட பரலோகத்திலே வாழப் போகிறோம், (எபே. 5:22-32; 2 கொரி 11:2)

அப்போஸ்தலனாகிய பேதுரு சபையை பழைய ஏற்பாட்டின் கற்பனையோடு அழகாக வர்ணிக்கிறார் ( 1 பேது. 2:9-10) நீங்களோ, உங்களை அந்தகாரத்தி னின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீக மான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும்

இருக்கிறீர்கள்.

முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்க வில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களா யிருக்கிறீர்கள், முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர் களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர் களாயிருக்கிறீர்கள்.

சபையினுடைய அமைப்பு மிக எளிமையானது. கிறிஸ்துவே அதை ஆளுகிறவர் சபைக்கும் கிறிஸ்துவுக் கும் உள்ள உறவை அல்லது தொடர்பை பல வசனங் கள் விளக்குகிறது. அவரே பிரதான மேய்ப்பர் (1 பேது. *5ஃ4*) அவரே தலை (எபே. *1ஃ22-23*; எபே. *4ஃ4* கொலோஃ *1ஃ18, 24*) மூலைக்கல் (எபேஃ *2ஃ20*) அஸ்திபாரம் (1 கொரிஃ *3ஃ11*). ஒவ்வொரு பிராந்திய சபையும் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சபையின் மூப்பர் களால் கண்காணிக்கப்படுகிறது. அவர்களே மேய்ப்பர் கள், கண்காணிப்பாளர்கள், பிஷப்புகள் என்றும் அழைக்கப்பட்டனர். (I தீமோ *3ஃ1-7*; தீத்து *1ஃ5-9*; 1 பேது *5ஃ1-4* பிலி *1ஃ1*; அப் *20ஃ28*; எபே *4ஃ11*; I தெச *5ஃ12*; எபி *13ஃ17*) மூப்பர்கள் தங்களுடைய பிராந்திய சபை அங்கத்தினர்களை கண்காணிப்பார்கள். பல சபைகளை அவர்கள் கண்காணிக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் இல்லை. சபையார் கிறிஸ்துவுக்கும் அப்போஸ்தலுடைய



உபதேசத்திற்கும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். ஒரு சபை பல சபைகளை ஆளுகை செய்யும் அதிகாரம் இல்லை. மூப்பர்களுடைய கண்காணிப்பு வேலைக்கும் சபை சார்ந்த பணிகளுக்கு உதவியாக உதவிக்காரர்கள் உள்ளனர் (1 தீமோஃ *3ஃ8-13*; பிலிஃ *1ஃ1*) மேலும் கிறிஸ்துவானவர் சபை ஒருமைப்பாடுடன் இருக்கவே விரும்புகிறார். ஒற்றுமை யாய் சபையார் செயல்படும்போது தேவனுக்கு மகிமையான கிரியைகளை முழு பெலனோடு செய்ய முடியும். (யோவான்ஃ *13ஃ34*; *17ஃ20-21*; ரோமஃ *12ஃ16*; *15ஃ15*; 1 கொரிஃ *1ஃ10*; *3ஃ3*; *2* கொரி *13ஃ11*; எபேஃ *4ஃ3*; பிலி *2ஃ2*) நான் எப்படி இந்த சபையின் அங்கத்தினராக முடியும்? விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெறுகிறவன் கிறிஸ்துவுக்குள் பெறுவதால் அதுவே அவன் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் (சபைக்குள்) அங்கத்தினராக மாறுவதாகும். ஒருவன் கிறிஸ்துவுக் குள் இருப்பதே சபைக்குள் இருப்பதாம் (கலாஃ *3ஃ27*; ரோஃ *6ஃ3*) அங்கமாக இருக்கிற சபையில் மற்ற கிறிஸ்த வர்களோடு சகோதர சிநேகத்தோடும், ஐக்கியத்தோடும் இருக்கும்போது ஆவிக்குரிய வளர்ச்சியில் பிரயோஜன மாக இருக்கும் (எபி *3ஃ13*; *10ஃ24, 25*) தனி மனிதனாக கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது கடினமான ஒன்று. அதனால்தான் இயேசு கிறிஸ்து ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்காகவும் மரித்து, அவனை

சபையாகவும் சேர்த்து வைக்கிறார்.

சபையைக் குறித்த சில தவறான உபதேசங்களை யும் நாம் அறிவது அவசியம். கிறிஸ்துவின் உயிர்த் தெழுதலுக்குப் பிறகு பெந்தேகொஸ்தே தினத்தன்று சபையை ஸ்தாபிக்கப்பட்ட அன்று பேதுரு மிக முக்கியமான பங்கு வகித்தவராக இருந்தாலும் பூமி யிலே சபையை ஆளும்படியான அதிகாரம் அவருக்கு கொடுக்கப்படவில்லை. பேதுரு பிரசங்கித்தார் சுவிசேஷத்தைக் கேட்டு மக்கள் கீழ்ப்படிந்தார்கள் (அப்ஃ 2; அப் 10) மேலும் அவர் இரண்டு நிருபங்களை புதிய ஏற்பாட்டிலே எழுதியதோடு சபைக்கு மூப்பராக வும் இருந்திருக்கிறார். (1 பேதுஃ 5ஃ1; யோஃ 21ஃ15-17) அவருக்கு ஏதாகிலும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கு மானால் (மத்ஃ 16ஃ17-19) மற்ற அப்போஸ்தலர்களுக் கும் அது பொருந்தும் (மத்ஃ 18ஃ1,18; யோ 20ஃ23) பேதுரு மற்ற எல்லா அப்போஸ்தலர்களும் கிறிஸ்து வின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சிகளும் சபையின் அஸ்திபாரத்திற்கு பங்குள்ளவர்களுமாவார் (எபேஃ 2ஃ20; 1 கொரி 12ஃ28; வெளிஃ 21ஃ16), ஆனால் சபை யானது கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட ஒன்று (எபேஃ 2ஃ20; 1 பேதுருஃ 2ஃ6-8) போடப்பட்டிருக்கிற அஸ்திபார மேயல்லாமல் வேறே அஸ்திபாரத்தை ஒருவனாலும் போடக்கூடாது. அந்த அஸ்திபாரம் கிறிஸ்துவே (1 கொரி 3ஃ11) புதிய ஏற்பாட்டில் பேதுரு சபைக்குத் தலைவராகவும் (போப்பைப் போல) அவர் வழியாய் வரும் மனிதர்கள் தலைவர்களாகவும் இருக்க வேண்டு மென்று சொல்லப்படவில்லை. பேதுரு தன் காலத்தில் தன்னை வணங்க வந்தவர்களை தடுத்து இருக்கிறார். (அப்ஃ 10ஃ25, 26) தாம் தவறு செய்தபோது கண்டிக்கப்பட்டு இருக்கிறார் (கலா 2ஃ11-14) சபையில் எழும் பும் பிரச்சினைகளை அவர் தம்முடைய அதிகாரத்தால் தீர்த்து வைக்கவும் முடியாது (அப்ஃ 15ஃ1-30) ஆகை யால் கத்தோலிக்க மார்க்கத்தார் பேதுருவுக்கு கொடுக்கும் ஸ்தானமும் போப்பு மற்ற குருமார்களுக்கு கொடுக்கும் அந்தஸ்துகளும் கிறிஸ்துவின் ஸ்தானத்தை தள்ளி, அவரை இழிவுபடுத்துவதாக உள்ளது.



சபையில் உள்ள விசுவாசிகள் அனைவரும் ஆசாரி யர்களே (1 பேது 2ஃ9; வெளி 1ஃ6; 5ஃ10) ஒவ்வொரு கிறிஸ்தவனும் பிதாவாகிய தேவனோடு ஜெபத்திலும், ஆராதனையிலும் (எபி 10ஃ19-22; ரோஃ 5ஃ1,2; அபே 2ஃ18; 3ஃ12; 1 யோவா 2ஃ1, 2) மத்தியஸ்தராகிய பிரதான ஆசாரியர் கிறிஸ்துவின் மூலம் தொடர்பு கொள்ள முடியும் (1 தீமோ 2ஃ5; எபிஃ 2ஃ14-18) ஆகையால் நம்முடைய பாவ மன்னிப்பிற்கோ அல்லது நம்முடைய தேவைகளுக்கோ ஒரு மனிதனை மத்தியஸ்தனாக தேட வேண்டிய அவசியமில்லை. மேலும், தன்னுடைய பாவத்தை ஒரு மனித குருவிடம் போய் அறிக்கையிடவும் அவசியமில்லை. எந்த ஒரு கிறிஸ்தவனும் பிற கிறிஸ்தவனிடம் தன் பாவத்தை

அறிக்கையிடலாம். மிக முக்கியமாக ஜெபத்திலே தேவனிடம் அறிக்கையிடலாம் (யாக் 5:16; 1 யோவா 1:9) மேலும், எந்தவொரு மனிதனுக்கோ ஒரு கத்தோலிக்க பாதிரியார் உட்பட பிறருடைய பாவங்களை மன்னித்து விட அதிகாரமில்லை. தேவன் கொடுக்கும் இரட்சிப்பின் அதிகாரம் எந்தவொரு மனிதனுடைய கையிலும் இல்லை. ஆனால் மனிதர்களாக இருக்கும் நமக்கு சத்தியத்தை சொல்லவும் அலது அதை மூடிவிடவும் சுதந்திரம் உண்டு (அப் 13:38, 39; மத்: 5, 6; லூக் 11:52) ஆனால் தேவனிடத்தில் மட்டுமே மன்னிக்கவும் தண்டிக்கவும் முழு அதிகாரம் உண்டு.

இன்னொரு பெருந்தவறையும் பெரும்பான்மை யான மக்கள் செய்கின்றனர். இயேசுவின் தாயாகிய மரியாள் வணக்கம். மரியாள் நல்ல யூத ஸ்திரீயாகவும், பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளாகவும் இயேசுவின் தாயாக தெரிந்தெடுக்கப்பட்டாள் (லூக்: 1:39-43) ஆனால் மரியாளைப் பற்றி வேதத்தில் கொஞ்சமாகவே எழுதப்பட்டுள்ளது. இயேசுவின் மரணத்தின்போது அவர்கள் யோவானிடத்தில் ஒப் படைக்கப்பட்டனர் (யோவான்:19:25-27) மரியாளும் இயேசுவின் மற்ற சகோதரர்களைப் போல ஒரு விசுவாசிதான் (அப் 1:14) வேதத்தில் யாரும் மரியாளிடத்தில் ஜெபித்ததில்லை. அற்புதங்கள் செய்யும் வல்லமையும் அவர்களிடத்தில் இல்லை.



இயேசு கிறிஸ்துவின் பிறப்பிற்கு பிறகு மரியாளுக்கும் யோசேப்புக்கும் பிள்ளைகள் பிறந்தனர் (மத் 1:24, 25; 13:54-56; மாற்கு: 6:3; லூக் 2:7) தேவன் மேல் மிகுந்த நம்பிக்கையும் தன்னைத் தாழ்த்தி அர்ப்பணித்தும் கிறிஸ்துவை விசுவாசித்தும் மரியாள் நமக்கு நல்ல உதாரணமாக இருக்கின்றார்கள். மரியாள் நமக்கு இரட்சகரோ அல்லது மத்தியஸ்தரோ அல்ல. அதனால் அவரிடம் ஜெபிக்க வேண்டிய அவசியமில்லை. ரோமன் கத்தோலிக்கர்கள் மரியாளை உயர்த்தி வைத்திருக்கிற ஸ்தாபனம் ஆண்டவராகிய கிறிஸ்துவின் ஸ்தானத்தை அவமதிப்பதாக உள்ளது (கொலோ: 1:15-20; ரோ 8:34; 1 தீமோ 2:5; 1 யோ 2:1-2)

## ஊழியமும் சுவிஷேப் பணியும்
## Service and Evangelion

சபை கிறிஸ்துவின் சரீரமாகையால், சபையின் ஊழியப் பணிகள் யாவையும் உலகத்தில் நிறைவேற்ற வேண்டும். ஆசாரிய திருக்கூட்டமாக தேவனுடைய வேலையை சேர்ந்து நிறைவேற்ற வேண்டும். (எபி 9:14 1 பேது 2:5, 9) சிலரை மூப்பர், உதவிக்காரர் போதகர்களாக முக்கியப் பணிகளுக்காக இருப்பதால் விசுவாசிகள் யாவரும் தேவ ஊழியத்தை சேர்ந்து நிறைவேற்ற வேண்டும். (எபே 4:11-13; மத் 20:26-28; 25:44, 45, ரோம 16:1, 2)

தேவனுக்கும் மனிதருக்கும் ஊழியம் செய்வதே நம்முடைய வேலை.

சபைக்கு இரண்டு கோணத்தில், ஒன்று தனக்கும் மற்றொன்று உலகத்துக்கும் ஊழியம் உண்டு. முதலாவது சபையானது தனது சொந்த அங்கத்தினர்கள் அவர்களை வளர்ப்பதும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவி செய்வதும் இரட்சிப்பைக் காத்துக் கொள்ள பெலப்படுத்துவது உள்ளுக்குள் செய்யும் வேலை *(எபே 4:11-13 கொலோ 1:28)* சபைக்குள்ளும் சிலர் போதகர்களாக செயல்பட்டு அநேகருடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு சத்தியத்தை போதிக்கலாம். *(எபே 4:11; 1 தீமோ. 4:11-16; 2 தீமோ 2:2; 3:10-4:5)* கிறிஸ்தவர்கள் பிற கிறிஸ்தவர்களுடைய சரீர தேவைகளையும் சந்திக்க வேண்டும். *அப் 11:29 கலா 6:10 2 கொரி 8:1-9:15; 1 யோ 3:17,18).* ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்வதே நாம் கிறிஸ்துவை பின்பற்றுவதாகும். *(மத் 20:28; பிலி 2:7, 8)* சபைக்குள் உள்ள அங்கத்தினர்கள் ஒருவரோடொருவர் ஐக்கிய அன்புடன் இணைந்து மகிழ்ச்சியோடு வளர வேண்டும். சபையானது தனக்குள்ளேயே உள்ள அங்கத்தினர்களை எப்போதும் சீர்படுத்தி பாவங்கள் செய்பவர்களை கண்டித்து உணர்த்தி அது பிறருக்கு பரவாதபடி தடுக்க வழிகளை செய்ய வேண்டும். *(1 தீமோ 1:20; 1 கொரி 5:1-13 மத் 18:15-17;*



*2 யோவா 10, 11; 2 தெசலோ 3:14, 15 தீத்து 3:10, 11)*

இரண்டாவதாக சபையினுடைய ஊழியம் உலகத்தை நோக்கியிருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் உலகத்தில் வாழுகிறோம். ஆனால் உலகத்தைப் போல வாழக்கூடாது. *யோவா 8:23; 15:19; 17:15-18).* எப்படி படகானது தண்ணீர் மேல் மிதந்து கொண்டிருக்கும். ஆனால் தண்ணீர் உள்ளே வரும் வரை. உலகத்தின் பாவத்தோடு கிறிஸ்தவர்கள் ஒத்துப் போக முடியாது *(2 கொரி 6:14-17)* நம்முடைய வாழ்க்கையானது நீதியின் பாதையை காண்பிக்கும் வெளிச்சமாக இருக்க வேண்டும் *(மத் 5:13-16; 1 பேது 2:12; 3:15, 16)* தீமையையும், பாவத்தையும் எதிர்த்து போராடிக் கொண்டே வாழ வேண்டும் *(2 கொரி 10:3, 5. எபே 6:10-17)* வன்முறையையோ, அநியாய வழியோ நமக்கு ஏற்றதல்ல, மாறாக நற்சாட்சியுள்ள வாழ்க்கை யோடு தொடர்ந்து ஊக்கமாக சத்தியத்தை உலகுக்கு சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும். *(மத் 28:19-20, 1 கொரி 9:16).* தேவன் எங்களுக்கு ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை கொடுத்திருக்கிறார் என்று பவுல் அறிவிக் கிறார் *(2 கொரி 5:18-20).*

***பொதுவாக கிறிஸ்தவரல்லாதவர்கள் சபையின் தோல்விகளை மிகவும் கூர்ந்து கவனிப்பார்கள்.***

***காரணம் சபையானது குறைவுள்ள மனிதர் களால் ஆனது.***

ஆனால் சபையானது கிறிஸ்து பரிபூரணர் என்பதை அறிந்து அவரைப் போல தன்னை மாற்றிக் கொள்ளும் பயிற்சியில் உள்ளது. கிறிஸ்தவர்கள் செய்யும் தவறுகள் என்று உலகம் அட்டவணை போட்டுக் காட்டினாலும், சபையானது உலகத்துக்கு செய்த நன்மையே மிகுதியாக இருக்கும் என்பது அசைக்க முடியாத உண்மை. மெய்யான சபைக்கு பல வழிகளில் பொய்யான சத்தியத்தை பின்பற்றுபவர்களால்தான் பெரிய பாதிப்புகள் ஏற்படுகிறது. காரணம் இப்படிப்பட்டவர்கள் ஆண்டவருடைய பெயரால் என்று சொல்லி பரிசுத்தமில்லாத தங்கள் கிரியைகளை நியாயப்படுத்தி செய்கிறார்கள். உண்மையான சத்தியத்தின்படி நடக்கிற சபையார் தங்கள் ஜெபத்தாலும், தான தர்மங்களாலும், போதனையாலும் சமுதாய தொண்டினாலும் சொல்லி மாளாத நன்மைகளை உலகத்துக்கு செய்கிறது. சபையானது உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப் பட்ட நல்ல மனிதர்களைக் கொண்டது. ஒவ்வொரு சபையும் தன்னை கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மறுரூபப்படுத்திக் கொண்டே வருமானால், அது குன்றின் மேலுள்ள பட்டணம் போல இருந்து பலரை பரலோகப் பயணத்திற்கு அழைத்து வரும் கலங்கரை விளக்கமாகவும் இருக்க வேண்டும். (மத். 5:14-16.).



## தொழுகை
## Worship

சபையினுடைய வேலை தனக்குள் செய்து கொள்ள வேண்டிய பக்தி முயற்சி, உலகத்தை நோக்கி செய்யும் சுவிசேஷ வேலை மட்டுமல்ல தேவனை நோக்கி ஆராதனை செய்ய வேண்டிய முக்கியமான பங்கும் உண்டு. தொழுகை என்றால் என்ன? தேவனை நோக்கி நாம் செய்கிற எல்லாமே தொழுகையின் கீழ் வந்து விடுகிறது. (ரோம. 12:1-2). இதிலிருந்து நமக்கு விளங்கும் உண்மையென்னவென்றால் நம் வாழ்வின் அனைத்து செயல்களும் அவரை நோக்கியே செய்யப் பட வேண்டும். (கொலே 3:17). வாரத்தில் இரண்டு அல்லது மூன்று மணி நேரங்கள் அவரை ஆராதிப்பதற்காக ஒதுக்கிவிட்டு மற்ற அனைத்து வார நாட்களும் ஆண்டவரை மறந்து ஜீவிப்பது முறையல்ல. நாம் வார்த்தையினாலாவது கிரியையினாலாவது எதைச் செய்தாலும் அதெல்லாம் தேவனுடைய நாமத்துக்குப் பிரியமாகவும், அவருடைய சித்தம் செய்வதாகவும் இருக்க வேண்டும். இந்த பரந்த விரிவான தொழுகையின் அர்த்தத்தை நாம் கற்றுக் கொள்வதற்கு முன், தேவனுடைய பிள்ளைகள் தேவனை கனப்படுத்தும்படி செய்த தொழுகை முறைமைகளை கவனிப்போம். தொழுகையை சுருக்கமாக

சொல்லப்போனால், ‘‘தேவனை துதித்து அவருக்கு செலுத்த வேண்டிய தகுதியான கனத்தை செய்வது’’ என்பதாகும். புதிய ஏற்பாட்டில் தேவனை தொழுது கொள்வதென்றால், சாஷ்டாங்கமாக பணிந்து கொள்வதையும் அவருக்கே உரிய கனத்தை தாழ்ந்து வீழ்ந்து செலுத்துவதாக சொல் லப்படுகிறது. (மத் 2:2, 8,11; 4:9,10 யோவா 4:23, 24 1 கொரி 14:25, வெளி 4:10; 5:14)

தேவனுடைய உன்னதமான மகிமையை போற்றி துதிப்பதே தொழுகை. பரலோகத்தில் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று வாசித்து இன்னும் இதன் பொருளை விளங்கிக் கொள்ளலாம். (வெளி 4:1-5; எசா 6:1-5 மத். 21:13) தேவன் தன்னுடைய பெருமையை மனிதன் உயர்த்தும்படி எப்போதும் தன்னை போற்றிக் கொண்டேயிருக்க வேண்டும் என்று சுயநலத்தோடு எப்போதும் காத்திருப்பதில்லை. (அப். 17:14-25: சங் 50:10-12). நம்முடைய பிரயோஜனத்துக்காகவே தன்னை மகிமைப்படுத்தும்படி தேவன் கட்டளையிடுகிறார். ஆவிக்குரியவர்களாக நம்முடைய கடமையை நாம் ஆராதிப்பதின் மூலமே நிறைவேற்ற முடியும். இப்படி தொழுகை செய்வதின் மூலம் நாமும் பயனடைகிறோம். மற்றவர்களும் பெலப்படுகிறார்கள்.

தேவன் எங்கும் வியாபித்திருக்கிறவர், ஆகையால்



அவரை எங்கும் கிறிஸ்தவர்கள் ஆராதனை செய்ய முடியும். அதாவது குறிப்பிட்ட இடத்துக்கு போய் அல்லது குறிப்பிட்ட திசை நோக்கி செய்ய வேண்டிய அவசியமில்லை. (யோவா 4:19-24) மனிதர்கள் வாடகை கட்டிடத்திலோ, வீடுகளிலோ, திறந்த வெளியிலோ அல்லது சபைக்கு சொந்தமான கட்டிடத்திலோ ஆராதனை செய்யலாம் ரோம 16:15; 1 கொரி 16:19; கொலோ 4:15; அப் 2:46; 16:13 20:7, 8) கிறிஸ்தவனின் தொழுகை வெளிப்புற அலங்காரத்தில் அல்ல உள்ளான பயபக்தியான இதயத்தால் அறியப்படும். அதனால்தான் பரிசுத்த வாழ்க்கையும், நற்சாட்சியான நடக்கையும் அவசியமாகிறது. (சங். 15:1-5; 24:3,4; மத். 5:8) தேவன் ஆவியாயிருக்கிறார் நம்முடைய தொழுகையும் இருதயத்திலிருந்து செல்ல வேண்டும் (யோவா 4:24). நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்து சரியான சத்தியத்தின்படி ஆராதிப்பவர்கள் உங்கள் பகுதியில் இல்லையென்றால் நீங்களும் உங்கள் வீட்டாருமே ஆராதனை செய்யலாம்.

ஆதி திருச்சபையானது தேவனை தொழுது கொள்ளும்படி வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை சபை கூடியது. (அப். 20:5-7; 1 கொரி 16:1-2) யூதர்கள் நியாயப் பிரமாணத்தின்படி ஓய்வு நாளை சனிக்கிழமை அனுசரித்து வந்தார்கள், ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம் அந்த முறைமையை பின்பற்றக் கூடாது. காரணம் வாரத்தின் முதல் நாளில் கிறிஸ்து

உயிர்த்தெழுந்தார், அதுவே கர்த்தருடைய நாளாக கிறிஸ்தவர்கள் சேர்ந்து தொழுகை செய்யும் நாளாக மாறியது (வெளி 1:10; மத். 28:1 மாற் 16:1-2). தொழுகையின் அம்சங்கள் சிலதை வாரத்தின் எந்த நாட்களில் செய்வதும் தவறல்ல, மாறாக அது நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு பிரயோஜனமாக இருக்கும். வாரம் முழுவதும் ஜெபம், வேத வாசிப்பு செய்வதால் நல்ல பயனுண்டு. சிலர் வீடுகளில் கூடி பாடல் பாடி, ஜெபித்து வசனத்தை ஆராய்ந்து பார்ப்பார்கள். சகோதர ஐக்கியத்திற்காக வீடுகளில் விருந்துகளை ஏற்பாடு செய்து வேதத்தையும் ஆராய்ந்து பார்ப்பதும் பிரயோஜனமே (அப் 2:46; 5:42). வியாதிப் படுக்கை யில் இருக்கும்போது தவிர மற்றபடி மற்றெல்ல கிறிஸ்தவர்களோடும் வாரத்தின் முதல் நாளில் கூடி புதிய ஏற்பாட்டில் அங்கீகரித்த ஆராதனையை நிறைவேற்றுவது நம் கடமை (எபி 10:25). இப்படி தொடர்ந்து ஆராதனை செய்வது அன்பிலும், பக்தி விருத்தியிலும் சகோதர ஸ்லோகத்திலும் பெருகுவதற்கு பிரயோஜன மானது.

ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லி வளர் வதற்காகவும் சபை கூடி வருதல் கட்டாயமானது (1 தீமோ 4:13, 1 கொரி 14:19, 20). தொழுகையில் பாட லும் உண்டு. சில பாடல்கள் தேவனையும் கிறிஸ்துவை யும் மகிமைப்படுத்தி போற்றுவதாகவும்,



சில பாடல்கள் சகோதரர்களுக்கு போதனையும், புத்தி சொல்லுவ தாகவும் அமைந்திருக்கும் (எபே 5:19, 20; கொலோ 3:16; அப் 16:25 1 கொரி 14:15) வேத வாசிப்பு தொழுகையின் அம்சங்களில் ஒன்று, அதனால் ஆவிக்குரிய பிரயோஜனமுண்டு (வெளி 1:3; 1 தீமோ 4:13-16) போதனை, புத்தி சொல்லுதல் வேத வசனங் களுக்கேற்றாற்போல ஆலோசனைகள் சொல்லுவதும் கிறிஸ்தவ வளர்ச்சிக்கு ஆதாரமானது (1 தீமோ 4:13-16; 5:17; 2 தீமோ 2:1, 2 3:10; அப் 20; 20, 21; மாக் 3:1). இப்படிக் கூடுவதும் நம்முடைய அன்பின் ஐக்கியத்திற்கு ஆணிவேர் போன்றது (ரோ 12:3-8, 15; 16:16 1, கொரி 16:20; 1 யோவா 1:3,4) மேலும் சபை யானது காணிக்கையை பாதுகாத்து தர்ம காரியங்களுக்கும், ஊழியர்களின் பிழைப்பிற்கும் சுவிசேஷப் பணிக் கும் செலவு செய்ய வேண்டும் (ரோமர் 12:13; 15:25-27 1 கொரி 9:1-14; 2 கொரி 8:1-9,15 எபி 13:1-3; 1 தீமோ 5:3-18, யாக் 1:27) ஞாயிற்றுக்கிழமைதோறும் கிறிஸ்தவன் தேவனுடைய போக்கிஷேத்தில் எதையாகிலும் சேர்ப்பது அவசியம். (1 கொரி 16:2). இப்படியெல்லாம் செய்வது நம்முடைய ஒருமைப்பாட்டையும், ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்பதையும், தேவனுடைய ராஜ்ஜியத்தை முதலாவது தேடுவதையும் நிரூபிக்கிறது. யூதர்கள் பத்தில் ஒன்றை தசம பாகமாக கொடுக்க கட்டளை

பெற்றிருந்தனர். ஆனால் கிறிஸ்தவர்களோ சுவாதீனமாக தன் வரவுக்குத்தக்கதாக தேவனுக்கு நிர்ணயித்து கொடுக்க எதிர்பார்க்கப்படுகிறான் (1 கொரி 16:1-2).

பொதுத் தொழுகைக்கும், தனிப்பட்ட வாழ்க்கைக் கும் ஜெபம் இன்றியமையாத ஒன்று. கிறிஸ்தவர்கள் யாவரும் தேவன் அன்புள்ளவர், மனிதர்கள் மேல் இரக்கமுள்ளவர், ஜெபத்தை கேட்கிறவர், மேலும் ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார் என்று நம்புகின்றனர். நாம் கேட்கிற எல்லாவற்றையும் எப்போதும் தேவன் கொடுத்து விடுவதில்லை, காரணம் நமக்கு இன்னது தேவையென்னும் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க் கைக்கு அவசியமானது எதுவென்றும் அவருக்கு தெரியும். அவர் நன்மையானதையே நமக்கு செய்வார் (ரோ 8:28). இடைவிடாமல் ஜெபிக்கும் பழக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அவசியம் தேவை (1 தெச 5:17; ரோ 12:12; கொலோ 4:2; லூக் 18:1). உங்களுடைய ஜெபத்துக்கு எப்படிப்பட்ட தடைகள் வரும். உதாரணமாக குடும்ப பிரச்சினைகள் (1 பேது 3:7), மன்னிக்க முடியாத இருதயம் (மத் 6:14, 15) உறுதி யில்லாமை (சங் 66:18; ஏசா 1:15), அறிக்கையிடாத பாவம் (1 பேது 3:12) தேவனிடத்தில் விசுவாசமில்லை (யாக் 1:5,8) இன்னொரு பக்கத்தில் நம்முடைய



ஜெபங்கள் கேட்கப்படுவதற்கு பல காரணங்கள் இருப்பதையும் கவனிக்க வேண்டும், நல்லொழுக்க மான வாழ்க்கை (சங் 24:3, 4), கீழ்படிதலுள்ள இருதயம் (1 யோவா 3:21, 22) பய பக்தியுள்ள நடக்கை (மத் 6:9) மனத்தாழ்மை, தேவனிடத்தில் வைக்கும் விசுவாசம் (மத் 21:22, மாற் 11:24) உண்மையுள்ள இருதயம் மத் 6:5, 6 சங் 17:1) நன்றியுள்ள இருதயம் (கொலோ 4:2; பிலி 4:6) நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் ஜெபம் பண்ணுவதிலே மிகப் பெரிய உதாரணமாக நடந்து கொண்டார். (யோவா 17:1-26, மத் 14:23; 26:36; லூக் 5:1; 6:12; 9:28) ஜெபத்தைப் பற்றியும் அதிகம் போதித்திருக்கிறார். (லூக் 11:5-13, 18:1-8 மற்றவர்களைப் போல 1 தெச 5:16-25; 1 தீமோ 2:1-8; யாக் 5:13-18) தம்முடைய சீஷர்கள் ஒருமுறை கேட்டுக் கொண்டபோது இயேசு அவர்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதத்தை போதித்தார். பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக. பூமியிலே உமது சித்தம் செய்யப்படு வது போல பரலோகத்திலும் செய்யப்படுவதாக. எங்களது அனுதின ஆகாரத்தை தாரும். பிறருடைய குற்றங்களை நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் பாவங்களை மன்னியும். சோதனைக்குட்படாமல் தீமையினின்று எங்களை காப்பாற்றும் (மத் 6:9-13 லூக் 11:1-4)

கர்த்தருடைய பந்தி அல்லது கர்த்தருடைய பாடு மரணத்தை நினைவுகூருதலும் கவனிக்க வேண்டிய சத்தியம். சீஷர்களோடு பஸ்காவை அனுசரித்தபோது இயேசு கொடுத்த கட்டளையே கர்த்தருடைய பந்தி மத் *26:17-30; மாற் 14; 22-24; லூக் 22:14-23, 1கொரி 11:23-26)* அவர் தம்மை பின்பற்றினவர்களை பார்த்து சொன்னார், ''என்னை நினைவுகூரும்படி இதை செய்யுங்கள்'' *(1 கொரி 11:24-25).* கர்த்தருடைய பக்தியின் நோக்கம் இயேசுவின் பாடு, மரணத்தை நினைவுகூரு வதாம். ***கர்த்தருடைய பந்தி நம்முடைய பசியை ஆற்றும் விருந்து அல்ல (1 கொரி 11:34). சுய பரிசோதனை, பாடு மரணத்தின் தியானம் தேவனுக்கு ஆராதனையே இதன் நோக்கமாகும்.*** *(1 கொரி 11:27-28)* இது ஐக்கியத்தின் நேரமாக, நம் சகோதரர் கள் மத்தியில் இணக்கமாக உறவை வளர்த்துக் கொள் ளும் நேரம் *(1 கொரி 10:16, 11:29-33).* அப்பமும் திராட்சை ரசமும் ஆண்டவருடைய சரீரம், இரத்தத்தை நினைவுபடுத்துகிறது. புளிப்பில்லாத அப்பம் காரணம் புளிப்பு பாவத்துக்கு ஒப்பாக பேசப்படும். நம் ஆண்டவரோ பாவமற்ற இரட்சகர், பழுதற்ற ஆட்டுக்குட்டியாக பலியானார் *(1 கொரி 5:7; மாற் 14:1).* இந்த சமயத்தில்தான் நாம் நம்முடைய பாவங்களுக்காகவும் மனந்திரும்பி மீண்டும் தேவனோடு நமக்குள்ள உடன்படிக்கையை நினைவுபடுத்திக் கொள்ள



முடியும். *(1 கொரி 11 27-32).* திராட்சை ரசம் நிறத்திலும் தன்மையிலும் இரத்த வருணத்தை நினைவுபடுத்து வதாக இருக்கும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சபை கூடிவரும்போது விசுவாசிகள் அனைவரும் கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்வதின் மூலம் அவருடைய உடன்படிக்கையில் பங்கேற்று மரணத்தை தெரிவிக்கிறவர்களாக இருக்கிறது *1 கொரி 10:16, 17* காரணம் ஆண்டவன் இயேசு இன்னும் ஜீவனுள்ளவராக இருக்கிறார் *(1 கொரி 11:26)* இதுவே முதல் நூற்றாண்டு சபையின் பழக்கம் என்பதும் தெளிவான உண்மை.

ரோமன் கத்தோலிக்கர் கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கிற விதத்திற்கு பூசை அல்லது திருப்பலி என்று சொல்கின்றனர், அதில் அப்பம் கிறிஸ்துவின் சரீரமாகவும் திராட்சை ரசம் அவருடைய இரத்தமாகவும் மாறி விடுகிறது என்று பொய்யாக உபதேசத்தை நம்பி போதிக்கின்றனர். ஆனால் புதிய ஏற்பாட்டிலோ ஒரே முறை ஆண்டவர் நமக்காக பாடுகளை அனுபவித்து மரணத்தில் இரத்தம் சிந்தினார். *(எபி 7:27; 9:12, 24-28; 10:10-14; ரோம 6:9).* இயேசுவே ஒவ்வொரு முறை நினைவுகூரப்படும்போதும் பலியாக மாறுவதில்லை. ஆனால் இயேசுவானவர் 'இது என் சரீரம், இதை வாங்கி புசியுங்கள், இது என் இரத்தம், வாங்கி பானம்

பண்ணுங் கள் என்றார். (மத் *26:26-28*) இது உருவகமாக சொல்லப்பட்டது, காரணம் அப்படி சொல்லும்போது அவரு டைய கரத்தில் அப்பமும், திராட்சை ரசமும்தான் இருந் தது. மற்ற விஷயங்களை உருவகமாக அவர் சொன்ன தைப் போல இதுவும் ஒன்று (யோவா *10:7, 14; 15:5* மத் *5:13, 14)* அப்பமும் ரசமும் அவருடைய சரீரம் இரத்தமாக மாறி விடுகிறது என்பதை விட அவருடைய நாமத்தில் கூடும்போது அவர் பிரசன்னம் நம் மத்தியில் இருக்கிறது என்பதை நம்புகிறோம் (மத். *18:20*). அப்பமும் ரசமும் இயேசு கிறிஸ்து நமக்காக மரிக்கக் கொடுத்த சரீரம், சிந்தின இரத்தத்தின் நினைவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

புதிய ஏற்பாடு தொழுகையென்றால் இப்படியாக முதலாவது, இரண்டாவது என்று வரிசைப்படுத்தி செய் யச் சொல்லவில்லை. மனிதராகிய நாம் சபை கூடு வதற்கு பொது இடமோ அல்லது வீடோ எங்கே கூடி னாலும் ஒழுங்கும் கிரமமாக செய்யப்பட வேண்டும். (ஆதி *1:26-27 2:18; 3:16; 4:6, 7;* *1* கொரி *11:2-16; 14:33 -36* கலா *3:28;* எபே *5:21-33* கொலோ *3:18-19; 1* தீமோ *2:1-15 3:1-13; 1* பேதுரு *3:1-7)* தொழுகை என்பது ஒழுங்கும் கிரமமுமாக தேவனுடைய சத்தியத்தின்படி செய்யப்பட வேண்டும். (யோவா *4:24; 1* கொரி



*14:40)* கீழே சொல்லப்படும் வகையில் செய்யப்படுமானால் அது தேவனுடைய பார்வையில் பிரியமானதாக ஏற்றுக் கொள்ளப்படலாம், என்ன வெனில், பரிசுத்தவான்களாக ஓரிடத்தில் கூடினவுடன் தேவனை நோக்கி ஜெபம் செய்து, அநேக பாடல்கள், பல ஜெபங்களும் தொடரலாம். பின் யாராவது ஒருவர் வேதத்தின் ஒரு பகுதியை எல்லாரும் கேட்கும்படி வாசிக்கலாம், நல்ல போதகம் செய்யும் நபர் இருந்தால் சத்தியத்தை சபையின் பக்தி விருத்திக்காக போதிக்க லாம். பின்னர் கர்த்தருடைய பந்தி பாடலுடன் நினைவு கூரலாம். எல்லாரும் ஒன்றாக கூடியுள்ள வாரத்தின் முதல் நாளில் கையின் பிரயாசத்தை காணிக்கையை கொடுக்க வேண்டும். சபைக்கு தேவையான, அறிவிப்பு கள் செய்ய வேண்டும், அதில் ஜெபக் குறிப்பு, வருங்காலத்து திட்டங்கள், கூட்டங்கள் போன்றவை. எனவே தொழுகையில் ஜெபம், பாடல், வேத வசன வாசிப்பு / பிரசங்கம், காணிக்கை மற்றும் கர்த்தருடைய பந்தி என்று ஐந்து அம்சங்கள் முக்கியமாக செய்யப்பட வேண்டும். இவைகளில் ஒன்றையாவது ஞாயிறு ஆராதனையில் குறைத்தால் அது வேதத்துக்கு புறம்பானதாக அமைந்துவிடும்.

## எதிர்காலம்
## Future

கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் உலகமுண்டானது பற்றி அழுத்தமான விசுவாசம் உண்டு, அதாவது உலகங்கள் தேவனால் படைக்கப்பட்டது (ஆதி *1:1*) அது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அழிக்கப்படப் போகிறது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலே அனைவரும் பிதாவுக்கும் குமாரனாகிய கிறிஸ்துவுக்கும் முன் நியாயத் தீர்ப்பில் நிற்க வேண்டும். நியாயத்தீர்ப்பின் இறுதியில் ஒரு சாரார் பரலோகத்திற்கும் மற்றவர் நரகத்திற்கும் போக வேண்டும். தேவனாகிய கர்த்தர் பரலோகத்தில் இருந்து அனைத்தையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மகிமைக்காக ஆளுகை செய்து வழிநடத்துகிறார் (பிலி *2:9-11;* கொலோ *1:16*) நமது ஜீவன் அவரிடத்திலிருந்து வந்தது நம்முடைய நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையும் முற்றிலும் அவரை சார்ந்தே உள்ளது (*1* தீமோ *6:16*) இந்த எதிர்கால தேவ திட்டத்தை நாம் அறிய வேண்டாமா? நம்முடைய முடிவு, பயணத்தின் இலக்கு எங்கு செல்லுகிறது என்று நாம் அறிந்து கொள்ள ஆவலாக இருக்க வேண்டும். (சங் *9:12;* யாக் *4:14;* மத். *16:26*)

நாம் மனிதர்களாக இருக்கிறபடியால் நிச்சயம் ஒரு நாள் மரணத்தை சந்திக்க வேண்டும். மறு ஜென்மத்தில் பிறத்தல், கூடுவிட்டு கூடு பாய்தல் என்ற கொள்கைகள் வேதத்தில் சொல்லப்படவில்லை. மனுஷன் ஒருமுறை மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்பில் நிற்பதும் நியமிக்கப் பட்ட ஒன்று (எபி *9:27*) நாம் அழிந்து போகும் மாமிசம் உள்ளவர்களானாலும் ஆவிக்கு சுயதன்மையுமிருப்ப தால் மரித்த பின்னும் ஒரு வாழ்வு உண்டு (*2* கொரி *5:1; 2* பேது *1:13-14*) மரணம் என்றால் நம்முடைய சரீரத்தை விட்டு ஆவி தேவனிடத்திற்கு பிரிந்து போகி றது (யாக் *2:26*). பொதுவாகவே எல்லா மனுஷருக்கும் மரண பயம் உண்டு, சுவிசேஷமோ நம்மை அதினின்று நீக்கி ஜீவனுள்ள நம்பிக்கையளிக்கிறது (சங் *39.5;* ரோமர் *7:24;* எபி *2:15; 1* கொரி *15:26;* பிலி *1:21-23*) பழைய ஏற்பாடு மரணத்துக்குப்பின் வரும் வாழ்வைப் பற்றி அதிகமாக பேசுவதில்லை இயேசு கிறிஸ்துவும், புதிய ஏற்பாடும் இதை பெரிதும் விளக்குகிறது. ''ஜீவனையும், அழியாமையையும் சுவிசேஷத்தினால் வெளிச்சத்துக்கு கொண்டு வந்தார் இயேசு'' (*2* ரோமா *1:10*). இயேசு கிறிஸ்து ஒருவரால் மட்டுமே மரணம், பாவத்தின் கொடுக்கை முறித்து அதன்மேல் வெற்றியை கொடுக்க முடியும். (*1* கொரி *15:54-57*).



மரணத்துக்கும் நியாயத் தீர்ப்புக்கும் இடையில் நம்மு டைய ஆத்துமாவின் நிலை என்ன? இதை இடைப் பட்ட நிலையென்பார்கள். சிலர் இந்த

நிலையில் ஆத்துமா உறங்கிக் கொண்டிருக்கும், இயேசுவின் இரண்டாம் வருகையில் விழித்தெழுந்திருக்கும். வேதத்தில் மரித்தவர்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற நேரடியான அர்த்தத்தில் சொல்லாமல் உயிரோடிக்கிறார்கள் பார்வையில் மரித்தவர்கள் நிலைமை என்ன என்பதை சொல்வதற்காக அப்படி எழுதியிருக்கிறது (1 தெச 4:13) உறங்கிக் கொண்டிருக்கிறவர்களுக்கு உலகத்தின் வேலையில் தொடர்பேயில்லை (வெளி 14:13). இன்னும் பிற வசனப் பகுதிகளில் மரித்தவர் களின் ஆத்துமா நினைவுடன் இருக்கும் என்று வாசிக்க லாம் (2 கொரி 5:8; லூக் 16:19-31). மரித்தவர்களின் ஆத்துமா பரதீசுக்கோ அல்லது பாதாளத்துக்கோ போகிறது. பாதாளமோ இரண்டு பாகமாக பிரிக்கப்பட் டுள்ளது (லூக் 16:26). நல்ல பாகமானது பரதீசு என்றும், அது இரட்சிக்கப்பட்டவர்கள் இருக்கும் இடமாகவும் (லூக் 23:39-43; அப் 2:27) கெட்ட பாகம் பாதாளம் என்றும் அது தீமை செய்தவர்கள், பாவிகளின் இடமாகவும் (லூக் 16:23) சொல்லப்படுகிறது. நம்முடைய நித்திய இலக்கானது நமது மரணத்தில் முத்திரிக்கப்படுகிறது. எந்த வசனமும் மரித்த பிறகு மனுஷன் மனம் திரும்ப இரண்டாம் வாய்ப்பு கொடுக்கப்படலாம் என்று கூறுவதில்லை. மேலும் மரித்தவர்களுக்கு உத்தரிக்கும் ஸ்தலம் என்றும், பாவங்களுக்காக எரிகிற தணலில் வேதனைகளை அனுபவித்து பின்பு பரலோகம் செல் வார்கள் என்றும் வேதம் கூறுவதில்லை. நீங்கள் கிறிஸ்தவராக வாழ்ந்து மரித்தால் உங்கள் பாவங்களுக்காக இயேசு பாவ நிவாரண பலியை செலுத்தி இருக்கிறார் (1 யோவா 1:6-10) ரோமன் கத்தோலிக்கர் நம்பும் உத்தரிக்கும் ஸ்தலம் என்னும் கோட்பாடு இயேசு கிறிஸ்துவின் பாவ நிவாரணத்தையும் தேவனுடைய மன்னிப்பையும் அவமதித்து நம்பாததாக உள்ளது.



இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் இந்த உலகம் அழியப் போகிறது. அவருடைய வருகை யாருக்கும் தெரியாது (மத் 24:44) இயேசு கிறிஸ்துவே அந்த நாளும் நாழிகையும் எனக்கு தெரியாது. பிதா ஒருவரே அறிவார் என்றார் (மத் 24:36). ஆனால் உலகத்தின் முடிவின் நாளை குறித்து பலர் பல காலங் களில் முன்னறிவித்து, பலவிதமான சம்பவங்களை அடையாளங்களாக சொல்லி ஏமாற்றி நஷ்டம் அடைந் ததை மறந்துவிடக்கூடாது, நாமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார் என்று இயேசு வாக்களித்தார் அது நிச்சயம் நடக்கும். ஆயினும் சிலர் அவிசுவாசமாய் சந்தேகப்படுகின்றனர். நாம் அப்படியிராமல் விசுவாசமாய் காத்திருப்போம். இன்னும் பலர் தேவனை தங்கள் கால அட்டவணை யில் செயல்படுவதாக நம்புகின்றனர். ஆனால் அவர் தம்முடைய காலத்தில் நேர்த்தியாக செயல்படுகிறார்

*(2 பேது 3:1-14).* ஆண்டவர் இயேசு எப்போது வருவார் என்று நமக்கு தெரியாது என்பதால் நாம் எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும் *(மத் 24:44).* இரண்டாம் வருகையைப் பற்றிய உபதேசம் விசுவாசிகளை பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தம் அடையும்படி உற்சாகப் படுத்துகிறது. அதனால் பேதுரு, ***இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நாம் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவ பக்தியுமுள்ளவர்களாய் நடக்க வேண்டும்? என்று கேட்கிறார் (2 பேது 3:11)*** இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்றாலே கிறிஸ்தவர்களுக்கு இரட்சிப்பு என்றும் பரலோக வீட்டிற்கு போகிறோம் என்பதையும் குறிக்கிறது. இதுவே நம்முடைய ‘ஆசீர்வாத நம்பிக்கை’ *(தீத்து 2:13)* என்றழைக்கப் படுகிறது.

இயேசு இரண்டாம் முறை வரும்போது எல்லாரும் உயிர்த்தெழுவார்கள், இது பொதுவான உயிர்த்தெழு தல். இயேசு சொன்னார் : இது குறித்து நீங்கள் ஆச்சரி யப்பட வேண்டாம். ஏனென்றால் பிரேதக் குழிகளி லுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்



*(யோவா 5:28-29).* மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், பின்பு உயிரோடிருக்கிறவர்கள் அவர்களோடு சேர்ந்து ஆண்டவரின் வருகையில் சேர்ந்து நித்தியத்துக்குள் பிரவேசிப்பார்கள் *(1 தெச 4:13-18).* அந்த வருகை யின்போது நாம் புதிய உடலை பெற்றுக் கொள்கிறோம். *(1 கொரி 15:35-37).* இந்த உயிர்த்தெழுதல், பெறப் போகிற உடல் எப்படிப்பட்டது என்பது தெரிய வில்லை. ஆனால் அது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை போன்றே இருக்கும். *(1 யோவா 3:2).*

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது எல்லா மனுஷருக்கும் பொதுவான நியாயந் தீர்ப்பு இருக்கும் தேவனும் கிறிஸ்துவும் நம்மை நியாந்தீர்ப்பார்கள் *(யோவா 5:22, 27, அப் 17:30, 31; ரோம 14:10, 2 கொரி 5:10; 2 தீமோ 4:1 எபி 12:23)* தேவன் தம்முடைய வார்த்தையை முன்னிட்டு நாம் வாழ்க்கையில் செய்த செயல்களுக்கு நியாயம் விசாரிப்பார். *(வெளி 20:12, யோவா 12:48, ரோம 2:6, 16)* பின்பு மனிதர்கள் அனைவரும் இரண்டு பெரும் பிரிவாக இரட்சிக்கப் பட்டவர்கள், பாவத்தில் இழந்தவர்கள் என்று பிரிக்கப் படும் *(மத் 25:31-46).* இரட்சிக்கப்பட்டவர்களை நோக்கி, பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே வாருங்கள் உங்களுக்காக உலகத் தோற்றத்திற்கு முன்பே ஆயத்தமாக்கப்பட்ட

இடம் உண்டு (மத் 25:34). மீதியுள்ளவர்களை நோக்கி, 'என்னை விட்டு அகன்று போங்கள் உங்களுக்கும் கீழ்படியாத தூதர் களுக்கும் நித்திய அக்கினி ஆயத்தமாக்கப்பட்டுள்ளது. (மத் 25:41). கிறிஸ்துவுக்குள் வாழுகிறவர்களுக்கு நியாயத் தீர்ப்பின் நாளைப் பற்றிய பயம் இல்லை காரணம் அவர்களுக்கு ஆண்டவரால் வெகுமதிகள் கிடைக்கும் நாள் அது, அவர்களுக்கு ஆக்கினை இல்லை என்று வாசிக்கிறோம் ரோம 8:1; மாற் 9:41 லூக் 6:35 பரலோகம் என்பது கிறிஸ்தவர்களின் ஆவலான எதிர்பார்ப்பின் இடம், தேவனோடு மகிமையில் சந்திக்கப் போகும் பரிசுத்த ஸ்தலம். மனிதனுடைய எண்ணங்களுக்கும், கற்பனைக்கும் அப்பாற்பட்டது. அதனால் பரலோகம் எப்போதும் உருவகமாகவே சித்திரிக்கப்பட்டுள்ளது. (வெளி 21:1-22:5). பரலோகம் மிகவும் அருமையான இடம், காரணம் அங்குதான் நாம் இயேசு கிறிஸ்துவோடு எப்போதும் இருக்கப் போகிறோம். (யோவா 14:1-3; பிலி 1:23 , 1 தெச 4:16,17). மேலும் மேன்மையான பெரிய விருந்து நமக்காக அங்கே காத்திருக்கிறது (மத் 22:1-14, வெளி 19:9) (வெளி 21:3-4; 22:1-5)

இயேசு கிறிஸ்துவை விசுவாசியாதவர்களுக்கு நித்தியமான பிரிவு, ஆக்கினை உள்ள இடம் நரகம். நரகம் என்பது எருசலேமுக்கு வெளியே உள்ள



குப்பைகளை கொட்டும் இடம் என்று அர்த்தம். அங்கே குப்பைகள் எப்போதும் எரிந்து கொண்டிருக் கும். அங்கு புகையும், நாற்றமும், நெருப்பும் எப்போ தும் இருக்கும். இப்படிப்பட்ட இடத்திற்கு நாம் நிச்சயம் போகக்கூடாது. வேதத்தில் நரகமும் உருவகமாக நாம் புரிந்து கொள்ளும் அளவில் சொல்லப்பட்டுள்ளது. அந்தகாரம் சூழ்ந்த இடம் நரகம் காரணம் தேவனை விட்டு பிரிந்து இருக்கும் இடம் (மத் 25:30; 2 பேது 2:4; யூதா 13). நெருப்பும், புகையும் உள்ள இடம் (மத் 13:42; 25:41; மாற் 9:48; வெளி 20:10-15) வலியும், வேதனையுமுள்ள இடம் (மத் 20:30; வெளி 14:11). நரகத்தில் ஒருவன் தள்ளப்பட்டால் வெளியே வர வழி இல்லை. அந்த இழப்பு நிரந்தரமானது, நம்பிக்கைக்கு இடமில்லை. (மத் 25:10, 46; வெளி 14:11) இயேசு அநேக முறை நரகத்தைப் பற்றி ஜனங்களை எச்சரித்தி ருக்கிறார் (லூக் 12:4-5; 13:28; மத் 5:29-30)

***ஆயிர வருட அரசாட்சி, இரகசிய வருயை என்கிற வேதபுரட்டான உபதேசங்களுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதனால் சிலர் கிறிஸ்துவின் வருகைக்கு நாளைக் குறித்துக் கொண்டு, அறிவீனமாக சொத்துக்களை விற்றும், தங்களையே எரித்துக் கொண்டும் நஷ்டமடைந் திருக்கின்றனர்.*** ஆயிர வருடம் இயேசு இந்த பூமியில்

ஆட்சி செய்வார் என்பது வெறும் கற்பனை, உண்மையல்ல. காரணம் அவருடைய வருகையில் வானம் பூமி அழிந்து நியாயத் தீர்ப்பு நடந்து பிரிந்து செல்லப் போகிறோம். யோவா 5:28, 29, 1 தெச 4:13-17; எபி 9:28; வெளி 1:7:1 கொரி 15-23 இந்த ஆயிர வருட பூமிக் குரிய ஆட்சியை நம்புபவர்கள் இரண்டு தவறு செய் கிறார்கள். ஒன்று இயேசுவின் இராஜ்ஜியம் இந்த பூமிக்குரியது. ஆனால், அது ஆவிக்குரியது, பரலோகத் துக்குரியது. இரண்டாவது வெளிப்படுத்தின விசேஷத்தை தவறாக புரிந்து கொண்டு, நிறைவேறி விட்ட தீர்க்கதரிசனங்களை இனிமேல்தான் நிறை வேறும் என்று சொல்லி குழப்புகின்றனர். இதற்கு நாம் எச்சரிக்கையாகவும் சரியான பதில் அளிக்கிறவர்களாக வும் இருக்க வேண்டும்.

## திரித்துவம்
## Trinity

'திரித்துவம்' என்ற வார்த்தை வேதாகமத்தில் இல்லை. ஆனால் அநேக கிறிஸ்தவர்கள் தேவனைப் பற்றிய உபதேசத்தை புரிந்து கொள்கிற விஷயத்தில் இதைப் பயன்படுத்துவார்கள். தேவன் ஒருவர் என்கிற நம்பிக்கை கிறிஸ்தவர்களுக்கு உண்டு. ஆனால் உலகில் பலர் பல கடவுள்கள் உண்டு என்ற



நம்பிக்கையில் ஆயிரம், இலட்சம் என்று எண்ணிக்கையில் கடவுள்களை வைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் கிறிஸ்தவர்கள் ஒரே தேவனை விசுவாசிப்பார்கள் (உப 6:4; மாற் 12:29; 1 கொரி 8:4; யாக் 2:19). நாம் அறிந்திருக்கிறபடி இந்த ஒரே தேவன் மூவராக வெளிப்பட்டிருக்கிறார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்று மூன்று வழி களில் வெளிப்படுகிறார். இயேசு கிறிஸ்து தேவனாக இருக்கிறபடியால் யோவா 1:1 20:28 பிலி 2:6 அவர் தொழுது கொள்ள பாத்திரராகவும் இருக்கிறார் (வெளி 5:1-14). அவ்விதமாகவே பிதாவும், ஆவியான வரும்.

பிதா தேவனாக இருக்கிறார் (1 கொரி 8:6 கலா 1:1 எபே 4:6 1 பேது 1:2 யோவா 6:27). தேவன் என்று வேதத்தில் எங்கெல்லாம் வருகிறதோ அது அதிகபட்ச மாக பிதாவை குறிக்கும். இந்த தேவனுடைய தன்மை கள் பல சொல்லப்பட்டிருக்கிறது. தாமாக செயல்படு பவர் எசா 40:13 சங் 50:12 அப் 17: 25, நித்தியமானவர் சங் 90:2-4 உபா 32:40 யாக் 1:17, ஆவியாயிருக்கிறார் யோவா 4:24உபா 4:15 அப் 17:29, சர்வ வல்லவர் எசா 14:27 எங்கும் வியாபித்திருக்கிறவர் எபே 23:23-24 சங் 139:7-12 எல்லாமறிந்தவர் சங் 147:5 அன்பான தகப்பன் 1 யோவா 4:8, பரிசுத்தர் எசா 6:3-5 இரக்க முள்ளவர் (உபா 4:31; சங் 145:8)

இன்னும் அநேக விஷயங்கள் பிதாவாகிய தேவனைப் பற்றி வேதத்தில் வாசிக்கலாம்.

பரிசுத்த ஆவியானவரும் தேவன். (அப் *5:3-4)* அனனியா ஆவியானவருக்கு விரோதமாக பொய் சொன்னான் அது தேவனுக்கு விரோதமாக சொன்ன பொய் (*1* கொரி *3:16-17 6:19-20)* காரணம் ஆவியான வரும் தேவன். ஆவியானவர் தேவனுக்குரிய தன்மைகளை உடையவர் (தா *8:2,* யோவா *16:13* எபி *9:14* சங் *139:7),* தேவனைப் போல கிரியை செய்யக்கூடியவர் (அதி *1:2,* சங் *104:30),* தேவனுக்கு சமமானவராக இருக்கிறார் (மத் *28:19; 2* கொரி *13:13.* பரிசுத்த ஆவி யானவரை 'அது', 'ஆவி' என்று அஃறினைப் பொருளில் அழைக்கக்கூடாது. ஆவியானவர் ஆளுமைத்தன்மை உடையவர். ஆவியானவர் கிறிஸ் தவர்களுக்குள் அவர்களை பரிசுத்தம் பண்ணும்படி யாக வாசமாயிருக்கிறார் அப் *2:38, 5:32;* ரோம *8:9-16; 1* கொரி *3:16-17; 6:11, 19-20; 12:13* பரிசுத்த ஆவி யானவர் இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சி கொடுக்கிறவரும் நமக்காக பரிந்து பேசுகிறவருமாயிருக்கிறார் (ரோம *8:26-27).*

***பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஒன்றா யிருக்கிறார்கள், ஒருவருக்கொவர் சமமாயிருக் கிறார்கள், தேவனாயிருக்கிறார்கள்*** யோவா *10:30;*



மத் *28:19;* யோவா *15:26 1* பேது *1:2 1* கொரி *12:4-6)* பவுல் அழகாக இக்கருத்தை உணர்த்தும் வகையில் எப்போதும் இப்படி வாழ்த்துவது வழக்கம், ''கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்'' (*2* கொரி *13:14).* பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் என்கிற ஒரே தேவன் நமக்குண்டு என்று சொல்ல வேண்டும்.

## பரிசுத்த ஆவியானவரும் அற்புதங்களும்
## The Holy Spirit and Miracles

பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையினால் தேவன் அநேக அற்புதங்களை நடப்பித்திருக்கிறார். அதில் பிரதானமான நோக்கமென்னவென்றால் தேவ னுடைய வார்த்தைகளை உறுதிப்படுத்துவதற்காக (மத் *9:4-5 12:28, 29;* மாற் *2:10-11; 16:17-20;* லூக் *5:24* யோவா *21:24-25* அப் *2:32,33; 2* கொரி *12:12)* மனுஷனுக்கு தேவன் அளித்த பெரிதான இரட்சிப் பைப் பற்றி எபிரேய ஆசிரியர் எழுதும்போது, ''முதலா வது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரி டத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்ட தும், அடையாளங்களாலும், அற்புதங்களாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி

பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமா யிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து... (எபி 2:3,4) தேவனிடத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டதும், அற்புதங்களினால் அடையாளங்களினாலும் உறுதிப் படுத்தப்பட்டதுமான இரட்சிப்பின் செய்தியை கவனிக்க வேண்டும். முதல் நூற்றாண்டு காலத்தின் இறுதியில் இப்படிப்பட்ட அற்புத அடையாளங்கள் தேவனுடைய வார்த்தைகள் முற்றிலும் உறுதிப்படுத் தப்பட்டு எழுதப்பட்டபடியினாலே குறையத் தொடங்கி, இரண்டாம் நூற்றாண்டில் நின்று போனது எனலாம்.

தற்காலத்தில் கிறிஸ்தவர்களாலும், கிறிஸ்தவரல்லாத வராலும் பேசப்படுகின்ற அற்புதங்களை முதல் நூற்றாண்டு அற்புதங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மிகவும் பெலவீனமாக இருக்கிறது. தற்காலத்தில் பேசப்படுகின்ற அற்புதங்கள் மனோவசியத்தின் அடிப்படையில் செய்யப்படுகிறது. இயற்கைக்கு அப்பாற்பட்டு நடப்பதே அற்புதமாக இருக்கும். இன்னும் சில சாதாரணமாக சுகமாகக்கூடியதையே அற்புதம் என்று சொல்வாரும் உண்டு. உதாரணமாக அந்நிய பாஷையில் பேசுவது அற்புதமாக பேசப்படு கிறது. ஆனால் அது புதிய ஏற்பாட்டின்படி இல்லை, காரணம் கற்றறியாத அடுத்தவருடைய மொழியை



பேசுவதே ஆவியின் வரமாகும். (அப் 2:6,8). நவீன கால அந்நிய பாஷை பேசுவது சிறு மழலைகளின் சத்தங்கள் போல இருக்கிறது. அது ஒரு அர்த்தமுள்ள மொழியே அல்ல என்று மொழியியல் ஆய்வாளர் களும், மனோதத்துவ வல்லுனர்களும் தெரிவிக்கின்ற னர். இது ஒருவிதமான கலையைப் போல செய்யப் படுகிறது. மனம் விரக்தியடைந்த, சோர்வுற்றவர்கள் இதில் சிக்கிக் கொள்கின்றனர். அநேக வழிகளில் ஆராய்ந்து பார்த்தாலும் நவீன கால அற்புதம் செய் வதாக சொல்லுகிற ஒவ்வொருவரையும் கூர்ந்து பார்த் தால் நம்மால் வேத வசனத்தின்படி ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இன்னும் பல போலியான மனிதர்கள் மக்களால் அடையாளம் காணப்பட்டு ஒதுக்கப்பட்ட தும் உண்டு. இன்றைய நிலையில் மரித்தோரை உயி ரோடே எழுப்பவோ, இயற்கைக்கு அப்பாற்பட்டு அற்புதங்களை செய்வதோ வசனத்தின்படி நம்மால் பார்க்க முடிவதில்லை.

எல்லா காலங்களில் முடிவில்லாமல் அற்புதங்கள் நிகழ்த்தும்படியாக தேவன் திட்டமிடவில்லை. அற்புதங்கள் வசனங்களை உறுதிப்படுத்துவதற்காக வும் இரட்சிப்பின் திட்டத்தை மனிதனுக்கு எடுத்துக் காண்பிப்பதற்காகவும் செயல்பட்டது. என்றைக்கும் அற்புதங்களையே பார்த்து விசுவாசிக்க வேண்டுமென்பது தேவனுடைய திட்டமல்ல. நாம்

தரித்து நடவாமல், விசுவாசித்து நடக்கும்படி எதிர்பார்க்கப்படுகிறோம் (2 கொரி 5:7) வேத வசனங்கள் அற்புதங்களாலும் அடையாளங்களாலும் உறுதிப்படுத்தப்பட்டு சபையானது முழு வளர்ச்சியாக புருஷத்துவத்தை பெற்ற பிறகு வசனங்களை கேட்டு அதை விசுவாசிக்கும் வல்லமையை பெறுகின்றனர். சிறு குழந்தையைப் போல அற்புதங்களை பார்த்து விசுவாசிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. அதனால் தேவன் ஒரு குறிப்பிட்ட காலத்தில் 'நிறைவானது வரும்போது' (1 கொரி 13:8-13 ) குறைவானது ஒழிந்துபோம். குறைவானது என்றால் அந்நிய பாஷை, தீர்க்கதரிசனங்களின் வழியாக குறைவாக வெளிப்படுத்தப்பட்ட வேத வசனங்கள் நிறைவானதாக வந்துவிட்ட பிறகு குறைவான அந்த செயல்கள் நின்று விடுகிறது. (எபேசி 4:11-16) இன்று ஒருவர் அற்புதங்கள் வேண்டுமென்றால் சபையை குழந்தைப் பருவத்திற்கு கொண்டு செல்வது போல இருக்கும். (மத் 12:38, 39, 1 கொரி 13:11) அற்புதங்கள் நிகழ்ந்த காலத்திலேயே பவுல் அதை பெரிதாக பேசாமல் அன்பே எல்லாவற்றிலும் பெரியது என்று எழுதினார் (1 கொரி 12:29-13:13). அதனால் விசுவாசம், நம்பிக்கை, அன்பு முக்கியமானது ஆனால் இவை களில் அன்பே பெரியது (1 கொரி 13:13 மத் 22:36-40).



## பரிசுத்த வார்த்தைகள்
## Sacred Scriptures

பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்பது சேர்ந்து முழு வேதாகமமாக கிறிஸ்தவர்களுக்கு அதிகாரப்பூர்வ மான தேவனுடைய வார்த்தைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆவிக்குரிய கேள்விகள் அனைத்திற்கும் எல்லாவித பதில்களையும் உள்ளடக்கியது வேதம். வேத புத்தகமானது தேவனுடைய சித்தம் இன்னதென்றும், மனிதனுக்காக தேவனுடைய திட்டம் என்னவென்றும் வெளிப்படுத்துகிறது. (சங் 119:105). பரிசுத்த ஆவியின் ஏவுதலால் பரிசுத்த மனுஷர்கள் வேதத்தை எழுதினார்கள். ஆகையால் வேத வசனங்கள் ஜீவனுள்ளதாயும், ஆவியானவரின் வழி நடத்து தலாயும் நித்திய ஜீவனை அளிப்பதாயும் இருக்கிற (எபி 4:12) வேத வசனங்களின் துவக்கம் பிதாவாகிய தேவன். வேத வசனங்கள் எழுத்தாளரின் யோசனை களோ, சிந்தனைகளோ அல்ல (2 பேது 1:20, 21). பவுலின் எழுத்துப்படி, ''வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனு டைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியை யிஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி யாக, அவைகள் உபதேசத்துக்கும் கடிந்து கொள்ளு தலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்

கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (11 தீமோ 3:16, 17) மற்றெந்த புத்தகங்களையும் வாசித்தால் நன்மையாகவும், நஷ்டமாகவும் மாறலாம். ஆனால் வேதத்தை வாசிக்கும்போது அது எல்லா மனுஷனுக் கும் இரட்சிப்பாக முடியும். (யாக் 1:21 2 தீமோ 3:15; 1 பேது 1:22-25 யோவா 20:30-31)

வேத புத்தகம் 66 வித்தியாசமான சிறு புத்தகங்கள் அடங்கிய ஒரு நூலகம் போன்றது. 40 எழுத்தர்கள் சுமார் 1500 ஆண்டுக்குள்ளாக எழுதப்பட்டது. வேத புத்தகம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. வேதாகம காலத்தை மூன்று பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். முறையே

1. பிதாக்களின் காலம்
2. மோசேயின் காலம்
3. கிறிஸ்துவின் காலம்

பொதுவாக பழைய ஏற்பாடானது மோசேயின் காலத்தில் எழுதப்பட்டது (நம்முடைய காலப் பிரிவின்படி) அதில் இஸ்ரவேலர்கள் தேவனை தொழுது கொள்வதும், அவர்கள் எப்படி வாழ்வது என்றும் எழுதப்பட்டுள்ளது. மேலும் வரலாறு, கவிதைப் பாடல்கள், ஆராதனை, ஞானப் பாடல்கள், தீர்க்கதரிசனங்கள் இன்னும் பல.



பழைய ஏற்பாடு தேவனுடைய சித்தத்தையும் வழிநடத்தலையும் வெளிப்படுத்துகிறது (2 தீமோ 3:16; 2 பேது 1:21; யோ 10:35) ஆனால் அவைகள் இன்றைக்கு ஒரு மனிதன் கீழ்படிவதற்கு அவசியமில்லை. காரணம் அவைகள் இஸ்ரவேலருக்கு மோசேயின் காலத்தில் கொடுக்கப்பட்டது (உபா 5:1-2; எசே 20:10-12) புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவை கவனிக்க வேண்டும் (மத் 5:7; கொலோ 2:14; எபே 2:15; ரோம 6:14; 7:4; 10:4) பழைய ஏற்பாடு ஒரு ஆயத்த ஏற்பாடாக கிறிஸ்தவர்களுக்கு தெளிவாக தோன்றுகிறது (கலா 3:23-26; எபி 7:12; 8:1-13; 10:1-10; கொலோ 2:14) உதாரணமாக, பழைய ஏற்பாட்டில் பாவத்திற்கு மிருக பலி செலுத்தினார்கள், புதிய ஏற்பாட்டில் இயேசுவே பலியானார்.

பழைய ஏற்பாட்டின் கீழ் கிறிஸ்தவர்கள் வாழாவிட்டாலும் அதை வாசிக்கவும் உணர்வடையவும் அவசியமாயிருக்கிறது. ஆரம்ப சபையில் பழைய ஏற்பாடு பிரசங்கிக்கப்பட்டும் வந்தது. (அப் 2:14-36 3:31-35; 17:2-3, 11; 18:28; 28:23)

பழைய ஏற்பாடு கிறிஸ்தவர்கள் வாசிக்க வேண்டியது என்று பவுல் கூறுகின்றார் (1 கொரி 10:11 ரோம 15:4) பழைய ஏற்பாடு பலருடைய வாழ்க்கையை குணாதிசயங்களை வெளிப்படுத்தும்,

முக்கியமான சரித்திர சான்றுகளையும் பதிவு செய்து வைத்துள்ளது. இது புதிய ஏற்பாட்டுக்குள் விளக்கப்பட்டும், இயேசு கிறிஸ்துவைக் குறித்து காட்சி கொடுக்கிறது.

தேவனைக் குறித்த மாபெரும் சத்தியங்களையும் மனிதன் எப்படியான ஒழுக்கமுள்ள வாழ்க்கை வாழ முடியும் என்பதையும் பழைய ஏற்பாடு புத்தகங்களை வாசிப்பதன் மூலம் கற்றுக் கொள்ளலாம். ஆனால் அதில் உள்ள மதக்கடமைகள் இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்டபடியால் நாம் அவற்றை பின்பற்றக்கூடாது (கலா 5:4)

புதிய ஏற்பாடு மிக முக்கியக் காரணம் அதில் கிறிஸ்துவின் வரலாறும் ஆதி சபையின் துவக்கமும் எழுதப்பட்டிருக்கிறது. தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலம் வெளிப்படுத்திய சத்தியங்கள் அர்த்தங்களும் விளக்கமும் அடங்கியது புதிய ஏற்பாடு வரலாற்று ரீதியாக புதிய ஏற்பாடு சம்பவங்கள் தனித்தன்மை வாய்ந்தது. ஏனென்றால், அவையெல்லாம் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, அற்புதங்கள், மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலை கண்ட மனிதர்களின் நற்செய்தியாக எழுதியவை.

விசேஷமாக தெரிந்து கொள்ளப்பட்ட இயேசுவின் அப்போஸ்தலர்களால் புதிய ஏற்பாட்டின் மற்ற



புத்தகங்கள் எழுதப்பட்டன.

ஒருவர் வேதத்தை வாசிக்க விரும்பினால் முதலாவது இயேசுவின் சுவிசேஷத்தையும், அப்போஸ்தலர்களின் நடப்புகளையும் நிருபங்களயும் வாசித்துவிட்டு, பின்னர் பழைய ஏற்பாடு புத்தகங்கள் வாசிப்பது நலமாக இருக்கும்.

## வேதாகமத்தில் உள்ள புத்தகங்களின் கருத்து சுருக்கம்

### Summary of the Bible Books

### *பழைய ஏற்பாட்டு புத்தகங்கள்*

### Old Statement Scriptures

**ஆதியாகமம்** : உலகத்தில் துவக்கம், மனிதனின் துவக்கம், தேவன் மனிதனோடு ஏற்படுத்திய உடன்படிக்கைகளை குறித்து எழுதியிருக்கிறது.

**யாத்திரையாகமம்** : எகிப்தின் அடிமைதனத்திலிருந்து இஸ்ரவேலின் விடுதலை.

**லேவியராகமம்** : இஸ்ரவேலுக்கு கொடுக்கப்பட்ட உபகட்டளைகளின் தொகுப்பு.

**எண்ணாகமம்** : இஸ்ரவேலின் வனாந்திர

யாத்திரை யின் விவரங்கள்.

**உபாகமம்** ः இஸ்ரவேலுக்கும் தேவனுக்குமிடையே உள்ள நியாயப்பிரமான உடன்படிக்கை.

**யோசுவா** ः கானானை ஜெயித்து வாக்குதத்தத்தின் தேசத்தை பங்கிட்டு கொள்ளுதல்.

***நியாயாதிபதிகள்*** ः இஸ்ரவேலை வழிநடத்திய நியாயதிபதிகளின் வரலாறு

ரூத் ः தாவீது ராஜாவின் தந்தையின் பாட்டியை பற்றிய சரித்திரம்.

***1 சாமுவேல்*** ः சாமுவேல், சவுல் மற்றும் தாவீதின் வாழ்க்கை வரலாறு

***2 சாமுவேல்*** ः தாவீது ராஜாவின் விவரமான வரலாறு

***1 இராஜாக்கள்*** ः சாலொமோன் மற்றும் பிற ராஜாக்களின் வாழ்க்கை வரலாறு. எலியா தீர்க்கதரிசியை பற்றிய விவரம்.

***2 இராஜாக்கள்*** ः எலியா மற்றும் எலிசா தீர்க்கதரிசிகள். இஸ்ரவேல் மற்றும் யூத ராஜ்ஜியங்களின் பாபிலோன் சிறை பிடிப்பு வரை வரலாறு.



***1 நாளாகமம்*** ः தாவீதின் ராஜ்ஜிய பாரத்தின் விவரங்கள்.

***2 நாளாகமம்*** ः சாலொமோன் ராஜாவின் ஆட்சியும் எருசலேமின் அழிவும்.

***எஸ்றா*** ः பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்து எஸ்றாவின் தலைமையில் தேவாலயத்தைக் கட்டுதல்.

**நெகேமியா** ः எருசலேமின் அலங்கத்தை நெகேமியாவின் தலைமையில் கட்டுதல்.

***எஸ்தர்*** ः பெர்சிய ராஜாவின் காலத்தில் எஸ்தர் ராஜாத்தியின் மூலமாக யூதர்கள் ரட்சிக்கப்படுதல்.

**யோபு** ः நீதிமானுக்கு துன்பத்தை அனுமதிப்பதின் மூலமாக வெளிப்படும் தேவனுடைய நீதி

**சங்கீதம்** ः தாவீது மற்றும் பிற சங்கீதக்காரர்களின் பாடல்களின் தொகுப்பு.

***நீதி மொழிகள்*** ः சாலொமோன் எழுதிய ஞான வார்த்தைகளின் தொகுப்பு.

***பிரசங்கி*** ः தேவ பக்தி உள்ள வாழ்க்கையின்

அர்த்தமும் நோக்கமும்.

**உன்னதப்பாட்டு** : அன்பின் காவியம்

**ஏசாயா** : மேசியாவை குறித்த தீர்க்கதரிசனமும், தேவ இராஜ்ஜியத்தின் நம்பிக்கையும்

**எரேமியா** : யூதாவின் வீழ்ச்சியையும், மீட்பையும் முன்னறிவித்த தீர்க்கதரிசனம்.

**புலம்பல்** : எருசலேமின் வீழ்ச்சியைக் குறித்து எரேமியாவின் புலம்பல்.

**எசேக்கியல்** : யூதாவின் வீழ்ச்சியும் மீட்பும் குறித்து பாபிலோனிலிருந்து தீர்க்கதரிசனம்.

**தானியேல்** : பாபிலோன் சிறையிருப்பின் காலத்தில் ஜனத்திற்கு தேவனுடைய வழிநடத்துதல்.

**ஓசியா**: தேவனுடைய அன்பும் இஸ்ரவேலின் உண்மையில்லாத் தன்மையும்.

**யோவேல்** : மனந்திரும்புதலுக்கான அழைப்பு.

**ஆமோஸ்** : இஸ்ரவேலில் சமூக நியாயத்திற்கான அழைப்பு.

**ஒபதியா** : இஸ்ரவேலுக்கு உதவி செய்யாததினால் ஏதோமியருக்கு கிடைத்த தண்டனை.



**யோனா** : நினிவே பட்டினத்திற்கு தேவன் அனுப்பிய தீர்க்கதரிசி.

**மீகா** : வீணான பாரம்பரியத்தை விட்டு உண்மையான மதத்திற்கு அழைப்பு.

**நாகூம்** : நினிவே பட்டினத்தின் மீது தேவனுடைய நியாயத் தீர்ப்பு.

**ஆபகூக்** : ஒடுக்கப்படுகிறவர்கள் மீது வெளிப்படும் தேவனுடைய நீதி.

**செப்பனியா** : யூதாவின் பாவம், மற்ற தேசங்களின் பாவம் - தேவனுடைய நியாயத் தீர்ப்பு.

**ஆகாய்** : யூதர்கள் தேவாலயத்தை திரும்பக் கட்டுதல்.

**சகரியா** : தேவாலயம் திரும்பக் கட்டப்படுதல், மேசியாவை பற்றிய நம்பிக்கை.

**மல்கியா** : இஸ்ரவேல் மனந்திரும்பும்படி போதனை.

## புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள்

New Testament Scriptures

**மத்தேயு** : இயேசு கிறிஸ்துவின் வரலாறு, இயேசு - ராஜாவாக போற்றப்படுகிறார்.

**மாற்கு** : மிகச்சிறிய சுவிசேஷம். இயேசு - ஊழியராக

போற்றப்படுகிறார்.

**லூக்கா** : இயேசு - மனித குமாரனாக போற்றப்படுகிறார்.

**யோவான்** : இயேசு தேவ குமாரனாக போற்றப்படுகிறார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் : ஆதி சபையின் வரலாறும், பேதுரு மற்றும் பவுலின் ஊழியங்களும்.

**ரோமர்** : தேவனுடைய நீதியும், மீட்பின் திட்டமும்

**1 கொரிந்தியர்** : கொரிந்து சபையின் பிரச்சினைகளும் தீர்வும்.

**2 கொரிந்தியர்** : பவுலின் அப்போஸ்தல பணியின் தன்னிலை விளக்கம்.

**கலாத்தியர்** : யூத பாரம்பரியம் இல்லாமல் விசுவாசத்தினால் கிடைக்கும் நீதி.

**எபேசியர்** : சபையும், கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நித்திய திட்டமும்.

**பிலிப்பியர்** : பவுலின் நன்றியுடன்கூடிய மகிழ்ச்சிக் கடிதம்.

**கொலோசெயர்** : கிறிஸ்துவே எல்லாவற்றிலும் முதன்மையானவர்.



**1 தெசலோனிக்கேயர்** : சபையாரின் வாழ்க்கையும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும்.

**2 தெசலோனிக்கேயர்** : கிறிஸ்துவின் வருகை வரைக்கும் விசுவாசத்தில் நிலைத்திருத்தல்.

**1 தீமோத்தேயு** : இளம் போதகருக்கு கள்ள போதகர்களை குறித்து எச்சரிக்கை.

**2 தீமோத்தேயு** : பவுல் தன்னுடைய மரணத்திற்கு முன் எழுதின கடிதம்.

**தீத்து** : இளம் போதகருக்கு வழிகாட்டும் கடிதம்.

**பிலேமோன்** : மனம் மாறிய அடிமையை ஏற்றுக் கொள்ளும்படி கிறிஸ்தவ எஜமானனுக்கு கடிதம்.

**எபிரெயர்** : இயேசு கிறிஸ்துவே மகா பிரதான ஆசாரியர். பழைய ஏற்பாட்டை விட புதிய ஏற்பாட்டின் மேன்மை.

**யாக்கோபு** : கிறிஸ்தவ வாழக்கையின் பின்பற்ற வேண்டிய நடைமுறை கட்டளைகள்

**1 பேதுரு** : துன்பத்தின் மத்தியிலும் பரிசுத்த வாழ்க்கை.

**2 பேதுரு** : சபையில் கள்ள போதகரால் வரும் பிரச்சினையும், தீர்வும்.

***1* யோவான்** **:** கிறிஸ்தவ வாழ்வின் உத்தரவாதம்.

***2* யோவான்** **:** கள்ள போதகத்தை எதிர்த்து கிறிஸ்துவின் போதகத்தில் நிலைத்திருத்தல்.

***3* யோவான்** **:** தனிப்பட்ட நன்றிக் கடிதம்.

**யூதா** **:** கள்ள போதகர்களை பற்றிய எச்சரிக்கை.

**வெளிப்படுத்தின விசேஷம்** **:** ரோம அரசாங்கத்தின் வீழ்ச்சியும், துன்பத்தில் சபையின் வெற்றியும்,



உருவக மொழியில் விளக்கப்பட்டிருக்கிறது.

## முடிவுரை
## Conclusion

கிறிஸ்தவம் என்றால் என்ன? பலவிதமான தலைப்புகளை விவாதித்த பிறகு, தெளிவான பதில் கிடைத்திருக்கும் என நம்புகிறேன். கிறிஸ்வதம் என்றால், நாசரேயரான இயேசுவே, தேவனுடைய குமாரன் கிறிஸ்து, அவரே ஆண்டவராயிருக்கிறார். அன்பின் உச்சக்கட்ட வெளிப்பாடும், தேவனுடைய சித்தமும் அவருக்குள் காணப்படுகிறது. கிறிஸ்தவனாக வாழுவது என்றால், கிறிஸ்துவை அறிந்து, அவரைப் போல மாறி, அவர் உங்களுக்குள் உருவாகி உங்களுக்குள் அவர் வாழ்வதுதான் (பிலிப் *3:10*, கலா *2:20, 4:19*, எபே *4:13)*

தேவனுடைய குமாரனை விசுவாசித்து வாழ்பவன் கிறிஸ்தவன் (கலா *2:29)* கிறிஸ்துவை அறிந்து கொள்வது மிக முக்கியம். ஏனென்றால் இவ்வுலகில் மற்ற எல்லாம் குப்பையாக இருக்கிறது (பிலி *1:21, 3:7-9)* ஏனென்றால் மனித வர்க்கத்தின் இரட்சிப்பிற்கு ஒரே நம்பிக்கை இயேசு கிறிஸ்துவே (அப்.*4:12*, யோவா *14:6)*

இயேசு கிறிஸ்துவின் மேன்மையை மிக அழகாக எபிரேயருக்கு எழுதின நிருபத்தில் விவரிக்கிறார்.

பூர்வ காலங்களில் பங்குபங்காகவும் கைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்,

இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய்

நமக்குத் திருவுளம் பற்றினார்ஃ இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.

இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டு பண்ணி, உன்னதத்திலுள்ள கத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார். (எபிரெ *1ஃ1-3*). அதுபோல அப்போஸ்தலனாகிய பவுலும் தன்னுடைய நிருபத்திலே இயேசுவை பற்றி மிக மேன்மையாக எழுதுகிறார்.

அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் மந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருடிக்கப்பட்டது; பரலோகத்தில் உள்ளவைகளும் பூலோகத்திலுல் உள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. அவரே சபையாகிய சரீரத்துக்கத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.

சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும். அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி,



பூலோசத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாயத் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. (கொலோ *1ஃ15-20*).

‘**Dia**’ (டையா) என்ற கிரேக்க வார்த்தைக்கு ‘மூலமாய்’ என்று அர்த்தம். அநேக இடங்களில் இரண்டு பொருள்கள், நோக்கத்திற்கு இடையே மத்திய வார்த்தையாக பயன்படுத்தப்படுகிறது. பின்வரும் வசனப் பகுதிகளில், கிருபை, சத்தியம், இரட்சிப்பு, ஜீவன், பாவ மன்னிப்பு, சமாதானம், நீதிமானாகப்படுதல், நீதி, மரணத்தின் மேல் வெற்றி மற்றும் ஒப்புரவாகுதல் எல்லாம் எப்படி இயேசு கிறிஸ்துவின் ‘மூலமாய்’ வருகிறது. (யோவா *1ஃ17, 3ஃ17; 10ஃ9,14ஃ6*, அப் *10ஃ43, 13ஃ18, 15ஃ11*, ரோம *1ஃ5, 5ஃ1, 2, 9, 17, 18, 19, 21; 8ஃ37, 1* கொரி *15ஃ57, 2* கொரி *3ஃ4, 5ஃ18;* எபே *1ஃ5, 2ஃ18*, பிலிப் *1ஃ11*, கொலோ *1ஃ29, 1* தெச *5ஃ9* எபி *7ஃ25, 1* யோவா *4ஃ9*)

இயேசு கிறிஸ்துவிற்கு அநேக பெயர்கள், அவரை விவரிக்கும் நாமங்கள் வேதத்தில் சொல்லப்படுகிறது. அவைகள் ஃ

கிறிஸ்து (மத். *16ஃ16*)
தேவன் (யோவா *1ஃ1, 20ஃ28*)
தேவனுடைய குமாரன் (யோவா *3ஃ16*)
இம்மானுவேல் (மத். *1ஃ23*)
தேவ ஆட்டுக்குட்டி (யோவா *1ஃ29*)
உலகத்தின் ஒளி (யோவா *9ஃ5*)
இரட்சகர் (லூக் *2ஃ11*, யோவா *4ஃ42*)
வார்த்தை (யோவா *1ஃ1, 14*)
அல்பா ஒமேகா (வெளி *21ஃ6*)

நல்ல மேய்ப்பன் (யோவா 10:11)
யூதர்களின் ராஜா (மத். 27:37)
ஆண்டவர் (அப் 2:36)
ராஜாதி ராஜா (வெளி 19:16)
கர்த்தாதி கர்த்தர் (வெளி 19:16)
மகிமையின் கர்த்தர் (1 கொரி 2:8)
தேவனுடைய பரிசுத்தர் (மாற்கு 1:24)
மூலைக்கல் (எபே 2:20)
அஸ்திவாரம் (1 கொரி 3:11)
பிரதான மேய்ப்பன் (1 பேதுரு 5:4)
நேச குமாரன் (லூக் 3:22, 9:35)

ஆகவேதான் இதை விவரிக்கிறவர்கள் இயேசுவை விசுவாசித்து அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய அழைக்கிறோம். எல்லாம் லாபம்தான் நஷ்டம் ஒன்றுமில்லை. ஒருமுறை அநேக மக்கள் இயேசுவை விட்டு பின் வாங்கிப் போனார்கள்.

அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய் விட மனதாயிருக்கிறீர்களோ என்றார். சீமோன் பேதுரு அவருக்குப் பிரதி யுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான்.

இந்த புத்தகம் எந்த நோக்கத்தோடு எழுதப்பட்டது? அப்போஸ்தலரான யோவான் எழுதிய வார்த்தைகளை வாசியுங்கள்.

இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. (யோவா 20:31)

*****